Registered at the G. P. O. as a Newspaper

32 பக்கங்கள் விலை சதம் 20

உங்களுக்குத் தேவையான எல்லாவித
சாய்ப்புச் சாமான்களுக்கும்,
சூட்கேஸ், சப்பாத்து வகைகளுக்கும்

கணேசன் ஸ்ரோர்ஸ்
78, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

தேசிய வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, ஆடி 30- ஆம் நாள். ஸபர் 9 (15-8-59) சனிக்கிழமை இதழ் 28.

# தேசிய அடிப்படையில் சமஷ்டிக் கட்சி திருத்தி அமைக்கப்படுமா?

## இன்று யாழ்ப்பாணத்தில் கூடும் காரியக் கமிட்டிக் கூட்டம்

### எதிர் காலப் போராட்டம் எப்படி இருக்கும்?

— நமது சிறப்பு நிருபர் —

இன்று யாழ்ப்பாணத்திலே கூடும் சமஷ்டிக் கட்சி காரியக்கமிட்டி கூட்டத்தில் மூன்று முக்கிய விஷயங்கள் ஆலோசனைக்கு வர இருக்கின்றன.

1. வருகிற டிசம்பர் மாதத்திலே யாழ்ப்பாணத்தில், கட்சியின் பத்தாவது ஆண்டுவிழாவை நடத்துவது.
2. வவனியா இடைத் தேர்தல்.
3. கட்சியின் எதிர்கால வேலைத் திட்டம்.


சென்ற அவசர நெருக்கடி காலத்துக்குப் பின், காரியக் கமிட்டி கூட்டம் நடப்பது இது இரண்டாவது தடவையாகும். இதில் முக்கிய விஷயங்கள் ஆராயப்பட இருப்பதால், மட்டக்களப்பு, திருக்கோணமலை, கொழும்பு, மன்னார், வவனியா முதலிய பல இடங்களிலிருந்தும் காரியக்கமிட்டி அங்கத்தவர்கள் 80 பேரில் பெரும்பாலோரும் வருவரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே ஞாயிறு 'ஒப்சேர்வர்' பத்திரிகையில் இக்கூட்டம் பற்றி ஒரு செய்தி வெளியாயிற்று. மொழிச்சட்டத்தை ஆட்சேபித்து, ஹேக்கிலுள்ள சர்வதேச நீதிமன்றத்துக்கு சமஷ்டிக் கட்சி முறையிடலாமென்றும், இதுபற்றி காரியக்கமிட்டி கூட்டத்தில் ஆலோசிக்கப் படலாமென்றும் வெளியான அச்செய்தியை, கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. ஆதாரமற்றதென்று மறுத்து விட்டார். அவ்வித யோசனையே இல்லை என்றார். ஆனால் அப்பத்திரிகை, சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்ததையே தாங்கள் வெளியிட்டதாக சமாதானம் கூறியுள்ளது. இவ்விஷயமாக சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்த ஒருவரை விசாரித்ததில், தெரிய வந்ததாவது:

"சர்வதேச நீதி மன்றத்துக்கு முறையிடுவதில் தவறு ஒன்றுமில்லை. நாங்கள் ஏற்கெனவே, இதுபற்றி இலங்கை சுப்ரீம் கோர்ட்டிலும், கவர்னர் ஜெனரலிடமும் முறையிட்டிருக்கலாம். ஆனால் எங்கள் உரிமைகளை போராட்ட மூலமே பெற முடியுமென்று நம்புவதாலேயே அவ்விதம் செய்யவில்லை."

(15ஆம் பக்கம் பார்க்க)

## தன்னிகரில்லா நேரு



இந்தியாவின் சுதந்திரத்தைச் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாகப் பேணிக்காத்து வரும் பாரதப் பிரதமர்

## யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறச் செல்வோரின் சிரமம்

### கண்டனத்துக்குள்ளாகிவரும் நிர்வாகம்

— நமது நிருபர் —

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தின்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியின் சீர்கேடுகள் அங்கத்தினரின் கண்டனத்துக்குள்ளாயின. இக்கூட்டம் சென்ற திங்கட்கிழமை நடைபெற்றது. சிகிச்சைபெறச் செல்லும் நோயாளர் பலர் முறையாகக் கவனிக்கப்படுவதில்லை யென்றும் பிறரின் சிபார்சின் பேரிலேயே அவர்கள் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர் என்றும், இவற்றையெல்லாம் சுகாதார அமைச்சர் நேரில் வந்து பார்வையிட வேண்டுமெனவும் உதவிமேயர் திரு. எஸ். இராஜரத்தினம் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்குக் கண் வைத்திய நிபுணர் ஒருவரும் அனுபவம் மிக்க பெண் டக்டர் ஒருவரும் அவசியமென்பதை திரு. அபூசாலி எடுத்துரைத்தார்.

கண்டனக் கட்டம் மாறி அங்கத்தினரின் பேச்சு வார்த்தைகள் குளிர்மையான துறைகளிற் சென்று கொண்டிருந்தன. யாழ்ப்பாணத்தில் நுண்கலைக் கல்லூரி நிறுவுவது அவசியமென அரசாங்கம் உணர்ந்திருந்தும் இன்னும் அது நிறைவேற்றப்படவில்லையென திரு. அ. விசுவநாதன் கூறினார். இவர் தொடர்ந்து பேசியதாவது: சகல வகுப்பினரும் ஒரேமேடையிலிருந்து தங்கள் கலைத் திறமையை வெளிக்காட்டக் கூடிய கைப்பணிக் கலை விழா ஒன்றினை அவசியம் ஏற்படுத்த வேண்டும்.

அங்கத்தினர்களின் பிரேரணைகள் யாவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாநகரசபைக் கூட்டங்கள் இந்நாட்களில் சுமுகமான சூழ்நிலையில் நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது. மேயர் திரு. தங்கராசா துரையப்பாவின் தாராள மனப்பான்மையும், அவசிய தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றி வைப்பதில் தீவிரமாக உழைத்து வருவதும் மக்கள் அறிந்த தொன்றே.

(9 ஆம் பக்கம் பார்க்க)

இந்திய பிரயாண
சிறப்பு மலர்
இந்தப் பிரதிக்குள்ளாக
அடங்கியுள்ளது

## வவனியா தொகுதி இடைத் தேர்தல் நெருங்கி வருகிறது

### திரு. சுந்தரலிங்கம் போட்டியிடார்

### சமஷ்டிக் கட்சி அபேட்சகர் யார்?

### வேறு கட்சிகள் போட்டியிடுமா?

— நமது அரசியல் நிருபர் —

வருகிற செப்டம்பர் மாதம் 6-ந் திகதியுடன், வவனியாத் தொகுதி பிரதிநிதி திரு. ஸி. சுந்தரலிங்கம் மூன்று மாதங்கள் பிரதிநிதிகள் சபைக்கு சேர்ந்தாற்போல் செல்லாமல், தமது பிரதிநிதிப்பதவியை இழக்கின்றார். ஆகவே சில வாரங்களில் அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெற இருக்கின்றது.

இந்த இடைத் தேர்தலில் சுந்தரலிங்கத்தார், சென்ற முறை செய்தது போல் போட்டியிடப்போவதில்லை என அறிகிறேன். சென்ற தடவை அரசாங்கத்தின் போக்கை ஆட்சேபித்தே, இடைத் தேர்தலில் போட்டியிட்டு வென்றார். இம்முறை அவர் மீண்டும் தேர்தலுக்கு நின்றால் அநேகமாக வெல்லக்கூடும். அத் தொகுதி மக்களின் நம்பிக்கையை அவர் இழக்கவில்லை. சென்ற கலகத்தின்போது, வவனியாவில் எவ்வித சேதங்களுமின்றி மக்கள் தப்பியதற்கு அவரது முயற்சியே காரணமென்பதையும், பிரதிநிதிகள் சபையில் அவர் ஒருவர் தனிக்கட்சியாக இருந்து வாய்ப் போர் நடத்துவதையும் மக்கள் மறக்கவில்லை.

பல கட்சி தமிழ்த்தலைவர்களையும் ஒன்று சேர்த்து ஓர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்த அவர் சமீபத்தில் செய்த முயற்சி பலிக்கவில்லை. இதுபற்றி விசாரித்ததில் தலைமைப்பதவி

(9 ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள் BRIDGESTONE TYRES

*Dirtributors :* TUCKERS AUTODROME

ஏக விநியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன் : 496 தந்தி : "ஓட்டோஸ்"

## வரி விளம்பரம்

### அறிவித்தல்

புற்று நோயைத் தமிழ் மருந்தால் தடையின்றி மாற்றலாம். உலகினிலே கொடிய ரோகம் புற்று நோய் என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. இந்நோய் சத்திரசிகிச்சை, ஒளி சிகிச்சை மூலமே குணப்படலாமே தவிர தமிழ் மருந்தினலல்ல என்ற அபிப்பிராயம் இனி நிலவ இடமில்லை. மீட்க முடியாதெனக் கைவிடப்பட்ட அநேகர் **யோகீஸ்வர ரசம்** என்ற பெயருடைய தமிழ்மருந்தினல் குணமடைந்துள்ளனர். இம்மருந்திற்கு அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. புற்று நோயைப் பற்றி என்னுடன் ஆலோசியுங்கள்.

**பொ. செல்லையா**
ஆயுள்வேத வைத்தியர்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

தரத்தில் சிறந்தது - **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

அதிக நுரை தந்து உடைகளை விரைவில் வெண்மையாக்குவது **வீனஸ் சோப்.** வீனஸ் சோப் தொழிற்சாலை, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

---

உங்களுக்குத் தேவையான எல்லாவித சாய்ப்புச் சாமான்களுக்கும் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

எல்லாவித பலசரக்குச் சாமான்களுக்கும், குழந்தைப் பால் உணவுகளுக்கும் ஞாபகமிருக்கட்டும் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

---

உங்களுக்குச் சில்லறையாகவும், மொத்தமாகவும் சாய்ப்புச் சாமான்களோ அல்லது பல சரக்குச் சாமான்களோ வேண்டுமானல் **M. A. டோசாஜி அன் கோ.,** ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

---

## குகன் அச்சகம்
தெல்லிப்பழை.

8 - 7 - 59 இல்
ஆரம்பிக்கப்பட்டது.

சகல விதமான அச்சுவேலைகளும் சிறந்த முறையில் குறிக்கப்பட்ட தினத்தில் செய்து கொடுக்கப்படும்.

பூண்டுலோயாவிலிருந்து வெளிவந்த
"வெற்றிமணி"
ஆவணி தொடக்கம் எங்கள் அச்சகத்திலிருந்து வெளிவரும்.

தனிப்பிரதி: 20 சதம்
வருட சந்தா: ரூபா 2-50

---

### அறிவித்தல்

தற்பொழுது எல்லோரையும் ஆதரிப்பதற்காக மாதாந்தம் ரூபா 5-, 10-, 15-, 20- முதலிய கட்டணங்களை ஏற்றுக் கொள்கிறோம். ஊழியர்கள் விண்ணப்பிக்கவும்.

**ஸ்ரீ லங்கா**
**கஷ்டநிவாரண சங்கம்**
ஆபரண மாளிகை பில்டிங்
76/3,78/1,கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

---

JAFFNA SCHOOL OF MOTORING AND MOTOR SALES

**யாழ்ப்பாணம்**
**மோட்டரிங் & சேல்ஸ்**

**மானிப்பாய் வீதி,**
**யாழ்ப்பாணம்.**


## அகில இலங்கைத் தமிழ்ச்சங்கம்

அகில இலங்கைத் தமிழ்ச் சங்கக் காரியதரிசி திரு. சி. சின்னத்தம்பி எழுதுவதாவது:

தமிழ்ப் பெரியார்களின் நினைவுவிழாக்களைக் கொண்டாடுவதும், இப்பொழுது தமிழ்ப்பணியாற்றும் பெரியார்களைக்கௌரவிப்பதும், அவர்கள் தமிழ் உலகுக்குத்தந்துள்ள நூல்களைப் பாதுகாப்பதுமே நோக்கமாகக் கொண்டு இச்சங்கம் நிறுவப்பட்டுள்ளது. தமிழ் வளர்ச்சிக்கான வேறு துறைகளிலும் இச் சங்கம் பணியாற்றும்.

காலஞ்சென்ற வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ சீ. கணேசையரின் நினைவு விழாவை 8–11-59 இல் கொண்டாடச் சங்கம் தீர்மானித்துள்ளது. அன்று ஒரு நினைவு இதழை வெளியிடுவதுடன், பேச்சுப்போட்டியும் நடைபெறும். விபரங்களுக்கு: 6/3 பெர்ணண்டோ ரோட், வெள்ளவத்தை என்ற விலாசத்துக்கு எழுதுக.

---

## சென். மேரீஸ் இளம் விவசாயிகளின் சாதனை

திருக்கோணமலையில் நடைபெற்ற இளம் விவசாயிகள் மகாநாட்டிலும் பொருட்காட்சியிலும் சென். மேரீஸ். இளம் விவசாயிகள் சங்கம்முதல் இடம் பெற்றது.

இம்மாநாடு இடவசதியுள்ள ஓர் இடத்தில் நடைபெற்றிருந்தால் பொது மக்களுக்குச் சௌகரியமாக இருந்திருக்கும். கதம்ப நிகழ்ச்சிகளைப் பார்ப்பதே கஷ்டமாகவிருந்தது.

திருக்கோணமலைப் பிரதிநிதி திரு. ந. இ. இராஜவரோதயம் பேசும்போது, இளம் பெண்கள் கமக்கார வாலிபர்களைத் திருமணம் செய்துகொள்ள முன் வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்

காட்சிக்கு வைக்கும்பொருள்கள் தாமே செய்ததாக இருத்தல் வேண்டுமெனவும் அவற்றை வேறிடத்தில் பெற்றுக் காட்சிக்கு வைப்பது நல்லதல்லவெனவும் அவர் குறிப்பிட்டார்.

(ந. நி.)

---

கிழக்குத் தபால் :: நமது நிருபர்

# ஆண்மை தரும் கல்வியே மாணவர்களுக்கு வேண்டியது

## மட்டக்களப்பிற் பரிசளிப்பு விழாக்கள்

மட்டக்களப்பு, ஒக 10.

அகில இலங்கைத் தமிழாசிரிய சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இவ்வார இறுதியில் முதன் முறையாக இங்கு நடைபெற்றது. ஆசிரியமணி கே. எல். இராசேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சங்கப் பொருளாளர் திரு. வி. சுப்பையாவுக்கும், திரு. எ. மு. கனகசபைக்கும் ஆசிரியமணிப்பட்டம் வழங்கப்பட்டது.

காரியதரிசியின் நிர்வாக அறிக்கையின் மீது காரசாரமான விவாதம் நடந்தபின்பே சபை அதனை அங்கீகரித்தது. ஆசிரியர்களின் நன்மை கருதிச் சமர்ப்பிக்கப்பட்ட 43 பிரேரணைகளில் பெரும்பான்மையானவை நிறைவேறின.

### பரிசளிப்பு விழாக்கள்

இவ்வாரத்தில் ஆனைப்பந்தி மகளிர் உயர்நிலைப் பள்ளி, அரசடி மெ. மி. பாடசாலை, சிவானந்த வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் பரிசளிப்பு விழாக்கள் நடைபெற்றன. ஆனைப்பந்தி மகளிர் கல்லூரியில் தலைமை வகித்துப் பேசிய சுவாமி பிரேமாத்மானந்தா குருகுலக் கல்வியைப் போற்றியதுடன், ஆண்மை தரும் கல்வியே அளிக்கப்பட வேண்டும் என்றும், மாணவிகளைச் சிறந்த குடும்பத் தலைவிகளாக்குதற்குரிய நற் பயிற்சி கொடுக்க வேண்டும் என்றும் கூறினர்.

மற்றிருவிழாக்களுக்கும் அஸைஸ் கமிஷனர் திரு. எச். டபிள்யு. தம்பையா தலைமை வகித்தார்.

சிவானந்தவித்தியாலய அதிபர் திரு. க. கணபதிப்பிள்ளை மாணவர்களுக்கு, வாழ்க்கையைப் பற்றியுள்ள போலிக்கொள்கைகளைக் கண்டித்ததுடன், விஞ்ஞானக்கல்வியின் அவசியத்தையும் வற்புறுத்தினர்.

### மண்டூர் கோயில்தகராறு

பழம் பெருந்தலமாகிய மண்டூர் கந்தசாமி கோவில் நிர்வாகிகளுக்கும், அர்ச்சகரான கப்புவனுக்குமிடையில் ஏற்பட்ட தகராறு பெருஞ்சிக்கலான நிலையைஅடைந்துள்ளது. விரைவில் கொடியேற்றம் ஆரம்பிக்கவிருப்பதால் இத்தகராறுகளைச் சமரசமாகத் தீர்க்குமாறு மாவட்ட அதிபரை அணுகியுள்ளார்கள்.

கோயில் நிர்வாகத்திலேற்பட்ட சிக்கலைத்தீர்க்க நியமிக்கப்பட்ட கமிஷன் வெற்றி பெருமையால் இப்போது கோர்ட்டில் வழக்கு நடப்பது குறிப்பிடற்குரியது.

### உன்னிச்சைக்குளம்

1957-ம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட பெருவெள்ளத்தால் உடைக்கப்பட்ட உன்னிச்சைக் கட்டுவேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இவ்வாண்டு பெய்யும் மழையையும், கட்டின் வலிமையையும் பொறுத்தே 1960–ம் ஆண்டில் காலபோகச் செய்கைக்கு நீர் வழங்குதல் பற்றி முடிவு செய்யப்படும். இக்குளத்தைப் புனருத்தாரணம் செய்யுமாறு அரசாங்கத்தைவற்புறுத்தி உன்னிச்சை விவசாயிகள் சங்கம் எடுத்த முயற்சிகள் குறிப்பிடற்குரியன.

## வவனியாவில் மலைநாட்டுத் தமிழர் குடியேற்றம்

மலைநாடுகளில் வசிக்கும் இந்தியக் குடும்பங்கள் பல வவனியா மாவட்டத்தில் வந்து குடியேறுகின்றன. காடாக இருந்த பகுதிகள் பல திருத்தமடைகின்றன. இங்கு இந்தியர் குடியேறுவதால் வவனியா மாவட்டம் வருங் காலத்தில் சிறப்புறும். காணிகளின் விலையும் ஏற்றம் அடைந்து வருகிறது. இதற்குக் காரணம் இந்தியத் தமிழர் மலை நாடுகளை விட்டு இங்கு வந்து வசிப்பதேயாகும்.

இப் பாட்டாளிகளின் வருகையால் வவனியா மேலும் பொன் கொழிக்கும் நாடாக மாறி விடும்.

---

## பண்டித மணியின் பாராட்டுவிழா

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளைக்குப் பழைய மாணவர்களால் நடாத்தப்படவிருக்கும் பாராட்டு விழா சம்பந்தமான நிர்வாக சபைக் கூட்டம் சமீபத்தில் யாழ்ப்பாணம் ஆசிரியர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. விழா சம்பந்தமாக திரு. அ. பஞ்சாட்சரம் திரு. த. இராசேந்திரம், பண்டிதர் செ. துரைசிங்கம் ஆகியோர் பேசினர்.

ஆசிரியர்கள் அனைவரினதும் வசதியை முன்னிட்டு 29, 30-8-59 ஆகிய திகதிகளில் பாராட்டு விழாவை நடாத்துவதென்று முடிவு செய்யப்பட்டது.


நீங்கள்

# இந்தியாவை பார்த்துவிட்டீர்களா?

இந்தியா, புகழ்படைத்த புண்ணிய பூமி. இந்தியாவுக்குப் பிரயாணம் செய்து அங்குள்ள புண்ணிய தலங்களைத் தரிசித்தும், அழகான பட்டினங்களைக் கண்டு அகமகிழ்ந்தும் திரும்பப் பலரும் விரும்புவது இயற்கையே. அவர்களில் நீங்களும் ஒருவராக இருப்பீர்கள்.

உங்களுடைய விருப்பத்தைப் பூர்த்திசெய்து, உங்களது இந்தியாப் பிரயாணத்தைச் சௌகரியமாகவும், சந்தோஷமாகவும் கழிக்கச் சகல வசதிகளையும் செய்துகொடுக்கும் ஒரே ஸ்தாபனம்

## விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பரேஷன்

ராஜா கட்டிடம், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

என்பதை மறந்துவிடாதீர்கள்.

இதுவரை பலநூற்றுக்கணக்கான மக்களை இந்தியாப் பிரயாணத்திற்குக் கொண்டுசென்று, வெற்றிகரமாகத் திரும்பிவந்துள்ள இந்த ஸ்தாபனத்தார் மீண்டும் இவ்வருட இறுதியில், டிசம்பர் மாதம் இந்தியாவிற்கு யாத்திரீகர்களைக் கொண்டு செல்வர்.

குறைந்த செலவில், கூடிய வசதிகளுடன், குதூகலமானமுறையில்

## இந்தியாவைக் கண்டு மகிழ

உடனே இந்தப்பிரயாணத்தில் நீங்களும் சேர்ந்துகொள்ளுங்கள்.

மற்றும் விபரங்களை 25 சத முத்திரை அனுப்பித் தெரிந்துகொள்ளுங்கள்.

மாதாமாதம் பணம்கட்டும் முறையிலும் பிரயாண ஒழுங்குகள் செய்கின்றோம்.

தொலைபேசி எண்: 517. தந்தி: CENTRAVEL, யாழ்ப்பாணம்

# இந்தியாவின் இரண்டு ஐந்து வருடத் திட்டங்கள் வளர்ந்த வரலாறு

# முதல்திட்டம் எதிர்பார்த்ததைவிடப் பெரிய வெற்றி

## இரண்டாவது திட்டத்துக்கு ரூ. 4500 கோடி

இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு திட்டம் அமைத்து அதன்படி காரியங்கள் செய்ய வேண்டுமென்ற அவசியத்தை முதல் முதலாகக் கூறியது **எம். விச்வேச்வரையா** தான். அவர் மைசூர் திவானக இருந்து அந்த ராஜ்யத்தின் முன்னேற்றத்துக்கான பல வேலைகளைச் செய்தார். இப்போது அவருக்குக் கிட்டத்தட்ட நூறு வயதாகிறது.

1934ஆம் வருஷம் "இந்தியாவுக்கு ஒரு பொருளாதார திட்டம்" என்ற நூலை முதல் முதலாக அவர் எழுதினர். இந்தியா அனைத்துக்கும் ஒரு பத்து வருட திட்டத்தைத் தயாரித்தார். 1938-ம் ஆண்டில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் ஒரு தேசிய திட்டக் கமிட்டி நியமிக்கப்பட்டது. ஒரு பொருளாதார திட்டத்தைத் தயாரித்து, அனுபவ பூர்வமான யோசனைகளைக் கூற வேண்டுமென அக்கமிட்டியைக் கேட்டிருந்தனர். இவ் விஷயமாக அக்கமிட்டி, பல கேள்விகளைத் தயாரித்து, பலரது கருத்தை வரவேற்றதுடன், இரண்டாவது யுத்தம் முடிந்ததும் பல யோசனைகளடங்கிய அறிக்கைகளைத் தயாரித்தனர்.

1941ஆம் வருஷம் ஜூன் மாதம் பிறந்த பிற்கால புனருத்தாரணம் பற்றி கவனிக்க பல பல கமிட்டிகளை இந்திய அரசாங்கம் நியமித்தது. 1944ம் வருஷம் ஜுலை மாதம் ஓர் அபிவிருத்தித் திட்ட இலாகாவும் ஆரம்பிக்கப்பட்டது. இதே விஷயமாக, மாகாண அரசாங்கங்களும் புனருத்தாரண திட்டங்களைத் தயாரிக்கும்படி கேட்கப்பட்டன.

இரண்டாவது யுத்த காலத்தில், உத்தியோகப்பற்றில்லாதவர்களால் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் வருமாறு: 1, பம்பாய் திட்டம். இதை பம்பாயைச் சேர்ந்த கைத்தொழில், பொருளாதார அதிபர்கள் தயாரித்தனர். 2. மக்களின் திட்டம். இதை இந்திய தொழிலாளர் பெடரேசன் சார்பாக எம். என். ராய் தயாரித்தார். 3. காந்தீய திட்டம். இதைத் தயாரித்தது எஸ். என். அகர்லால்.

### திட்டக் கமிஷன்

இந்தியா சுதந்திரத்தைப் பெற்றதும், 1950-ம் வருஷம் மார்ச்சு மாதத்தில் இந்திய அரசாங்கம், ஒரு திட்டக் கமிஷனை நியமித்தது. "தேசிய செல்வத்தை நாட்டுக்குப் பூரணமாகப் பயன்படும்படி செய்வதற்கு" ஒரு திட்டம் தயாரிக்கும்படி அக்கமிஷனைக் கேட்டிருந்தனர். அதே வருஷம் ஜுலை மாதத்தில், நாட்டுக்கு 6 வருஷ பொருளாதார அபிவிருத்தி திட்டம் வகுக்கும்படி பணித்தார்கள். பின்னர் இது கொழும்புத் திட்டத்துடன் சேர்க்கப்பட்டது. 1951-ஆம் வருஷம் ஜுலை மாதம், திட்டக் கமிஷன் ஐந்தாண்டு முதல் திட்டமொன்றை வெளியிட்டது. 1956-ம் வருஷம் மார்ச்சு மாதத்துடன் முடியும் ஐந்து வருடங்களுக்கான இந்த நகல் திட்டத்தைப் பொது மக்கள் பரிசீலனை செய்து விவாதித்து தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். பின்னர் 1952 டிசம்பரில் இந்தியாவின் முதல் ஐந்து வருஷ திட்டம் பார்லிமெண்டுக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்ன? "**மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, செல்வச் சிறப்புடன் வாழ புதிய சந்தர்ப்பங்களை மக்களுக்கு அளிப்பதே**" என்று குறிப்பிடப்பட்டது. இயற்கை வளங்களை அபிவிருத்தி செய்யும் குறுகிய நோக்கம் மட்டுமல்லாமல், மக்களின் தேவைகளையும் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யக் கூடியதும்' மக்களின் சக்திகளை அபிவிருத்தி செய்வதுமான ஸ்தாபனங்களை அமைத்து வளர்ப்பது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

மக்களின் சராசரி வருமானத்தை இரட்டிக்கச் செய்ய வேண்டுமென்பது நீண்டகால லட்சியம். 1972-ம் வருஷத்துக்குள்ளாக வாழ்க்கைத்தரத்தை 70 சத வீதம் உயர்த்தலாமென்று நம்பப்படுகிறது. 1951 முதல் 56 வரையுள்ள முதல் ஐந்து வருட திட்ட காலத்தில் தேசிய வருமானத்தை ஒன்பதாயிரம் கோடி ரூபாயிலிருந்து பதினயிரம் கோடிவரை, அதாவது 11 சத விகிதம் உயர்த்தி விட வேண்டுமென்பது உத்தேசம்.

### முதல் 5 வருட திட்டம்

முதல் ஐந்து வருட திட்டம் சிறப்பாக, அஸ்திவாரம் அமைக்கும் ஒரு பூர்வாங்க ஏற்பாடுதான். எதிர்காலத்தில் துரிதமான அபிவிருத்தி ஏற்படுவதற்கான அடிப்படையே. அடுத்த இருபது வருஷ காலத்தில் செய்யவேண்டிய வேலைகளுடன் ஒப்பிடுகையில், இது மிகவும் மிதமானதே. முதலில் இத் திட்டத்துக்கு ரூ. 2069 கோடி வேண்டுமென்று மதிக்கப்பட்டது. பின்னர் இத் தொகை 2356 கோடிக்கு உயர்த்தப்பட்டது.

முதல் திட்டத்தில் விவசாய, நீர்ப்பாசன அபிவிருத்திக்கும், மின்சார சக்தி உற்பத்திக்குமே மிக முக்கியத்துவம் அளித்தனர். போக்கு வரத்து அபிவிருத்தியும் அடுத்தபடியாக முக்கியத்துவம் பெற்றது. இதனல் கைத்தொழில் அபிவிருத்திகளுக்கு அரசாங்கம் அதிக மூலதனம் ஒதுக்க முடியாமல், தனிப்பட்டவர்கள் இதைச்செய்யுமாறு விடவேண்டியதாயிற்று.

முதல்திட்டத்திலே மொத்தம் செலவான ரூபா 1960 கோடியில், விவசாயத்துக்கு 299 கோடியும், நீர்ப்பாசனத்துக்கும் மின் சக்திக்கும் 585 கோடியும், கைத்தொழில், சுரங்கத் தொழிலுக்கு 100 கோடியும், போக்கு வரத்துக்கு 532 கோடியும், சமூகசேவைகளுக்கு 423 கோடியும், மற்றவை வேறு சில்லறைக் காரியங்களுக்கும் செலவிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் நோக்கங்கள் பெரிதும் கைகூடின. உள்நாட்டில் உற்பத்தி பெருகி, பொருளாதாரம் பலப்பட்டுள்ளது. பணவீக்கம் நீக்கப்பட்டது. விலை வாசிகள் முதலிலிருந்ததைவிட 15 சத விகிதம் குறைந்தன.

தேசிய வருமானம் ரூ. 8850 கோடியிலிருந்து ரூ. 10480 கோடிக்கு உயர்ந்துள்ளது. அதாவது எதிர்பார்த்ததைவிட இது அதிகமாகும்.

### இரண்டாவது 5வருடதிட்டம்

இரண்டாவது 5 வருடதிட்டம் 1956-ம் வருஷம் மே மாதம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்கள் (1) தேசிய வருமானத்தில் 25 சத உயர்வு. (2) முக்கிய கைத்தொழில்கள் அபிவிருத்தி. (3) வேலை கிடைப்பதற்கான சந்தர்ப்பங்களைப் பெருக்குவது. (4) வருமானத்திலும் செல்வத்திலுமுள்ள வேற்றுமைகளைக் குறைத்து, மக்களிடை பொருளாதார சக்தியை சமப்படுத்துவது.

இதன்படி தலைமை அரசாங்கமும், மண்டல ராஜ்யங்களும் சேர்ந்து ரூ. 4500 கோடி மூலதனம் அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட வேண்டுமென்பது ஏற்பாடு. ஆனல் இந்தத் தொகையில் 208 கோடி குறைந்துவிட்டது. தனியார் துறை அபிவிருத்திக்கு 2400 கோடி தேவைப்படுமென்று திட்டமிடப்பட்டது. இதில் 720 கோடி, கைத்தொழில் அபிவிருத்திக்கு, 570 கோடி புதிய முதலீடுகளுக்கு, 150 கோடி கைத்தொழில் நவீன சாதனங்களுக்காக.

தேசத்தின் விரிவான பொருளாதார அபிவிருத்தியைக் கருதி, தேசிய அபிவிருத்தி சபை சென்ற வருஷம் நவம்பர் மாதத்தில். (1) உணவுப்பொருள் மொத்த விற்பனை உரிமையை அரசாங்கமே ஏற்பதென்றும், (2) கிராமப்பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய எல்லா ராஜ்யங்களிலும் கிராமிய கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பலப்படுத்த வேண்டுமென்றும். (3) செலவினங்களில் சிக்கனம் ஏற்படுத்தி, புதிய வருமான இனங்களைப் பெருக்க வேண்டுமென்றும், (4) இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்துக்கு ரூ. 64500 கோடி செலவழிக்க வேண்டுமென்ற பழைய தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

இதற்கு வெளிநாட்டுச்செலாவணி அதிகம் தேவைப்படுகின்றது. ஆகவே கூடுமானவரை இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதியைப் பெருக்க முயற்சிக்கப்படுகிறது. இந்த அபிவிருத்தித் திட்டங்களுக்கான மெஷின் முதலியவைகளின் விலையும் வெளி நாடுகளில் அதிகரித்துள்ளன. ஆகவே வெளிநாட்டுச் செலாவணி விஷயமாக அதிக கட்டுப்பாடுகளைச் செய்ய வேண்டியதாகவுள்ளது.

இரண்டாவது திட்டத்துக்கான வருமான இனங்கள் வருமாறு :—

| | கோடி, ரூபா. |
|---|---|
| அரசாங்க வருமானத்திலிருந்து (தலைமை, மாகாணம்) | 750 |
| ரயில்வே | 250 |
| பொதுமக்களிடமிருந்து கடன், மூலம் | 718 |
| சிறு சேமிப்புகள் | 384 |
| வேறு இனங்கள் | 74 |
| உள்நாட்டிலிருந்து மொத்தம் | 2028 |
| வெளியார் உதவி | 1100 |
| துண்டுவிழும் 'பட்ஜட்' மூலம் | 1092 |
| மொத்தம் | 4220 |


**உங்கள் எதிர்கால வாழ்க்கை சலனமற்றதாகக் காட்சியளிக்க வேண்டுமா ?**

அப்படியானல் அந்தப் பொறுப்பை எங்களிடம் ஒப்படையுங்கள்.

உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக விசேஷ சேமிப்புத் திட்டங்கள் ஏற்படுத்தியுள்ளோம்.

★ ஆயுள் மோட்டார் இன்சூரன்ஸ்
★ விவாக அந்தியகால சேமலாப நிதிகள் – விசேஷ கடன் வசதிகள்
★ கூட்டமைப்பு (Group Schemes)
★ விபத்து
★ மாதத்தவணைக் கட்டணங்கள் (Monthly recurring Deposits)

இவை போன்று இன்னும் பல விசேஷ அம்சங்கள் ஏற்படுத்தியுள்ளோம்

முழு விபரங்கட்கு:

**இன்ரநாஷனல் இன்சூரன்ஸ் கம்பனி லிமீட்டெட்**

280, இரண்டாம் மாடி, பெரியகடை. போன்: 526.

இராசா பில்டிங் யாழ்ப்பாணம். தந்தி: "இனிக்கோ"




உதய சங்கரும் அவரது காவிய நடன கோஷ்டியினரும் உலகில் பலநாடுகளுக்கும் திக்விஜயம் செய்து பரதநாட்டியக் கலைக்கு வெளித்தேசத்தலைவர் பலரையும் தலைவணங்கச் செய்தனர்.

சிறுகதை

# கடனாளி

க. ரா.

மனிதன்! அவனைச் சூழ்ந்துள்ள இயற்கை! அந்த இயற்கையோடும் மனிதனோடும் பிரிக்க முடியாத அளவிலே தொடர்பு கொண்டிருக்கும் விதி! இம்மூன்றுக்கும் உள்ள தொடர்பு விந்தையானது.

மண் நிலத்திற்குப் பரந்த வானம் என்றென்றும் கடனாளியாக உள்ளது!

அந்த நிலமோ தன் படைப்புக்களான கோடானு கோடி உயிர்களுக்குக் கடனாளியாக உள்ளது. ஆனால் மனிதன் மட்டும் தனக்குக் கடனாளியான நிலம் கடமை தவறும்போது சொல்லொண்ணாத் துயரமுறுகிறான். அப்பொழுது அவன் விதிக்குக் கடனாளி ஆகிவிட்டது போன்ற பிரமையில் மயங்குகின்றான்.

விதியின் சதிக்குக் காலம், இடம், பெயர் என்ற வேற்றுமை இன்றி என்றும், எங்கும், எல்லோரும் கடனாளியாகவே உள்ளனர். எனவே தான், இக்கதையில் காலமோ, இடமோ, பெயரோ குறிப்பிடப்படவில்லை.

## மண்ணுக்கு

இந்த மண்மீது ஒரு காலத்தில் மூடிக்கிடந்த நீரில் ஒரு பகுதியை வானம் நிலத்திடமிருந்து கடனாகப் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிட்டால் காலம் தவறாது பருவத்திற்கு வட்டியைத் தருவது போல் வானம் ஏன் நீரைப் பொழிய வேண்டும். என்றோ, எப்பொழுதோ வாங்கிய கடனை நல்ல மனமுடைய வானம் மறக்கவில்லை. நிலம் வாய் திறந்து கேட்காமலேயே 'கோடை' என்றும் 'பருவம்' என்றும் 'கார்' என்றும் தவறாமல் வானம் பெய்துகொண்டேயிருந்தது.

பணம் பெற்றவுடன் அதைப் பகுத்துச் செலவழிக்கும் செலவாளியைப் போல நிலத்தின் மக்களாகிய மனிதரும் வானம் பெய்த நீரைப் பலவாறு செலவழித்தனர். குளமாகத் தேக்கினர். ஏரிகளில் நிரப்பினர். வாய்க்கால்களில் ஓடவிட்டனர். ஒரு பகுதி ஆறுகளாகக் கடலில் சென்று கலந்தது. நிலத்தின் செல்வ வளமும் குறையாமலேயிருந்தது.

காலச் சுழலிலே பழமைகள் புது வேடங்களில் புதுமைகளாய் வெளிப்பட்டன. நிலத்தின் குழந்தைகளான மக்கள் வியத்தகு செயல்களில் இறங்கினர். அப்பொழுது,

ஒரு பருவத்தில்.........

மண் நிலத்தில்.........

எங்கோ ஒரு பகுதியில்......

மக்கள் வானத்தை நோக்கினர். கள்ளமில்லாத உள்ளம் போல அது தெளிவாக இருந்தது. கார்காலத்தின் இறுதிப் பகுதியில் பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை. வானம் தான் பெற்ற கடனுக்குத் தர வேண்டிய வட்டியை நிலத்திற்குக் காலத்தில் தரவில்லை. மக்கள் கடனாளியின் கொடுமையைக் கண்டு அஞ்சினர். வெயிலால் கறுத்துப்போன முகத்தைத் தூக்கி ஏக்கத்தோடு வானத்தைப் பார்க்கும் மக்களைக் கண்டு வெண்முகில்கள் சிரித்துச் சென்றன.

மாலை நேரம் நாளும் நாளும் வந்தது. உழவர்கள் ஒருவரோடு ஒருவர் நம்பிக்கை இழந்த குரலில் ஏதேதோ பேசினர். காலத்தின் அளவுகளாக அந்தக் கிழவன் முகத்தில் பல கோடுகள் தென்பட்டன.

"கார்காலம் தவறிவிட்டது" என்றான் அவன்.

"இந்த வருஷம் விதைப்பு அவ்வளவு தான்" என்றான் இன்னொருவன். நீண்ட பெருமூச்சு அதைத் தொடர்ந்தது.

"பருவமாவது நல்லாப்பெய்யுமா" என்றான் மற்றொருவன்.

இந்தக் கார்கால வட்டியும் பருவத்தில் கிடைக்கும் என்பதுதான் அவன் எண்ணம்.

அவர்கள் தங்களுக்குள் உணவு தானியமும்—மாட்டுத் தீனியும் ஒருவருக்கொருவர் கைமாற்றாகக் கேட்டுக் கொண்டனர்.

பகலெல்லாம் உறங்கிய காற்று மெல்ல எழுந்தது.

மங்கிய இருளில் அவர்கள் பிரிந்து சென்றனர்.

* * *

மேற்கேயிருந்து கிழக்கே சென்ற காற்று சோர்வோடு திரும்பியது. அதனிடம் இப்பொழுது அவ்வளவு வேகமில்லை.

பருவம் வந்துவிட்டது.

பாடில்லாததாலோ உணவில்லாததாலோ உழவர்களின் உடல் சற்று இளைத்திருந்தது. இப்பொழுது அவர்களுடைய கண்கள் வான்நோக்கியே விழித்தன.

ஆனால்,.........கடன்காரனை வானத்தின் அலட்சிய மனம் அவர்களின் மனத்தில் வேதனையைத் தூண்டியது.

நிலம் அமைதியாகவே யிருந்தது. மக்கள் அதைத் தோண்டினர். அதன் இதயத்தில் அது சேர்த்து வைத்திருந்த செல்வம் அவர்களுக்குக் கிணற்று நீராகச் சிறிதுகாலம் வாழ்வளித்தது.

பருவத்தின் முடிவிலே கோடை தொடங்கியது!

வற்றிப்போன மரஞ்செடிகளின் சிறிய பழுப்பு இலைகள் காற்றோடு விளையாடின. மொட்டை மரங்கள் வானோக்கி தவஞ்செய்தன.

காய்ந்த வயிற்றுடன் கூடிய அவர்கள் இந்த வருஷமாவது மழை பெய்யும் என்ற நம்பிக்கையை வயிற்றில் நிரப்பி வாழ்ந்தனர். மழை பெய்யாமல் கோடையின் கொடுமை மிகுந்தது.

வேலையின்றித்துடிக்கும்அவர்களின் இதய ஒலி அவர்கள் காதில் கனவுலகின் இடியொலியாகப் பட்டது.

காலமென்னும் எல்லையில்லாத ஆகாயவெளியிலிருந்து ஓராண்டாகிய விண்மீன் எரிந்து விழுந்தபின்......

மீண்டும்......

கார் வந்தது. ஆனால் கவலை மறையக் கடனின் வட்டியாகிய மழை இந்த ஆண்டும் வரவில்லை.

மக்களின் துயரம் பெயர் தெரியாத ஏக்கமாக வெளிப்பட்டது. அவர்கள் தனிச் செல்வமான முக மலர்ச்சியை அவர்கள் எங்கோ புதைத்து விட்டனர். அவர்கள் உள்ளத்தில் எவ்வளவோ எண்ணங்கள் எழுந்தெழுந்து அச்சுறுத்தின.

அவர்கள் உலர்ந்த நெஞ்சை ஈரமாக்க நீரில்லை. காய்ந்து போன உதட்டுடன் வானை நோக்கினர். செம்மண் காற்று அவர்கள் முகத்தை மூடிச் சென்றது.

கார்காலம் முடியும்சமயம்.

சோளத்தட்டு முதலிய மாட்டுத் தீனியைத் தாங்கிநின்ற கற்கள் வெய்யிலில் காய்ந்தன.

மாட்டின் தாழிகள் எப்பொழுதும் வறண்டிருந்தன.

மாடும் ஆடும் வெகு தொலைவிலுள்ள சந்தைகளை நோக்கி நடக்க இயலாமல் மெல்ல நடந்தன. மக்களிற் சிலர் நம்பிக்கை என்ற ஊன்றுகோலின் துணையால் தம் நடையைத் தொடங்கினர்.

பருவம் வந்தது பயனில்லை!

கிழவரும், பெண்களும், குழந்தைகளும் மெல்லக் கண்ணீர் விட்டனர். கொதிக்கும் நெஞ்சமுடைய நிலத்தை அக் கண்ணீர் என்ன செய்யமுடியும்.

உலகத்தில் கொடியவர்கள் கூட நமக்குச் சிலவேளைகளில் உதவுகின்றனர். ஒரு காலத்தில்வளத்தோடுவிளைந்துநின்ற பயிருக்கு வேலியாக நின்ற முள்ளோடு கூடிய கற்றாளைக் கிழங்குகள் மக்களுக்கு உணவாயின.

நிலத்தில் வெடிப்புக்கள் தென்பட்டன.

ஆனால் வானில் கார்மேகங்கள் தென்படவேயில்லை.

எப்பொழுதாவது எங்கோ தென்படும் மேகக்கூட்டமும், அதிகாலையில் தெளிவற்ற கனவு அலைந்துவிடுவது போல சிதறிவிடும் அந்த உண்மைக் காட்சிகூட ஒளியிழந்த அந்த மக்கள் கண்களுக்குக் கனவாகத் தோன்றியது.

மூன்றாம் ஆண்டின் தொடக்கம்.

கார்காலம். அந்த ஊரில் சில வீடுகள் அழிந்துகிடந்தன. சிலவற்றில் சிலர் படுத்துக்கிடந்தனர்.

நாளும்போலவே அன்றும் நிலம் வானை நோக்கி மௌனம் சாதித்தது. வானமும் நிலத்தைப் பார்த்து மௌனமாகவே இருந்தது.

மெல்லக் கதிரவன் மேற்கு வானில் வீழ்ந்தான்.

## அவனுக்கு

"நிலத்தில் விழுந்த செம்மண் புழுதியைக் கண்டு மேகங்கள் எல்லாம் அஞ்சிக் கறுத்தன. ஒன்றன்பின் ஒன்றாக அவை படைபோற் சென்றன. மாலை நேரம் மக்கள் வியப்பால் வானையே பார்க்கின்றனர். அந்த வயதுமுதிர்ந்த கிழவன் கிழக்குவானைப்பார்த்தான். பல வர்ண வானவில்! வானின் அலட்சியத்தை நோக்கி நிலம் வானை நோக்கி உயர்த்திய வில்போலநின்றது. அந்த வான வில்லுக்கு அஞ்சி வானம் நடுங்கியது. அதைத்தொடர்ந்து கொட்டும் மழை. எங்கும் ஒரே வெள்ளம். வெள்ளத்திலே மூழ்கும் ஒரு குழந்தையின் கூக்குரல்"

அவன் — அந்தக் கிழவன்— திடுக்கென தன் கனவிலிருந்து விழித்துக்கொண்டான். அவன் உடலில் நல்ல வலு இருந்தது. அந்தப் பஞ்ச நிலைமையில் கூட அவன் சுறுசுறுப்பாகவே இருந்து வந்தான்.

அவன் தான் கண்ட கனவை நினைத்துக்கொண்டே மழையென மெல்ல வாயால் சொல்லிக்கொண்டான். அவன் கண்கள் வானத்தை நோக்கின. அது நிர்மலமாக இருந்தது! கிழக்கு வானிலிருந்து ஒளி வெள்ளம் இருட் கரையை உடைத்துக்கொண்டு பாய்ந்தோடி வந்தது.

அந்த ஒளி வெள்ளத்தில் அவன் நினைவுகள் சென்ற காலத்தை நோக்கிச் சென்றன.

அவன் அந்த ஊர் உழவர்களில் ஒருவன். ஆறு வயது முதல் தனக்குச் சொந்தமான நிலத்தையே நம்பிவாழ்ந்தவன். தன் பாட்டனுடன் சிறுவயது முதல் அதிகாலையில் மகிழ்ச்சியோடு நிலத்தை நோக்கிச் செல்வான்.

அன்று முதல் நிலம் அவன் கடனாளி ஆயிற்று. தன் வியர்வையையும் கண்ணீரையும் செல்வமாக நிலத்தில் சிந்தினான். நிலமும் அதைப் பெற்று அவனுக்கு விளை பொருளை வாரிக் கொடுத்தது — வட்டியாக.

காலமெல்லாம் இரண்டு மாடுகளும் அந்த இரண்டு ஏக்கர் நிலமும் ஒரு கேணியுமே அவன் துணையாயமைந்தன.

அவன் நாற்பதாம் வயதிலே அவன் மனைவி ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். குழந்தை இன்பத்தை அதற்கு முன் அறியாத அவன் உள்ளம் மீண்டும் இன்பத்தால் இளமை பெற்றது.

வானம் தன் கடமையை மறந்த, சென்ற மூன்றாம் ஆண்டில் தான், அவன் மகனுக்கு மணம் நடந்தது. மண வாழ்க்கையின் ஓராண்டு கழிவதற்குள்ளாகவே அவனுக்கும், அவன் மகனுக்கும், கடனாளியாகிய நிலம் வாய்மூடி மௌனியானது.

கிழவன் தன் மகனை தூரத்திலிருக்கும் நகரத்திற்குமில் வேலைக்கு அனுப்பினான். அவன் மகனும் மாதா மாதம் ஏதோ சிறு தொகை தன் கிழத் தந்தைக்கும் இளம் மனைவிக்கும் அனுப்பி வந்தான்.

கிழத் தந்தையும், இளம் மனைவியும், நீரின்றிப் பனியில் உயிர் வாழும் பூடு போல அந்தப் பணத்தைக் கொண்டு வாழ்ந்தனர். மரம், கொடிபோலவே அவர்களும் அந்த நிலத்தில் வேரூன்றிவிட்டனர். இனிப் பிரிந்துசென்று வேறிடத்தில் வாழ அவர்களால் இயலாது.

சென்ற ஆண்டுத் தொடக்கத்தில் அந்தக்கிழவனின் மகன் கிராமத்திற்கு வந்து தன் தந்தையையும் மனைவியையும் பார்த்துச் சென்றான். சென்ற இரண்டாம் வாரத்தில் பட்டணத்தில் மோட்டார் விபத்தில் இறந்துவிட்டான். கிழவனுக்குத் தன் மகனின் பிணம் கூடக் காணக்கிடைக்கவில்லை.

தன் மகனின் பிணத்தைத் தாங்கி நின்ற நிலத்தை நோக்கி அவன் அழுதான்.

ஒரு மாதம் கழிந்துதான் தன் மருமகள் கருக்கொண்டிருப்பது அவனுக்குத் தெரிந்தது. அது அவன் இதயத்தை முள்ளால் குத்திப் பின் ரோஜா மலரினால் ஒற்றுவது போல இருந்தது.

அன்று... பொங்கி வந்த ஒளி வெள்ளத்தைக் கார் மேகம் அணைத்துத் தடுத்தது. கனவிலிருந்து விழித்த கிழவன் நினைவு பெற்று தலையைத் தூக்கினான். அவன் கடனாளியான நிலம் செம்மண் புழுதியைக் கிளப்பி வானத்தை நோக்கிச் சீறியது.

வீட்டினுள் தன் மருமகளின் முனகல்! அவன் எழுந்து வீதியில் நின்று வானத்தைப் பார்த்தான்.

## விதிக்கு

உலகம் விந்தையானது மட்டுமல்ல — கொடுமையானதும் கூட. வாழ்க்கையில் மனிதன்— ஏன் இயற்கையே — பெயர் தெரியாத ஏதோ ஒரு சக்திக்குக் கட்டுப்பட்டிருக்கின்றது. அந்த சக்தி தன் தனியாட்சியால் உலகைத் தன் விளையாட்டுப் பொம்மையாக்கிக்கொள்கிறது. பொம்மையின் மீது குழந்தை கோபங்கொண்டு அதைத் தூக்கி எறிவதைப் போல விதியும் நம்மைச் சில வேளைகளில் அலட்சியம் செய்கிறது. அதற்கு நாம் எல்லோரும் கடனாளிகள்.

அந்தக் கிழவனும் விதியின் இந்த விதிக்கு விலக்காக அமையவில்லை.

மலர்ந்த முகத்தோடு அவன் மீண்டும் வீட்டுத் திண்ணையில் வந்து அமர்ந்தான்.

அன்று நிச்சயம் மழை பெய்யும் என்ற நம்பிக்கை அவன் உள்ளத்தில் தலை தூக்கியது! தன்னுடைய பேரக் குழந்தை பிறக்கப்போகும் அதிர்ஷ்ட நாளினை எண்ணி மகிழ்ந்தான்.

அன்று மாலை...

எங்கோ வெகு தொலைவில் இடியின் ஒலி கேட்டது.

அவன் உள்ளத்தில் அது வரை வறுமை காரணமாக நடுங்கிய நடுக்கம் நின்றது.

எதிர்த் திசையில் வானையே கிழிக்கும்படியான மின்னல். அது அவனுள்ளத்து இருட் திரையை நீக்கி விட்டது.

படபடவென மழை பெய்யத் தொடங்கியது. காய்ந்து உலர்ந்திருந்த அவன் நெஞ்சம் இன்ப உணர்வூற்றால் நிறையத் தொடங்கியது.

அதைத் தொடர்ந்து வீசிய குளிர்ந்த காற்றால் அவன் மூச்சின் வெப்பம் தணிந்தது.

மழை பெய்தபடியேயிருந்தது. திண்ணையில் அமர்ந்திருந்த அவன் வைத்த கண் வாங்காமல் அந்த மழையையே வெறி கொண்டவன் போலப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் உலர்ந்து போயிருந்த நம்பிக்கை என்ற மரம் மீண்டும் துளிர்க்கத் தொடங்கியது! அதற்குள்ளாகவே அவன் தன் பேரக் குழந்தையை அந்த மரத்தின் நிழலிலே தன் உள்ளத்தில் விளையாடவிட்டான்.

வீட்டினுள் முனகல் மிகுந்தது. அவன் கண்கள் குழந்தையைக் காண ஒவ்வொரு விநாடியும் துடித்தன.

தன் துயரத்தை எல்லாம் ஒன்றாக்கி ஒரு பெரு மூச்சிலே கலந்து வெளிவிட்டபடி அவன் பெய்யும் மழையினையே அன்பு கனியப் பார்த்தான்.

வீட்டினுள்ளே குழந்தையின் அழுகுரல் கேட்டது!

அவன் கண்கள் மகிழ்ச்சியால் விரிய உள்ளம் விம்மியது!

அப்பொழுது......

பேரொளியோடு கூடிய கொடி மின்னல் வானில் "நீ

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை எழுத்தாளர்களுக்கு

பண்பாடு, ஒழுக்கம், வாழ்க்கைநிலை ஆகியவற்றை செம்மையாக்கும் நோக்கத்துடன் எழுதப்பெறும் சிறுகதைகளை "ஈழநாடு" வரவேற்கின்றது. கதைகள் 'பூல்ஸ்காப்' தாளில் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். அத்துடன் தாளின் ஒரு பக்கத்தில் மையினால் எழுதப் பெற்றுமிருக்க வேண்டும்.

### வாழ்க்கைச் சம்பவங்கள்

நாளாந்த நிகழ்ச்சிகளைப் பொருளாகக் கொண்ட வாழ்க்கைச் சம்பவங்களையும் எழுத்தாளர்கள் எழுதி அனுப்பலாம். இச்சம்பவங்கள் இப்பத்திரிகையில் ஒரு பத்திக்கு (கலம்) மேல் அமையக்கூடாது.

# இதயத்தை ஈர்க்கும் இமயக் காட்சி

— கு. நா. சிவராமகிருஷ்ணன் —

[தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் வ. உ. சி. கல்லூரி]

தில்லை அம்பலத்தில் நந்தா விளக்கு எரிகிறது. 'இது நடராசர் சந்நிதி இங்கே வந்தால் உள்ளத்தில் இருள் நீங்கும். உள்ளொளி ஓங்கும், என்று கட்டியம் கூறுவதுபோல அந்த விளக்கு கொழுந்துவிட்டு எரிகிறது. அதன் ஒளி சந்நிதி முழுவதும் படர்கிறது. தன்னையும் உணர்த்தித் தன்னை அணுகுபவரையும் பொலிவுறுத்தும் பரம்பொருள் போலவே அவன் திருமுன் திகழும் நந்தா விளக்கு காட்சி அளிக்கிறது. அதன் எதிரே ஆழ்ந்த தியானத்தில் உட்கார்ந்திருக்கிறார் அந்தப் பெரியவர். அவர் தோற்றத்தில்தான் எத்தனை கவர்ச்சி! வெண்ணீறு பூசிய மேனி; தலையில் உருத்திராட்சமாலை, கழுத்தில் கண்டிகை அணி செய்கிறது. பழுத்த சிவக்கோலமாக விளங்குகின்றார். அது மட்டுமா? அவர் சிறந்த 'கலாயோகி' என்பதை அவர் முகப் பொலிவே காட்டுகிறது. அவர் முன்னிலையில் ஓர்புறம் தேவார ஏடுகள்; இன்னொரு பக்கத்தில் நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதி அடுக்கி வைத்திருக்கின்றன.

அந்த விளக்கு ஒளியில் அவர் உள்ளம் ஒன்றுதான் எதையோ தேடிக்கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் உறங்கும் அந்த நடுநிசியில் அவர் மட்டும் எதற்காக அப்படிச் சிந்திக்கிறார்? 'எடுத்த காரியம் மிகப் பெரியது, சிவனடியார்களின் வரலாறு அல்லவா பாடவேண்டும்! கதைச்செய்திகளைச் சேகரம் செய்துவிட்டேன். அவை காவியமாக வேண்டுமே. அதை நிறைவேற்ற நம் அரசன் குலோத்துங்கன் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்துப் "பெரிய புராணம் பாடுங்கள்" என்று ஆர்வத்தோடு ஊக்கி நிற்கிறார். அடியார் வரலாறு காவியம் ஆகி உலகில் உலவ வேண்டும் என்பதில் அவருக்குத்தான் எத்தனை ஆர்வம்!

என் முயற்சிக்குத் தேவையான மனித உதவி மன்னன் மூலம் கிடைத்துவிட்டது. கதையைச் செய்யுளாக்கத் தேவையான தமிழ் ஞானத்திற்கும் குறைவில்லை. பக்திக் காவியம் தோன்ற மனித உதவி, மனித அறிவு மாத்திரம் போதுமா? அருள் ஒளியும் பாயவேண்டுமே. அப்போது தானே ஞானவாசம் வீசிப் பிரகாசிக்கும் பெருங் காவியமாகும்'. என்ற சிந்தனையோடு அமர்ந்த சேக்கிழார் தன்னை மறந்து சிவத்தியானத்தில் ஆழ்ந்து இருக்கிறார். தில்லை வெளியில் நடமாடும் கூத்தப்பிரான் இப்போது அவர் உள்ளத்திலே ஆடுகின்றான். அவர் உணர்வில் அடியார் பெருமை ஊறிப் பொங்கி ஒலிவடிவம் பெருகிறது. அதற்குச் சுருதி கூட்டுவது போல் அவருடைய அகக் காதில் தேவாரப் பண்ணின் நாதம் எதிரொலிக்கிறது. "உள் நின்ற நாவின் உரையாடியாக" நின்று இறைவன் "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்கிறான். இறைவன் குரல் சேக்கிழாரின் உள்ளத்தைப் புதுக்குகிறது. அவர் உணர்விலே தெய்வ ஒளி ஏறுகிறது. வாக்கிலே அது மின்னிடுகிறது. காவியம் தோன்றும் பக்குவம் இது. அதனை ஆக்கித் தந்த இறைவனைப் பற்றிய நினைவு வலுக்கிறது. அவனுடைய நிலையான உறைவிடம் அவர் அகக் கண் முன் தோன்றுகிறது. தில்லைச் சந்நிதியில் இருந்துகொண்டே திருக் கைலாயத்தைக் காண்கிறார். தேரழுந்தூரில் இருந்தபடியே கம்பர் கோசல நாட்டைக் கற்பனை செய்யவில்லையா? சேக்கிழாரும் தில்லையிலிருந்த வண்ணம் இமயத்தைக் கற்பனை செய்கிறார்.

இதோ விண்ணைத் தொட்டுக்கொண்டு நிற்கிறது இமயம். அதன்மேல் வெண்மையான பனி உறைந்து படிந்திருக்கிறது. பனி படிந்த அதன் தோற்றம் விபூதி அணிந்த அடியார் போல் திகழ்கிறது.

பொன்னின் வெண் திரு நீறு
புனைந்தெனப்
பன்னு நீள் பனிமால் வரை...
[பெரிய. திருமலைச்.,]

அதன் ஒரு பக்கத்தில் இருப்பது திருக்கயிலாயம். அதன் சாரலில்தான் எத்தனை வகையான இன்ப ஒலிகள்! அதோ விண்ணை முட்டும் சிகரங்களில் மேகங்கள் முழங்குகின்றன. மலைச்சாரலிலே அவற்றிற்கு மாறாக யானைகள் பிளிறுகின்றன. அந்தணர்களின் வேத முழக்கம் ஓர்புறம். வித்தியாதரரின் வீணை நாதம் இன்னொரு புறம். தேவதுந்துபிகள் வேறு மற்றொரு புறத்திலே ஒலிக்கின்றன. இவ்வொலி இன்பத்தில் திளைத்த வண்ணம் கயிலாயச் சாரலை ஊன்றிப் பார்க்கின்றோம்.

1. In the mind of a Hindu, Kailas is always associated with soul—elevating, sublime, spiritual ideas - Kailas hills are a huge range with a central beautiful, naturally carved and decorated shining peak eternally clad with silvery snow, 22980 feet above the sea level. Some take the height to be 22028 feet. This particular peak is in the form of a natural huge Sivalinga (Virat form) This is worshipped as the form of Lord Siva from a distance...
A trip to Sacred Kailas Manasor ower. by Swami Sivananda.

அங்கே ஒரு பக்கத்தில் ஆச்சிரமம் ஒன்று தெரிகிறது. அதன் முன்றிலில் தவ வடிவான முனிவர் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். அவர் சிறந்த சிவ பக்தர் என்பதை அவர் தோற்றமே சொல்கிறது. அவரைச்,

" ......சிவன்
தன்னையே உணர்ந்து ஆர்
வம் தழைக்கின்றான்
உன்னருஞ் சீரு பன்னிய
முனி "

என்று சேக்கிழாரே அறிமுகம் செய்கிறார்.

யோகம் பயிலும் இளம் முனிவர்கள் பலர் உபமன்னிய முனிவரைச் சுற்றி உட்கார்ந்திருக்கிறார்கள். அப்போது வானத்தில் அதிசய ஒளி ஒன்று தோன்றுகிறது. இளம் முனிவர்களின் பார்வையை அது கவர்கிறது. ஆயிரம் ஆரியர்கள் ஏக காலத்தில் தோன்றியதுபோல் விண்ணில் ஒளிரும் அந்த அதிசய ஜோதியைக் கண்டு வியந்த அவர்கள் உபமன்னிய முனிவரிடம் 'இது என்ன அதிசயம்' என்று கேட்கிறார்கள். உபமன்னிய முனிவர் அந்த ஒளி வடிவைக் கண்டதும் விரைந்து எழுந்தார்.

ஆனந்தக் கண்ணீருடன் கை கூப்பி வணங்கி நின்றார். சிவபெருமானைத் தவிர வேறு யாரையும் வணங்காத உபமன்னிய முனிவர் இந்த ஒளி வடிவத்தைக் கண்டதும் வணங்குகிறாரே என்று முனிவர்கள் வியப்புற்றனர். அவரிடம் 'வணங்கிய காரணம் யாதோ?' எனக்கேட்டனர்.

உபமன்னிய முனிவர், "நீங்கள் கண்டது சுந்தரரின் திருவுருவம். அவர் இறைவன் ஆணைப்படி மண்ணில் பிறந்தார். இப்போது இறைவன் ஆணைப்படி வெள்ளை யானை மேல் ஏறிக்கொண்டு திருக்கயிலாயம் திரும்புகிறார். அவர் வரலாறு மிகப் புனிதமானது" என்று தொடர்ந்து கூற முற்படுகிறார். உபமன்னிய முனிவர் தன்னைச் சுற்றியிருந்த மாணவர்களுக்குச் சுந்தரமூர்த்தி நாயனாரின் கதையை எடுத்துக் கூற முற்படும் இந்த நிகழ்ச்சியில் தொடங்குகிறது, பெரிய புராணக் காவியம்.

சுந்தரரின் பிறப்பு வரலாற்றுக்கு நிலைக்களம் திருக்கயிலாயம். அந்த வரலாற்றை முதல் முதலில் உலகிற்கு அருளிய உபமன்னிய முனிவன் இருப்பிடமும் அதுவே. எனவே, திருக்கயிலாயக் காட்சியிலே — அதை அங்கமாகக் கொண்ட இமயத்தின் வருணனையிலே காவியம் தொடங்குகிறது.


பயிர் பூச்சிகளாலும் பயிர் பீடைகளாலும் எவ்வளவு சேதம் ஏற்படுகிறதென்று உங்களுக்குத் தெரியுமா?

ஜெர்மனியாரின் பயிர் பீடை நாசினிகளையும், தெளி கருவிகளையும் பாவித்துப் பயிர்களைப் பாதுகாருங்கள்

**பொலிடோல்:** பிரசித்திவாய்ந்த ஒரு பூச்சி நாசினி திரவம் ஆகவும், தூள் முறையாகவும் பாவித்துக்கொள்ளலாம்.

**டிப்தெரெக்ஸ்:** நெற்பயிர் பீடைகளுக்குச் சிறந்த சக்தி வாய்ந்த ஒரு நாசினி திரவமாகவும், நீர்கலந்த தூளாகவும், தனித்தூளாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**குப்பிரவிற்று:** கமத்தொழிற் பகுதியாலும் தேயிலை ஆராய்ச்சித் தாபனத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட செம்பு பொதுந்த பங்கசு கொல்லி, தேயிலை, வெற்றிலை, புகையிலை பயிர்களின் பங்கசு நோய்களை அடக்க வல்லது.

**சிரீசையன்:** நெல்விதை மற்றும் விதைகளை தோற்று விதை பங்கஸ் நோய்களை நீக்கலாம்.

**ஹைகரகாபமேற்று:** பயிர் நோய்களைத் தடுக்கக்கூடிய ஓர் பங்கஸ் கொல்லி.

**ஹெடோனல்:** களைநாசினி, களைப்பூண்டுகளை அழிப்பதால் நெற் பயிருக்கு சிறந்த வளர்ச்சியைக் கொடுக்கும்.

**தூக்கோன்இரை:** ஈ, கரப்பான் பூச்சி ஆகியவற்றை அடக்க வாய்ந்த பூச்சி கொல்லி.

**சீலியோ நச்சுப்பசை:** எலிகளையும், அகழான்களையும் பரிநாசஞ் செய்யும் அரிக்கும் விலங்கு கொல்லி.

**பிலாட்சி உபகரணங்கள்:** உகந்த தெளி கருவிகளும், தூவிகளும் குறைந்த விலைக்கு எடுத்துக்கொள்ளுக.

மேற்கூறியவை யாவும் M. P. C. சங்க மூலமாயும் எங்கள் பிரதிகருத்தர்
K. S. செல்லையா, ரோயல் டிஸ்பென்சரி, யாழ்ப்பாணம்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
C. A. வயித்திலிங்கம், 5, டமறில் ஒழுங்கை, மட்டக்களப்பு.
K. V. சோமசுந்தரம், மனனன் குளம், அக்கரைப்பற்று.
ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்டோர்ஸ், வெலிமடை.
சரஸ்வதி ஸ்டோர்ஸ், வெலிமடை.
அனுலா சீற் ஸ்ரோர்ஸ், வெலிமடை. மூலமாயும் வேண்டிக்கொள்க.
பயனீயர்ஸ் டிரேடிங் சென்றர், நெல்லியடி, கரவெட்டி.
எஸ். எம். ஏ. அலியுத்தும்மா லெப்பே, 153, மெயின் வீதி, கல்முனை.
எல். ஈ. எப். அமரசேகரா 10, வல்லானை, பாணந்துறை.
என். சச்சிதானந்தன், திருக்கேதீஸ்வரம், மன்னார்.
சிவசக்தி ஸ்டோர்ஸ், வவுனியா.
வி. வடிவேலு அன்ட் பிறதர்ஸ், 25-27, பழையகடைத்தெரு, நுவரேலியா.
கே. செல்லத்துரை, முதலியார் வளவு, சுண்ணாகம்.

தேவையான விபரங்களுக்கு எழுதுக.

விலாசம்:

**சதாம் ஹவுஸ் லிமிட்டெட்**
தபால் பெட்டி இல. 743.
கொழும்பு 8.


# "உத்தியோகக் கல்வி முறை ஒழிய வேண்டும்!"

## அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயப் பரிசளிப்பு விழாவில் திரு. கந்தசாமி வற்புறுத்தல்

— நமது நிருபர் —

அனுராதபுரம்

அனுராதபுரம் விவேகானந்த வித்தியாலயத்தின் 14, 15ஆவது ஆண்டு நிறைவு விழா, வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவுடன் பெற்றோர் தினமாகக் கொண்டாடப்பட்டபோது தலைமை தாங்கிய மாவட்ட நீதிபதி திரு. வே. க. கந்தசாமி பேசுகையில உத்தியோகத்துக்கெனக் கற்கும் முறை ஒழிய வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்.

அவர் கூறியதாவது: இன்று உத்தியோகத்துக்கென கற்கும் பழக்கம் மாணவர்களிடையே பரவலாக இருக்கின்றது. இதனால் படிப்பின் தத்துவம் குறைநதுபோய்விட்டது. வட மத்திய மாகாணம் வறட்சி மிகுந்த பிரதேசம். இங்கு இலங்கையின் முக்கிய பொருள்களான தேயிலை, தேங்காய், ரப்பர் போன்றவை விளைவதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு குளமும், அதையடுத்து ஏராளமான நிலங்களும் தான் உண்டு. எனவே வடமத்தியமாகாணத்தில் கமத்தொழிலே பிரதான தொழிலாக விளங்குகின்றது. இத்தகைய தொழிலைப் புறக்கணித்தல் கூடவே கூடாது. அதற்குத்தான் மாணவர்கள் தொழிற்கல்வி பயின்று, விஞ்ஞான முறைப்படி கமத்தொழிலை வளர்க்க முன்வர வேண்டும்.

விஞ்ஞானம், விஞ்ஞானம் என்று உலகில் அடிபட்டாலும் மெய் ஞானம் என்று ஒன்றிருப்பதை நாம் ஒருபோதும் மறக்கவேகூடாது. ஜனத்தொகை வேகமாகப் பெருகும் வகையில்விஞ்ஞானத்தால்உணவுப் பற்றாக்குறையைப் போக்க முயலும்போதே மெய்ஞானத்தால் ஆத்மீக வளர்ச்சிக்கு வழி தேடவேண்டும்.

கிறிஸ்தவ மதம் ஒரு பெரிய மதம். பௌத்தமதம் ஒரு பெரியமதம். இந்துமதம் என்று ஒன்றில்லை. ஆனால் சைவம் என்று ஒன்றுண்டு. அதுவும் பெரிய மதமே. ஓர் ஊருக்குப் பல வழிகளாலும் போய்அடையலாம் என்பதுபோல, இம் மதங்களால் இறைவன் என்ற பெரும் பொருளைச் சென்று அடையலாம்.

உலகில் மற்றப்பகுதியில் மற்ற மதங்கள் பரவி இருப்பது போன்று, இந்தியாவில் சைவ மதம் விரிந்து உள்ளது. எனவே, ஒவ்வொரு மதமும் இறையை அடையும்வழி என்றுணர்ந்து, மற்ற மதங்களை நிந்திக்கும் பழக்கத்தை அறவே கைவிடவேண்டும். இதற்கான சமரஸ மனோபாவத்தை மாணவர்கள் பயிலவேண்டும்.

( 12ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய அரசினர் குறுக்கீடு இந்தியாவில் ஜனநாயகத்தை பாதுகாக்குமா?

வ. மகாதேவன்

கேரள இராச்சியத்தில் ஜனாதிபதியின் ஆட்சி பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது. இது சனநாயகக் கொள்கைகளுக்குச் சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதை ஆராய்வதற்கு முன்னர் ஜனாதிபதி அல்லது இந்தியாவின் மத்திய அரசாங்கம் இராச்சிய விவகாரங்களில் நான்குமுறை குறுக்கிடுவதற்கு ஏற்பட்ட சூழ்நிலைகளைக் கவனிப்பது அவசியமாகின்றது.

1. பஞ்சாப் (பாஞ்சால) இராச்சியத்தில் பதவியிலிருந்த கோபிச்சந் பார்கலா மந்திரிசபை 1951-இல் இராஜினாமா செய்தபோது பதில் அரசாங்கம் ஒன்றை நிறுவமுடியாமல் இருந்தது. பஞ்சாப் இராச்சிய தேசாதிபதியின் அறிக்கை இந்திய ஜனாதிபதிக்குக் கிடைத்ததும் அவர் நெருக்கடியான நிலைமையைப் பிரகடனம் செய்து இராச்சியத்தின் நிருவாகத்தை ஏற்கவேண்டியதாயிற்று.

2. 'பி' பிரிவு இராச்சியமான பஞ்சாப் கிழக்கு பத்தியாலா கூட்டு இராச்சியத்தில் (Pepsu) 1952 இல் பதவியிலிருந்த காங்கிரஸ் அரசாங்கம் பெரும்பான்மை ஆதரவை இழந்ததும் ஒரு கூட்டு (அல்லது கலப்பு) மந்திரிசபை பதவியேற்றது. சட்டசபையில் இருந்த பல சிக்கல்கள் காரணமாக மந்திரிசபையினால் கடமையாற்ற முடியவில்லை. சட்டசபையைக் கலைத்து ஜனாதிபதி ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

3. ஆந்திரா இராச்சியத்தில் 1954 நவம்பரில் திரு. பிரகாசம் தலைமையிலிருந்த மந்திரிசபை சட்டசபையில் பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டது. தொடர்ந்து ஒரு பாதுகாப்பு அரசாங்கமாக இம் மந்திரிசபை கடமையாற்றுவதற்கு உடன்படாதமையால் மத்திய அரசாங்கம் ஆந்திரா இராச்சியத்தின் நிருவாகப் பொறுப்பை ஏற்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

4. திருவாங்கூர்—கொச்சின் இராச்சியத்தில் 1956 இல் பதவியிலிருந்த மந்திரிசபை சட்டசபையின் நம்பிக்கையை இழந்ததும், புதிய மந்திரிசபை அமைக்கப்படும்வரை ஜனாதிபதியின் ஆட்சி நடைமுறையில் இருந்தது.

### ஐந்தாவது குறுக்கீடு

இப்பொழுது கேரள இராச்சியத்தில் மத்திய அரசாங்கம் குறுக்கிட்டு சட்டசபையையும் மந்திரிசபையையும் கலைத்து ஜனாதிபதியின் ஆட்சியைப் பிரகடனம் செய்திருப்பது மத்திய அரசாங்கத்தின் ஐந்தாவது குறுக்கீடாகும். கேரளத்தில் உருவாகியிருந்த நிலைமை மேற்கூறிய நான்கு இராச்சியங்களிலும் ஏற்பட்டிருந்த நிலைமைகளிலும் பார்க்க வித்தியாசமானதாகவே இருக்கின்றது. இங்கு பதவியிலிருந்த கொம்யூனிஸ்ட் அரசாங்கம் சட்டசபையின் நம்பிக்கையை இழக்கவும் இல்லை; ஓர் அரசாங்கத்தை நிறுவமுடியாத நிலைமையும் ஏற்படவில்லை; அரசியல் திட்டத்திற்கு விரோதமாக இராச்சிய அரசாங்கம் கடமையாற்றவும் இல்லை.

கேரள கொம்யூனிஸ்ட் அரசாங்கத்தின் கல்வி மசோதாவை எதிர்த்து அரசியல் சட்டத்திற்கு விரோதமாக வலோற்கார முறைகளில் கிளர்ச்சிகள் ஆறுவார காலம் வரை நிகழ்ந்தமையால் மத்திய அரசாங்கம் கேரளத்தில் குறுக்கிட்டிருக்கின்றது. கேரளத்தில் ஒரு காங்கிரஸ் அரசாங்கம் பதவியிலிருக்கும்போது இந்நிலைமை உருவாகி இருந்தால் மத்திய அரசாங்கம் குறுக்கிட்டிருக்குமா? என்பதையும் நாம் சிந்திக்க வேண்டும். கேரளத்தில் ஒரு பிரதான எதிர்க்கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சியும் இந்த ஆர்ப்பாட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டிருந்திருக்கின்றது என்பதையும் நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். இதனால் மத்திய அரசாங்கம் தலையிடுவதற்கு கேரளத்தில் உருவாகிய நிலைமைக்கு காங்கிரசும் (ஏனைய எதிர்க்கட்சிகளுடன்) பொறுப்புடையதாகவே இருந்திருக்கின்றது.

### புத்தியான செயலல்ல!

மத்திய அரசாங்கத்தின் ஆலோசனைப்படி கேரள முதலமைச்சர் திரு. நம்பூதிரிப்பாத் கல்வி மசோதாவை தற்காலிகமாக நிறுத்தி வைத்து எதிர்க்கட்சிகளை ஒரு வட்டமேசை மகாநாட்டுக்கு வருமாறு விடுத்த அழைப்பை எதிர்க்கட்சிகள் மறுத்தது புத்திசாலித்தனமான செயலாகத் தோன்றவில்லை. இம் மாநாட்டிற்கு இவர்கள் சென்று ஒரு முடிவுக்கு வரமுடியாதநிலை ஏற்பட்டிருந்தாலும் கூட எதிர்க்கட்சிகளுக்கு பொது மக்களின் ஆதரவும் அனுதாபமும் கூடிய அளவில் கிடைத்திருக்குமல்லவா?

மத்திய அரசாங்கத்தின் குறுக்கீடுக்கு வேறு காரணங்கள் — கேரள அரசாங்கம் இடைத்தவணைப் பொதுத் தேர்தலுக்கு உடன்படாததாகும் என்றும், கேரள இராச்சியத்தின் தேசாதிபதி ஜனாதிபதிக்கு சமர்ப்பித்த அறிக்கையும் என்றும் கூறப்பட்டிருக்கின்றது. ஜனநாயகரீதியில்பார்க்கப்போனால் சட்டசபையின் நம்பிக்கை இருக்கும்வரை ஓர் அரசாங்கம் இடைத்தவணைப் பொதுத் தேர்தலுக்கு உடன்படத் தேவையில்லை. தேசாதிபதி பதவியிலிருக்கும் இராச்சிய மந்திரிசபையின் ஆலோசனையைப் பெறாமல் தனிப்பட்ட முறையில் ஜனாதிபதிக்கு அறிக்கையை அனுப்புவது அரசியல் திட்டத்திற்கு விரோதமான செயல் என வாதிப்பதற்கு இடமிருக்கின்றது.

எனவே, சனநாயக தத்துவங்களின்படி ஆராயும்போது கேரள இராச்சியத்தில் மத்திய அரசாங்கம் குறுக்கிட்டது தவறான செயல் என்றே கொள்ள வேண்டி இருக்கின்றது.

### 356 ஆவது பிரிவு

இந்திய அரசியல் திட்டத்தின் 356 ஆவது பிரிவுப்படி மத்திய அரசாங்கம் முதன்முதலாகக் குறுக்கிட்டிருக்கின்றது. இப்பிரிவின்படி ஒரு இராச்சியத்தில் அரசியல் திட்ட விதிகளின்படி அரசாங்கத்தை நடத்துவது சாத்தியமற்றது என்று தேசாதிபதி சமர்ப்பிக்கும் அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு, ஜனாதிபதி கருதினால் அவர் குறுக்கிட்டு எல்லா அதிகாரங்களையும் ஏற்றுக்கொள்ளலாம். இப்பிரகடனத்தை இந்தியாவின் மத்திய பாராளுமன்ற இரு சபைகளும் இரண்டுமாத காலத்துக்குள் அங்கீகரிக்கவேண்டும். இந்த நெருக்கடி நிலைமைப் பிரகடனத்தை ஆறுமாதங்களுக்கு ஒரு முறையாக மூன்று வருடங்கள் வரைதான் மத்திய பாராளுமன்றம் நீடித்துவைக்க அதிகாரமுடையதாக இருக்கின்றது.

எதிர் காலத்தில் இந்தியாவில் ஒரே கட்சி மத்திய அரசாங்கத்திலும் இராச்சியங்களிலும் பதவி வகிக்க முடியாத நிலைமை ஏற்படுவது சாத்தியம். (இப்பொழுது ஒரிசா இராச்சியத்தில் ஒரு கூட்டு மந்திரிசபை கடமையாற்றுகின்றது). இந்நிலை ஏற்படும் பொழுது இப்போது கேரளத்தில் ஒரு பொறுப்புள்ள அரசாங்கத்தைக் கலைத்ததுபோல் மத்திய அரசாங்கம் குறுக்கிடுவதற்கு இது வழி காட்டும் ஒரு நிகழ்ச்சியாக அமைந்துள்ளது. ஜனநாயகத்தை பொறுத்தவரையில் இது துர் அதிர்ஷ்டமான தொன்றாகும்.

கேரளத்தில் குறுக்கிட்ட முறையினால் இந்தியக் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டுள்ள நன்மை தீமைகளை அடுத்த பொதுத் தேர்தலில் தான் அறிய முடியும். எதிர்க்கட்சியினரும் இக்குறுக்கீட்டை காங்கிரஸ்மீது ஒரு கண்டனப் பாணமாகத் தொடுப்பதற்கு தயங்கவே மாட்டார்கள்.


## கலாநிலையப் பதிப்பகம்

## தினக் குறிப்பு - 1960.

**1960** ஆம் ஆண்டுக்குரிய புதிய தினக்குறிப்புகளை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதை உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

எமது தினக்குறிப்புடன், மாணவர்களுக்கென பிரத்தியேகமான தினக்குறிப்பையும் வெளியிடுகின்றோம். இவ்விரு தினக் குறிப்புகளுக்கும் விளம்பரங்கள் அனுப்புவதுடன் தங்களுக்கு எத்தனை பிரதிகள் தேவை என்பதையும் அறிவிக்குமாறு வேண்டுகின்றோம்.

எமது தினக்குறிப்பின் விலை வழக்கம்போல் **75** சதம் தான்

விபரங்களுக்கு பின்வரும் விலாசத்திற்கு எழுதுக.

தினக்குறிப்பு 1960,
த. பெ. எண் 49,
யாழ்ப்பாணம்.

இங்கே வெட்டவும்

மனேஜர் :
கலாநிலையப் பதிப்பகம்
த. பெ. எண் : 49.
சிவன் கோவில் மேலவீதி,
யாழ்ப்பாணம், : : [இலங்கை.]

1960ஆம் ஆண்டு பொது மாணவர்களுக்கான தினக்குறிப்பில்.................... பிரதிகளை எமது பெயரில் பதிவு செய்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம். இத்துடன் முற்பணமாக ரூபா...................... அனுப்பிவைத்துள்ளோம்.

எமது பெயரும் முகவரியும் பின்வருமாறு :

பெயர் :......................................................................

முகவரி :......................................................................

......................................................................


**கண்ணோட்டம் 12**

## மாணவர்களிடையே விழிப்புணர்ச்சி

பிரதிநிதிகள் சபையிற் சென்ற வாரம் சனப்பிரதிநிதிகள் கேவலமான முறையில் நடந்து, நாட்டின் மதிப்புக்கே பெரும் இழுக்கைத் தேடிக்கொண்டனர். ஒருவரை ஒருவர் தகாத வார்த்தைகளிற் பேசுவதும் கதிரைகளைத் தூக்கி ஒருவரையொருவர் தாக்க முற்படுவதும் பள்ளிக்கூட மாணவர் சங்கக் கூட்டங்களிலும் இந்நாட்களிற் காண்பதரிது. தொழில் இன்றித் திரிபவர்களுக்குப் பொறுப்புணர்ச்சி இல்லாதிருக்கலாம். ஆனால் பொறுப்புள்ள மந்திரிமாரும் எம். பீக்களும் கூட இப்படி நடந்து கொள்வதென்றால்......

பிரதிநிதிகள்சபையினர் இவ்விதம் கேவலமான முறையில் நடந்துகொண்ட செய்தி வருத்தமளிப்பதாயினும் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச்சி மகிழ்ச்சி அளிக்கின்றது.

ஸ்ரேயல் கல்லூரி, நாளந்தாக் கல்லூரி முதலிய கல்லூரி மாணவர்களின் சமூகசேவைகளைப்பற்றித்தான் இங்கு குறிப்பிடுகின்றோம். இம் மாணவர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று ஆக்க வேலைகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். மண்வெட்டி கையிலெடுத்து நிலத்தைப் பண்படுத்துகின்றனர். கிராமப்புறத்து மக்களுக்கு நல்லதொரு முன்மாதிரியாகத் தாம் விளங்கவேண்டுமென்ற ஆர்வம் அவர்களுடைய செயல்களில் தலையோங்கி நிற்கின்றது. இம்மாணவர்கள் கிராமப்புறங்களைச் சீர்திருத்த எடுத்துள்ள முயற்சிபற்றிச் சிந்திக்கும்பொழுது, தமிழ்ச்சமூகத்தை நோக்கி நிற்கும் 'ஹரிஜன'ப் பிரச்சினைக்கும் இதுவொரு நல்ல விடைகாணுமென்ற எண்ணமே தோன்றுகின்றது.

'தாழ்ந்த சாதி மக்கள்' என ஒதுக்கப்படும் மக்களின் நிலை நமது சமூகத்திற்கே அவமானத்தைப் பெற்றுத் தந்துள்ளது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. அம்மக்களுக்காகவும், அவர்களின் உரிமைகளுக்காகவும் போராடப் பல அரசியல் தலைவர்கள் முன்வந்துள்ளனர். ஆனால், ஒரு தலைவரேனும் அம்மக்களின் நிலையைச் சீர்திருத்த எவ்விதமான திட்டங்களையும் வகுத்து, அவற்றைச் செயலாற்ற முற்பட்டதாகத் தெரியவில்லை. அத்தகையவர்களுக்கு இம் மாணவரின் முயற்சி ஒரு முன்மாதிரியாகும்.

ஹரிஜனமக்களின் வாழ்க்கை அறிவொளிபெறாத இருள் சூழ்ந்த வாழ்க்கையாகவே விளங்குகின்றது. இந்த இருளை அகற்றி அவர்கள் வாழ்வில் ஒளியைப் புகுத்துவதாயின், அவர்கள் வாழும் கிராமங்களுக்குச் சென்று, அவர்களுக்கு அறிவூட்ட வேண்டும். அவர்களுக்குச் சுகவாழ்வின் அவசியத்தை வற்புறுத்தவேண்டும். அவர்களும் இலங்கைச் சமூகத்தின் தன்மானமுள்ளவொரு பகுதியினராக, 'மனிதர்' ஆக வாழ வழிவகுக்க வேண்டும். இந்தச் சீர்திருத்தப்பணியில் கல்லூரி மாணவர்கள் முதலில் ஈடுபடவேண்டும்.

இலங்கை மாணவர்களைப்பற்றிப் பொதுவான ஓர் அபிப்பிராயத்தை அண்மையில் இப்பந்திகளில் தெரிவித்தபொழுது, அவர்களிடையே ஒழுங்கீனம் அதிகரித்து வருவதெனக் குறித்திருந்தோம். ஆனால், இப்பொழுது, கல்லூரி மாணவர்கள் நல்ல முயற்சிகளில் ஈடுபட்டுவருவது மகிழ்ச்சிக்குரியதொன்று.

# இந்தி மொழியை அரசாங்கம் திணிக்கமாட்டாது

இந்திய அரசியல் திட்டத்தின் எட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் மொழிகளுடன் ஆங்கிலமும் சேர்க்கப்படவேண்டும் என பிராங்க் அந்தோனி கொண்டுவந்த பிரேரணை குறித்து லோக சபையில் பிரதமர் ஜவஹர்லால் நேரு பேசுகையில் "ஆங்கிலம் இந்தியாவில் இணையான அல்லது மேலதிகமான மொழியாகத் தொடர்ந்து ஒரு வரையறுக்கப்படாத காலத்திற்கு அல்லது இந்தி மொழியைப் பேசாத மக்கள் விரும்பும் வரை இருந்து வரும்" எனக் கூறியிருக்கிறார். ஆங்கிலம் எவ்வளவு காலத்துக்கு ஒரு இணைமொழியாக இருந்து வரவேண்டும் என்பதை இந்தி பேசாத மக்களின் தீர்மானத்துக்கே விடவேண்டும் என அவர் வற்புறுத்தியிருக்கிறார்.

இந்திய அரசாங்கம் இந்தி மொழியை அதனை விரும்பாத மக்கள்மீது திணிக்க மாட்டாதெனவும் நேருஜி கூறியுள்ளார்.

### பம்பாயில் ஆர்ப்பாட்டம்

இந்தியா மொழிவாரி இராச்சியங்களாக 1956 நவம்பர்மாதத்தில் பிரிக்கப்பட்டபோது பம்பாய் இராச்சியம் (மராட்டி, குஜராத்தி ஆகிய) இருமொழி இராச்சியமாக அமைக்கப்பட்டது. குஜராத்தி பேசும் மக்கள் தமக்கு ஒரு தனி இராச்சியம் வேண்டும் என்று கிளர்ச்சிகள் செய்தும் ஆர்ப்பாட்டங்களை நடாத்தியும் வருகின்றனர். சென்ற ஞாயிற்றுக்கிழமை பம்பாயில் பல இடங்களில் பொலிஸ்காரருக்கும் ஆர்ப்பாட்டக்காரருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டதாகச் செய்தி வெளியாகி இருக்கின்றது.

## இந்தியா

### கேரளத்தில் அமைதி

கேரளத்தில் அமைதி நிலவுகின்றது. கேரளத்தின் தேசாதிபதி திரு. இராமக்கிருஷ்ணரால் புதுடில்லியில் மத்திய அரசாங்கத்துடன் ஆலோசனைகள் நடாத்த வருகின்றார். இந்தியத் தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. வி. கே. சுந்தரம் கேரளத்திற்குச் சென்று பல்வேறு தொகுதிகளின் வாக்காளர் பட்டியல்கள் புதுப்பிக்கப்படுவதை மேற்பார்வை செய்து வருகின்றார்.

புதுடில்லியில் லோக சபையிலும் இராஜ்ய சபையிலும், இந்திய அரசாங்கம் கேரளத்தின் தேசாதிபதி ஜனாதிபதிக்குச் சமர்ப்பித்த அறிக்கையின் பிரதியை வெளியிட மறுத்தபோது கொம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தவர்கள் சபைகளிலிருந்து வெளியேறித் தங்கள் எதிர்ப்பைக் காட்டியுள்ளனர். கொம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாக சபை கேரளத்தில் மத்திய அரசாங்கம் குறுக்கிட்டதை வன்மையாகக் கண்டித்து அது ஜனநாயகத்துக்கு முரணான செயல் என்றும் எடுத்துரைத்து ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது.

இடைக்காலப் பொதுத்தேர்தலில் கொம்யூனிஸ்ட் கட்சி வெற்றி பெற்றால் அக்கட்சியே அரசாங்கத்தை அமைத்து நடாத்துவதற்கு மத்திய அரசாங்கம் அனுமதி அளிக்கும் எனப் பிரதமர் நேரு உறுதியளித்திருக்கிறார்.


விலை சகாயமான இடம்:-

★ அச்சு, எழுத்து, கட்டுவேலைகளுக்கான பேப்பர்
★ டச்சு ஸ்ரோ போர்ட்டுகள்
★ வான்கார்ட் போர்ட்டுகள்
★ என்வலப்புகள்
★ அச்சடிப்பதற்கும் இலக்கங்கள் பொறிப்பதற்குமான மை
★ அச்சுத்தொழிற் பொருள்கள்
★ ரூலர் கொம்போசிஷன்
★ பைண்டிங் துணி
★ பைண்டிங் நூல் முதலியன
★ ஸ்டேஷனரீ

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்களது விண்ணப்பங்களை நாங்கள் வரவேற்கிறோம்

பதிப்பகங்களுக்கு விசேஷ சலுகைகளுண்டு.

விபரங்களுக்கு 4114க்குப் போன் செய்யுங்கள் அல்லது கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

வை. பி. எம்.

மாணிக்கவாசகநாடார் அன் கோ,

பேப்பர் வியாபாரிகள்

இல. 58, மலிபான் வீதி, கொழும்பு—11

போன் 4114 த. பெ. இல. 1400 தந்தி: "பேரின்பம்"


# குருஷேவ் ஐஸனேவர் சந்திப்பு லாவொஸ் எல்லையில் படைகள்

ருஷியாவில் பிரதமர் குருஷேவ்செப்டம்பர் மாதம் 15-ம் திகதியளவில் ஐக்கிய அமெரிக்காவுக்கு விஜயஞ் செய்து இரண்டு வார காலத்தைக் கழிப்பார் என்ற செய்தியையும் அமெரிக்க ஜனாதிபதி திரு ஐஸன்ஹோவர் இலையுதிர் காலத்தில் ருஷியாவுக்கு விஜயஞ்செய்து சில நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்வார் என்ற செய்தியையும் உலகின் பல நாட்டுத் தலைவர்களும் வரவேற்றிருக்கின்றனர். குருஷேவ்-ஐசன்ஹோவர் சந்திப்பு உலக சமாதானத்திற்கு உகந்த சூழ் நிலையை உருவாக்கி கெடுபிடி யுத்தத்தையும் தணியச் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜனாதிபதி ஐஸன்ஹோவர் இம்மாதம் 27 இல் மேற்கு ஜேர்மனிக்கும், 28 இல் லண்டன் மாநகருக்கும், செப்டம்பர் 2 இல் பாரிசுக்கும் விஜயம் செய்து மேற்கு வல்லரசுகளின் தலைவர்களோடு பேச்சுவார்த்தைகள் நிகழ்த்திவிட்டு அமெரிக்காவிற்குத் திரும்பிய பின்னர் ருஷிய பிரதமரை வரவேற்பார்.

ருஷியாவுக்கும் போலந்துக்கும் விஜயஞ் செய்துவிட்டு அமெரிக்காவுக்குத் திரும்பியிருக்கும் உப ஜனாதிபதி திரு நிக்ஸன் இச்சந்திப்பினால் மிதமிஞ்சிய நன்மைகள் ஏற்படும் என எதிர்பார்க்கக் கூடாது என்று கூறியிருக்கின்றார்.

### செயற்கைக் கிரகம்

ஐக்கிய அமெரிக்கா சென்ற வாரம் வானவெளிக்கு அனுப்பிய "எக்ஸ் புளோரர் 6" என்ற செயற்கைக் கிரகம் வளி மண்டல நிலைமைகள் பற்றிய விபரங்களை அனுப்பிவருகின்றது. இது செல்லும் பாதையின் ஆகக்கூடிய தூரம் பூமியில் இருந்து சுமார் 27, 000 மைல். பூமியின் வர்ணப் படங்களையும் எடுத்து தொலைக்காட்சி மூலம் இக்கிரகம் அனுப்பிவருகின்றதாம்!

உலகின் எந்தப் பாகத்திலாவது அணுக்குண்டு வெடித்தால் அல்லது "ரொக்கெற்" அனுப்பப்பட்டால் அவதானித்துத் தெரிவிக்கக் கூடிய 'ரடார் கருவியை' உருவாக்கி இருப்பதாக அமெரிக்க விஞ்ஞானிகள் அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

இப்பொழுது வான வெளியில் ஐந்து அமெரிக்க செயற்கைக் கிரகங்களும் ஒரு ருஷிய "ஸ்புட்னிக்கும்" பூமியை வலம் வந்த வண்ணம் இருக்கின்றன.

### லாவொஸ் போர் நிலைமை

வடக்கு வியற்நாமைச் சேர்ந்த கொம்யூனிஸ்ட் படைகள் லாவொஸ் எல்லையை அடுத்திருக்கும் சில பகுதிகளைக் கைப்பற்றியுள்ளன. 4000 துருப்புகள் வரை லாவொஸ் எல்லையில் குழுமியிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. லாவொஸைச் சேர்ந்த 300 போர் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். லாவொஸில் பிறநாட்டுப்படைகள் நேரடியாக குறுக்கிடுவதை வட வியற்நாம் ஆக்கிரமிப்புச் செயலாகக் கருதும் என எச்சரிக்கை செய்திருக்கின்றது. வடக்கு லாவொஸில் இராணுவப்பலம் அதிகரிக்கப்படுகின்றது.

## உலக நிலை

### அல்ஜீரியா

லைபீரியாவில் நடைபெற்ற ஒன்பது ஆபிரிக்க நாடுகள் மகாநாடு அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்றும், பிரெஞ்சு அரசாங்கம் சுதந்திர அல்ஜீரியா அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள வேண்டும் என்றும் வற்புறுத்தி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றது.

பிரெஞ்சு ஜனாதிபதி ஜெனரல் டீகோல் அடுத்த சில நாட்களில் அல்ஜீரியாவுக்கு விஜயம் செய்ய இருக்கின்றார்.

### கியூபா

பிரதமர் பிடெல் கஸ்ரோவுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு பல இராணுவ உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு நடைபெற்ற ஒரு சதித்திட்டம் அரசாங்கத்தால் முறியடிக்கப்பட்டிருக்கிறது.

### வெள்ளப் பெருக்கு

போர்மோசாவிலும் தெற்கு யப்பானிலும் கடும்புயல் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கின்றது. போர்மோசாவில் 1000 பேர் உயிரிழந்துள்ளனர் அல்லது காணமற்போய்விட்டனர் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### நியாசலாந்து

லைபீரியா[illegible] மாநாடு நடாத்தும் ஒன்பது [illegible]க நாடுகள் நியாசலாந்து[illegible] சுதந்திரம் வழங்கப்பட [illegible]ண்டும் என்றும் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றன. நியாசலாந்தில் நெருக்கடி நிலைமைப் பிரகடனம் இன்னும் நடைமுறையில் இருந்துவருகின்றது.

## பூஜ்யம் தபால்

தோழர் குருஷேவ்
பிரதம மந்திரி
மொஸ்கோ.

தோழரே!

மொஸ்கோவிலே, அமெரிக்க கைத்தொழில் காட்சியைப் பார்க்கையில் தாங்கள் நிக்ஸனைக் கிண்டல் செய்ததாகக் கேள்விப்பட்டேன்.

அங்கு சில கருவிகள், தாமாக வீடுபெருக்கின. பாத்திரங்களைக் கழுவின. இன்னும் சில பணிகளைச் செய்தன. இதைத் தாங்கள் கண்டதும், "நம் வாயிலே சாப்பாட்டைத் தாணுகப் போடும் கருவி ஏதாவது உள்ளதா?" என்று ஒரு குத்தல் விட்டீர்கள்.

இந்த யோசனை புதிதல்ல ஹாஸ்ய நடிகரான சார்லிசப்ளின் ஒரு படத்திலே, சாப்பாட்டை வாயில் ஊட்டும் ஒரு கருவியைச் செய்து காட்டினர். ஒரு நாற்காலியில் உட்கார்ந்து அவர் வாயைத் திறந்து கொண்டு, மேசையிலிருந்த ஒரு பித்தானை அழுத்தினர். உடன் இரு செயற்கைக்கைகள் வாயில் ரொட்டியைக் கொண்டு வந்து போட்டன. திடீரென அந்தக் கருவிக்கு ஏதோ பழுது வந்துவிட்டது. 'பட பட சட் புட' என்று ரொட்டி, வெண்ணெய், ஜாம், எல்லாம் அவர் வாயிலும் முகத்திலும் அடித்து அபிஷேகம் செய்துவிட்டது. ஒரே வேடிக்கை!

இந்தக் கருவியும் அமெரிக்காவில் இருக்கலாம். தாங்கள் அடுத்தமாதம் அங்குச் செல்லுகையில் ஜனாதிபதி அளிக்கும் விருந்திலே இதைத் தங்களுக்கு வைக்கவும் கூடும்! ஆகவே உஷார்!

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு:—

தாங்கள் அமெரிக்கா செல்லுகையில் தங்கள் துணைவியாரை அழைத்துச் செல்ல உத்தேசமுண்டோ? வேலைக்காரர் கிடைக்காமல், எங்கள் இலங்கையிலேயே பல குடும்பப் பெண்கள் கஷ்டப்பட்டு இறக்குமதியாகும் பல நவீன கருவிகளை வாங்க முற்படுகிறார்கள். அப்படியிருக்க தங்கள் மனைவியாரைப் பற்றிக் கேட்க வேண்டுமா? தங்களுடன் அமெரிக்கா வர தங்கள் மனைவி மிக ஆவலுடன் இருக்கக்கூடும். நிக்ஸன் தமது மனைவியுடன் வந்ததால், தாங்களும் தங்கள் மனைவியாருடன் செல்ல வேண்டுகிறேன். பெண்கள் மூலமாவது, இரு நாடுகளுக்கும் சமாதானம் ஏற்படுமா பார்ப்போம்.

பூஜ்யம்.


VENUS
SOAP
வீனஸ் சோப்

தரத்தில் சிறந்தது, உடைகளை வெண்மையாக்குவது,
அதிக நுரையைத் தருவது
வீனஸ் சோப்
வீனஸ் சோப் தொழிற்சாலை
269, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு ஆடி மீ 30உ (15-8-59)

EELA NADU: National Tamil weekly Post Box 49, Jaffna.
Telegrams EELA NADU Jaffna.
*Colombo Office*: 142, New Bullers Road, Colombo 4. Telephone 84575.


## மகிழ்ச்சி அளிக்கும் பொன்னுள்

பாரத நாடு அரசியல் சுதந்திரமடைந்து இன்றுடனே பன்னிரண்டு ஆண்டுகள் முடிந்து பதின்மூன்ரும் வருஷம் ஆரம்பமாகின்றது.

அன்னையின் விடுதலைவிழா, அண்டையிலுள்ள குழந்தைகளுக்கும் விடுதலைவிழாவாகும். இந்தியா சுதந்திரம் அடைந்ததாலேயே, இலங்கை, பர்மா, இந்தோனேஷியா, மலாயா முதலிய நாடுகளும் விடுதலையடைய முடிந்தன. இன்றேல் இலங்கையும் இன்று அடிமைப்பட்டே கிடக்கவேண்டும். ஆகவே இந்த விடுதலைத்திருநாள், இலங்கை முதலிய அண்டை நாடுகளிலுள்ள நமக்கும் மகிழ்ச்சியளிக்கும் பொன்னுள்.

விடுதலை சும்மா கிடைத்துவிடவில்லை. தேச பிதாவான மகாத்மா காந்தி அடிகளின் தலைமையிலே பெண்களும், ஆண்களும், உலகமே இதுவரை கண்டிராத முறையில் அன்பு வழியில், அகிம்சை முறையில் போரிட்டு, அரும்பெரும் தியாகங்களெல்லாம் செய்து, அன்னையின் கைவிலங்குகளைக் கழற்றி வீசினர். "என்றெமதன்னை கைவிலங்குகள் போகும்?" என்று அமரகவி பாரதியார் மனம் குமுறிக் கதறினர். 1947-ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15-ம் நாள் இக்கனவு நனவாயிற்று. ஆகவே இன்று தேசபிதா காந்தி அடிகளையும் நாட்டு விடுதலைக்காக தியாகம் செய்த அனைவரையும் நினைந்து அவர்களுக்கு அஞ்சலி செலுத்தவேண்டும்.

சுதந்திரம் பெற்றதும் பிரச்சினை தீரவில்லை. அதன் பிறகு தான் பெரிய சங்கடங்களும் பொறுப்புகளும் வகுப்புப் பிணக்குகளும், மொழி வெறிகளும், மாகாண எல்லைக் கிளர்ச்சிகளும், பொருளாதார சங்கடங்களும் கிளம்பின. இவற்றையெல்லாம் ஒருவிதமாகச் சமாளித்து, எல்லாரையும் அணைத்துக்கொண்டு, "சத்தியமே ஜெயம்" என்ற பாரத ராஜ்ய சின்னத்தில் குறிக்கப்பட்ட மந்திரத்துக்கிசைய செங்கோல் நடாத்திச் செல்லுகின்ருர், காந்தி அடிகளின் வாரிசான தன்னிகரிலாத நேரு.

நேருஜி, இந்திய மக்களின் நன்மைக்கு மட்டுமன்றி, ஆசிய, ஆபிரிக்க மக்களின் ஒற்றுமைக்கும், உலக சமாதானத்துக்கும் பாடுபடுகின்ருர். பஞ்சசீலக் கொள்கையை உருவாக்கி இதற்கு ஆக்கம் தேடுகின்ருர். ஆனல் புறச்சக்திகள் சில, இந்தியாவையும் அண்டை நாடுகளையும் சேராமல் பிரித்துவிட முயலுகின்றன. இதற்கு இடம் கொடாமல், தாயுடன், சேய்கள் நட்புறவு பூண்டு ஒற்றுமையைப் பலப்படுத்தி, ஒத்துழைத்தாலே, பெற்ற சுதந்திரத்தைக் காத்துக்கொண்டு முன்னேற முடியும். சிற்சில சிக்கல்கள் இருக்கவே செய்கின்றன. பொது நன்மையை முன்னிட்டு, இவற்றை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளப் பாரதநாடு தாராள மனமும் தீர்க்க தரிசனமும் காட்டி, பெற்ற சுதந்திரத்தால், இந்தியாமட்டுமன்றி, இலங்கை முதலிய நாட்டு மக்களும் அமைதியாக முன்னேற வழிகாட்டி உலக சமாதானத்துக்கும் உதவு மென்பதே நமது நம்பிக்கையும் பிரார்த்தனையும். "சத்தியமே ஜயம்" என்ற வேத வாக்கைக் கடைப்பிடிக்கும் பாரத நாட்டுக்கு, என்றும் வெற்றியே கிட்டுமென்பது நிச்சயம். வாழ்க சுதந்திர பாரதம்!

---

## ஆட்சி மொழி: நேருகாட்டும் வழி

எந்த ஒரு மொழியாயினும் சரி மக்கள்மீது அது திணிக்கப்படுவதைத்தாம் எதிர்ப்பதாக லோகசபையில் நேருஜி கூறியிருப்பதை வரவேற்கின்ருேம். ஹிந்தியை கட்டாயத்தின் பேரில் திணிக்கக் கூடாதெனவும், மக்களுக்கு ஆங்கிலம் தேவைப்படும் காலம்வரை அது பொதுமொழியாக இருக்க வேண்டுமெனவும் அவர் கருதுகின்ருர். ஆங்கிலமொழி எவ்வளவு காலம் பொதுமொழியாக இருக்கவேண்டும் என்பதை ஹிந்தி தெரியாத மக்களே முடிவு செய்துகொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தென்னுட்டு மக்கள் ஹிந்தி படிக்க விரும்பவில்லையெனின் அவர்கள் அம்மொழியைப் படிக்க வேண்டியதில்லை யென நேருஜி இன்னும் ஒருபடிமேலே சென்று கூறியிருப்பதையும் இலங்கை அரசாங்கம் இச்சந்தர்ப்பத்திற் கவனிக்க வேண்டும். அதாவது மொழி சம்பந்தமாக அவசரப்பட்டு முடிபுகள் செய்யக்கூடாதென்பது [illegible]ன் நெறி. சிறு[illegible] மக்களின் சம்மதத்[illegible]யே இதைத் தீர்மா[illegible]க வேண்டும்; அப்போது தா[illegible] நிலையான நன்மையை அடையலாம் என்று அவர் உணர்ந்துள்ளார்.

இரு விஷயங்களில் அவர் திட்டவட்டமானகருத்தைத் தெரிவித்திருப்பதை மீண்டும் நினைவூட்ட விரும்புகின்ருேம். 1-ஹிந்தியைத் திணிக்கக் கூடாது. 2-ஆங்கிலமும் காலவரையின்றி இருந்துவரவேண்டும். நேருஜியின் நண்பன் எனக் கூறிப் பெருமை கொள்ளும் பிரதமர் பண்டாரநாயக்கா இலங்கையின் மொழிச் சிக்கலைத்தீர்ப்பதற்கு இந்தியப் பிரதமரின் கொள்கைகளைக் கடைப்பிடித்தால் நாட்டில் அமைதியையும் மக்களிடையே ஓரளவு நம்பிக்கையையும்ஏற்படுத்தலாம். சிங்களத்தைச் சட்டமூலம் திணிப்பதற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணத்திலுள்ள பல கல்லூரிகளில் சிங்களம் போதிக்கப்பட்டு வந்தது. எப்போது அரசினர் சிங்களத்தைத் தமிழ் மக்கள் மீது திணிக்க முற்பட்டனரோ அப்போதே கல்லூரிகளிற் சிங்களம் பாடமாகப் பயிற்றுவது கை விடப்பட்டது.

சிறுபான்மையினரின் உணர்ச்சிகளை மதியாது அரசினர், ஆங்கிலத்தை விட்டு இலக்கத் தகடுகளில் தனிச்சிங்களத்தைப் பொறிக்கத் தொடங்கியதும் அரசாங்க கடித உறைகளில் அரசாங்க அலுவலக அதிகாரிகளின் பெயர்களையும் சிங்களத்தில் மட்டுமே பொறிப்பதும் தமிழ் மக்களுக்கு ஆத்திரமூட்டுவதாகும்.

சிங்களம் மட்டும் சட்டத்தை அவசரப்பட்டு நிறைவேற்றி அதனை ஒரு தலைப்பட்சமாக நடைமுறைக்குக் கொண்டு வந்த பலனைப் பிரதமர் வெளியிலே சொல்லாவிடினும் உள்ளூர உணர்ந்திருந்திருக்க வேண்டும். தீவிர கருத்து வேற்றுமைக்கான விஷயங்களைத் தமது அரசாங்கம் கொண்டு வர மாட்டாதென அறிவித்துள்ள பிரதமர், மொழி சம்பந்தமான இக் கொள்கைகளைக் கடைப் பிடித்தல் அவருக்கு மட்டுமன்றி நாட்டுக்கும் நன்மை பயக்கும்.

மொழிச் சட்டத்தில் ஆங்கிலத்தைப் பற்றி ஒரு வார்த்தை தானுமில்லை. ஆனல் மறு உத்தரவுவரை பழைய ஏற்பாடு நீடித்திருந்து வருமெனப் பிரதமர் உத்தரவு பிறப்பித்தார். அதாவது பொது மொழியான ஆங்கிலம் உபயோகிக்கப்படுமென்ற கருத்தில். ஆனல் திடீரெனப் பொது மொழியான ஆங்கிலத்தைத் தள்ளி விட்டுச் சிங்களம் மட்டும் பலதுறைகளில்திணிக்கப் படுகின்றது. இச் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதைப் போன்றது.

புதிதாகச் சுதந்திரமடைந்த நாட்டில் ஆக்க வேலைகள் எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளன. அவற்றை நிறைவேற்ற முடியாமல், மொழிச் சிக்கல் குறுக்கே நிற்கின்றது. மொழி வெறியர்களின் கூச்சல்களுக்குச் செவி சாய்க்காமல் நேருஜி மொழி சம்பந்தமாகக் கடைப் பிடிக்கும் மேலான கொள்கையைப் பிரதமர் பண்டாரநாயக்காவும் இங்கு தைரியத்துடன் பின் பற்றுவாரா? ஆனல் பிரதிநிதிகள் சபையில் அவர் இவ்விஷயமாக அளித்துள்ளபதில் நம்பிக்கை அளிப்பதாக இல்லை.

இவ் விஷயத்தில் இந்தியாவை விட இலங்கை அதிர்ஷ்டசாலி. இங்கு ஆங்கிலம் உட்பட மூன்றே மொழிகள் தாம் உள. இதனல் சிக்கலோ மிகக் குறைவு. இம் மூன்று மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அங்கீகரிப்பதே இச் சிக்கலைச் சுமுகமாகத் தீர்க்க உகந்த வழி.

---

## உலகுக்கு நன்மையே

வருகிற செப்[illegible]ம்பர் மாதம் ருஷிய [illegible] மந்திரி குருஷே[illegible] அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதையும், பின்னர் அமெரிக்க ஜனதிபதி ஐசனேவர் ருஷியா செல்வதையும் உலகில் எல்லா நாடுகளும் வரவேற்கின்றன. (புது சீனத்தின் கருத்து தெரியவில்லை. இவ்விரு தலைவர்களின் சந்திப்பின் பயனுக, புது சீனத்துக்கும் ஐ. நா. சபையில் இடம் கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்.)

இரு வல்லரசுகளிடமும் பயங்கர ஆயுதங்களுள்ளன. இரண்டுக்கும் யுத்தம் மூண்டால், பெரும் நாசம்தான் என்பதை இரு சார்பினரும் உணர்ந்துள்ளனர். என்ருலும் யுத்த முஸ்தீபுகளை இரு சார்பினரும் போட்டா போட்டிகளுடன் செய்துகொண்டு போகிருர்கள். பரஸ்பர பீதியும், சந்தேகமுமே இதற்குக் காரணமாகும். இந்த பீதியும், சந்தேகமும் இரு தலைவர்களின் சந்திப்பால் ஓரளவாவது குறைந்து, யுத்த ஆபத்து அகற்றப்படுவதாயின் அது வரவேற்கத் தக்கதேயாகும்.

கம்யூனிஸ்ட் ஏற்பாடுதான் மிகவும் சிறந்ததென்பதும், தங்கள் நாட்டில் வேலைநிறுத்தம், வேலையில்லாக் கஷ்டம் எதுவுமே கிடையாதென்றும் ருஷியா நினைக்கலாம். ஜனநாயக முதலாளித்துவ ஏற்பாட்டில் ஒவ்வொருவருக்கும் சுதந்திரமிருப்பதாயும், மக்களின் வாழ்க்கைத்தரம் பெரிதும் உயர முடிவதாயும் அமெரிக்கா கூறலாம். இரண்டிலும் குணதோஷங்கள் உள. இரு சார்பினரும் பீதிகளை விட்டு, நெருங்கிக் கலந்து பேசினல், இருவரும் பரஸ்பரம் நன்மையடைந்து, தக்க மாறுதல்களைச் செய்து கொள்ளவும் இடமேற்படும். இருதலைவர்களும் பேசுவார்களேயன்றி பேச்சு வார்த்தை நடாத்த மாட்டார்களென்று அறிவிக்கப்படுகிறது. முதலில் பேசுவது, நல்லெண்ண சூழ் நிலையை ஏற்படுத்தவும் பிறகு நடக்கும் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறவும் வழி செய்யலாம். எப்படியும் இரு தலைவர்களும் விரைவிற் சந்திப்பது, உலகுக்கு நன்மையேயன்றி தீமையல்ல.

---

## குண்டசாலையில்

குண்டசாலை விவசாயக் கல்லூரியிலிருந்து தமிழ் மாணவர்கள் வெளியேறவேண்டிய நிலைகுறித்து நாம் வியப்படையவில்லை. சில அரசியல் தலைவர்கள் வகுப்புத் துவேஷப் பிரசாரங்களை நாட்டிலே வெகுவாகத் தடையின்றி செய்துவருகையில் அது கல்லூரி மாணவர்களிடையிலும் பரவுவது இயற்கை.

அங்குவகுப்புத்துவேஷத்தை விடுதி, வார்டனே கிளப்பிவிட்டதாகப் புகார் கூறப்படுகின்றது. இதுகுறித்து விவசாய அமைச்சர், விசாரணை நடத்த ஓர் அதிகாரியைஅனுப்பிவைத்துள்ளதாகத்தெரிகிறது. இவ்விசாரணையின் பயனுக, குற்றவாளிகள் கண்டிக்கப்பட்டு தமிழ் மாணவர்கள் அங்கு திரும்பி, நிம்மதியாக இருந்து தொடர்ந்து பயிற்சிபெற வெகு சீக்கிரத்தில் வழி பிறக்குமா?

ஆனல், தொழில்நுட்பக் கல்லூரி, ஆசிரிய பயிற்சிக்கல்லூரி இவ்விஷயமாகக் கல்வி அமைச்சர் வகுப்புப் பிரிவினைக் கொள்கையைக் கடைப்பிடித்து வருகின்ருர். இந்தக் கொள்கை குண்டசாலை விவசாயக் கல்லூரிக்கும் பரவுகின்றது போலும். இந்தக் கொள்கை சமூக வேற்றுமைகளைப் பலப்படுத்தி, துவேஷஉணர்ச்சிகளுக்குத் தூபம் போடுவதாகும். குண்டசாலைச் சம்பவங்கள் இனி இத் தீவில் எங்கும் நடைபெருமல் தடுத்து, மாணவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்த வேண்டுமாயின், முதலில் கல்வி அமைச்சர் போன்றவர்கள், தங்களது பிரிவினை மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம்.

## ஆறுமாதக் குழந்தை

'ஈழநாடு' இப்போது ஆறுமாதக் குழந்தை: தவழும் பருவம். இவ்வாரத்துடன் ஏழாவதுமாதம் பிறக்கின்றது. குறை குற்றங்கள் எவ்வளவோ என்ருலும் அதையெல்லாம் வெகுவாகப் பொருட்படுத்தாமல், அன்புடனே ஆதரித்து வந்துள்ள அபிமானிகள் அனைவருக்கும் எங்கள் நன்றியும் வணக்கமும்.

ஆறுமாதங்களுக்கு முன் 'ஈழநாடு' ஆரம்பமாவதைக் கேட்டதும், ஒரு தமிழ் அன்பர் இது குறித்து பெரிய அவநம்பிக்கை தெரிவித்தார். "யாழ்ப்பாணத்திலா! புதிய பத்திரிகையா? என்ன தேர்தல் பிரசாரத்துக்கா? இதெல்லாம் நடக்காது. இதற்குமுன் எத்தனையோபேர் முயன்று முயன்று பார்த்தார்கள். முடியவில்லை. இருபது சதம் கொடுத்து யாழ்ப்பாணத்தவர் யாழ்ப்பாணப் பேப்பரை வாங்குவார்களா? ஒருபோதும் வாங்க மாட்டார்கள். எல்லாம் வீண் முயற்சி..." என்று உற்சாகக் குறைவாகக் கவலையுடன் கூறினர்.

மற்ருேர் அன்பர் சொன்னர். "இந்தப் பத்திரிகை ஒரு வருஷம் நீடித்து நடக்குமென்பதற்கு என்ன உத்தரவாதம்? எப்படி நம்பி, ஒருவருஷ சந்தாவைக் கட்டுவது? மூன்று மாதம் அல்லது ஆறு மாத சந்தாவையும் பெற ஒழுங்கு செய்தால் நல்லது" என்ருர்.

ஆறுமாத சந்தாவும் வாங்கத் தான் செய்கிருேம். ஆனலும், சென்ற 27 வாரங்களாக ஒவ்வொரு சனிக்கிழமையும் "ஈழநாடு" மணி தவருமல் ஒழுங்காக வருவதைக் கண்ட மேற்குறித்த நண்பர்களின் சந்தேகங்கள் ஓரளவு நீங்கியுள்ளன. வசதிகள் மிகவும் குறைவான யாழ்ப்பாணத்திலிருந்து, இவ்வித ஒரு பத்திரிகை ஆறுமாத காலமாகத் தவருமல் வருவதைக் கண்டதும், இனியும் இது தொடர்ந்து நடக்குமென்ற நம்பிக்கை அவர்களைப்போல் பலருக்கும் ஏற்பட்டுள்ளது. இதை அறிய நாம் மகிழ்ச்சி அடைகின்ருேம்.

"ஈழநாடு" பத்திரிகையின் கொள்கைஎன்ன? எந்தக் கட்சியை, யாரை ஆதரிக்கின்றது? என்பது மற்ருெரு கேள்வி. இதுவரை "ஈழநாடு" இதழ்களைத் தொடர்ந்து படித்து வந்தவர்களுக்கு இது குறித்த சந்தேகம் ஓரளவு தெளிவாகியிருக்கும். எந்தக் கட்சியையோ, யாரையுமோ, 'ஈழநாடு' சார்ந்ததல்ல. 'யார் சரி!' என்பதைவிட்டு, 'எது சரி!' என்பதையே கவனித்து, குற்றம் கண்டவிடத்து கண்டிப்பதும், குணம் கண்டபோது போற்றுவதுமே 'ஈழநாடு' தனக்கு வகுத்துக்கொண்ட நெறியாகும். பிரிந்து சிதறியுள்ள தமிழரை ஒற்றுமைப் படுத்தி, அவர்களிடையுள்ள குறைகளை நீக்கி, அவர்கள் ஜனநாயக உரிமைகளைப் பெறவும், மற்ற சமூகங்களுடன் சுமுகமாக வாழவும், இந்தியா இலங்கை நட்புறவையும் உலக சமாதானத்தையும் பலப்படுத்தவும் வேண்டுமென்பதே, "ஈழநாடு" கொண்டுள்ள மேலான குறிக்கோள்.

இதற்குப் பாடுபடுமுன் 'ஈழநாடு' தனது குறைகளைப் படிப்படியாக நீக்கிக்கொண்டு, எழுந்து நின்று தன்னை வலுப்படுத்திக்கொள்ள வேண்டிய முக்கிய கடமையுண்டு. இந்தவகையில், அன்பர்கள் பலர் கூறும் நல்ல யோசனைகளும், அளிக்கும் ஆதரவும் நமக்கு எதிர் காலத்தைக் குறித்து அதிக நம்பிக்கையும் உற்சாகமும் அளிப்பதாக இருக்கின்றது.

## யாழ்ப்பாணப் பொது ஆஸ்பத்திரி நிபுணர் மீது லஞ்சப் புகார்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஓர் வைத்திய நிபுணர் லஞ்சப் பணம் வாங்கியுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். இக் குற்றச்சாட்டு வடமாகாண நோயாளிகள் சங்கத்தின் புனருத்தாரணக் கூட்டத்தில் வெளி வந்துள்ளது.

இச்சங்கத்தின் கூட்டம், அண்மையில், உத்தியோகபூர்வமற்ற ஆஸ்பத்திரிப் பார்வையாளரான திரு. எஸ். வைத்திலிங்கத்தின் தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் நோக்கங்கள் பற்றிப் பேசுகையில், நோயாளிகளின் பாதுகாப்பிற்காகவும், அவர்களுடைய மோசமான நிலையைச் சீர் திருத்துவதற்காக முயற்சிகள் எடுப்பதற்காகவுமே இச் சங்கம் ஏற்படுத்தப்பட்டதென அவர் தெரிவித்தார். அத்துடன் விரைவில் தான் சுகாதார மந்திரியைச் சந்தித்து வடமாகாணத்திலுள்ள நோயாளிகளின் குறைகளை எடுத்துக் கூறப் போவதாகவும் அவர் கூறினர்.

## வவனியா தேர்தல்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விஷயமாகவே ஒற்றுமை ஏற்பட முடியாமற் போனதாகத் தெரிகிறது. இன்றுள்ள சூழ்நிலையில், அரசியலில் பாடுபடுவதை விட, தமது கமத்தில் முயற்சி செய்தால் உருப்படியான பலன் கிடைக்குமென்று கருதி, அவர் "அரசியல் துறவு" பெற்று, பார்லிமெண்ட் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று தீர்மானித்து ஒதுங்கி விட்டதாகத் தெரிகிறது. அவரது மனத்தைமாற்ற சிலர் காட்டுக்குள்ளும் சென்று முயன்றபோது, அவர் அவர்களை விரட்டிவிட்டாராம். அவர் பிடிவாதத்தை யாரால் மாற்றமுடியும்?

### சமஷ்டிக் கட்சிக் கூட்டம்

இன்றும் நாளையும் யாழ்ப்பாணத்திலே கூடும் சமஷ்டிக் கட்சி காரிய சபையில் வவனியா இடைத் தேர்தலில் போட்டியிடுவது பற்றியும், யாரை அபேட்சகராக நிறுத்தலாமென்பது குறித்தும் தீர்மானிபபரென்று அறிகிறேன். இவ் விஷயமாக, அரசாங்கத்தில் பெரிய பதவி வகித்த ஒருவரது பெயர் அடிபடுகிறது.

இடைத் தேர்தலில் சமஷ்டிக் கட்சி ஓர் அபேட்சகரை நிறுத்துமென்பது உறுதி. சமீபத்தில் பட்டினசங்கத் தேர்தலில் அக்கட்சிக்குக் கிடைத்த வெற்றியைப் பார்க்கையில், இதற்குப் போட்டியிட மற்றவர் தயங்கக் கூடும்.

வவனியா தொகுதியில் சிங்களவர் கலந்திருப்பதால் சென்ற முறை யு. என். பி கட்சி திரு. தி சநாயக்காவை ஆதரித்து போல், இம்முறையும் அவரை ஆதரிக்கலாமென்றும் சொல்லப்படுகிறது. வருகிற பொதுத்தேர்தலில் 125 தொகுதிகளில்தான் யு. என். பி. போட்டியிடுமாம். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போட்டியிடாதென்று, அக் கட்சியைச் சேர்ந்த ஒரு அங்கத்தவர் தெரிவித்துள்ளார்.

இடது சாரிக் கட்சிகள் யாரையும் இங்கு அபேட்சகராக நிறுத்திப் போட்டியிடுவது சந்தேகமே.

மேலும் இந்தப்பார்லிமெண்ட் சபையின் ஆயுள்கூடிப்போனல் இன்னும் ஒருவருஷம் தானிருக்கும். அந்த ஒரு வருஷ சந்தேக வாழ்வுக்காக, இடைத் தேர்தலில் அதிக பணம் செலவு செய்வது புத்தியாகுமா? என்று யோசித்து, எம். பி. பதவியில் மோகமுள்ள பலரும் தயங்குவது இயற்கை.

வருகிற செப்டம்பர் மாதம் 6-ந் திகதிக்குப் பின், அரசாங்க செஜட்டில், வவனியா ஸ்தானம் காலி என்றும், இடைத் தேர்தல் நடைபெறுமென்றும் அறிவித்த பின்பே சமஷ்டிக் கட்சி தீர்மானிக்கும் அபேட்சகர் பெயரும் அறிவிக்கப்படுமென்று தெரிகிறது.

## இரத்தினக் கம்பளம்

பதுமன்

புதிய பொதுத் தேர்தலைப் பற்றிய பேச்சுக்கள் இலேசாக அடிபட ஆரம்பித்துவிட்டன. வட பகுதியில் இம்முறை சமசமாஜக் கட்சி எல்லாத் தொகுதிகளுக்கும் அபேட்சகர்களைப் போட்டிக்கு நிறுத்துமெனத் தெரிகின்றது. தமிழரசுக் கட்சி இப்போதே பொதுத் தேர்தலுக்கான முஸ்தீபுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளது. புதிய தொகுதியாகிய நல்லூரில் பிரபல டக்டர் ஒருவர் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவாராம். வழக்கறிஞரான தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் நல்லூரை ஒரு கை பார்த்தே தீருவார் என்ற பேச்சும் அம்பலம் ஏறுகின்றது. சங்கிலி மன்னன் ஆண்ட நல்லூரில் இம்முறை தேர்தல் புழுதி கிளம்பி வாக்காளரைத் திக்குமுக்காக்குமென இப்போதே கூறி விடலாம்.

### வவனியாச் செய்தி

இதற் கிடையில் எதிர் வரும் தேர்தலில் வவனியாத் தொகுதிக்குத் தமிழரசுக் கட்சியின் சார்பில் திரு. எஸ். சுப்பிரமணியம் போட்டியிடுவார் எனப் பலரும் பேசிக் கொள்வதாக வவனியாவிலிருந்து கிடைத்த செய்தி ஒன்று கூறுகின்றது. வவனியாப்பட்டின சங்கத்தின் தலைவராகத் திரு. எஸ். சுப்பிரமணியம் இப்போது பதவிவகிக்கின்ருர். பட்டின சங்க அனுபவம் சிலரைப் பாராளுமன்றம் வரை இழுத்துச் செல்லும் என்பது இலங்கையிலுள்ள வாக்காளருக்குப் புதிதல்ல.

### படையெடுப்பு!

யாழ்ப்பாணத்திற் சென்ற வாரம் பெரிய படையெடுப்பு ஒன்று நடைபெற்றது. பாதுகாப்பு வெளிநாடு உதவி அமைச்சர் திரு, மொலங்குலம உட்பட பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளும் முப்படைத் தலைவர்களும் இங்கு அள்ளுப்பட்டு வந்ததையே குறிப்பிடுகின்றேன். வடபகுதியிற் கள்ளத்தோணிகள் தலைகாட்டுவதால் கள்ளக் குடியேற்றத் தடை நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக இவர்கள் வந்திருந்தனர். அப்படியானல் இராணுவத்தினரை இங்கு அமர்த்தி ஜெட் விமானங்களையும் கொண்டுவந்து குவித்தல் அரசாங்கத்தின் யோசனையா? சோழியன் குடுமி சும்மா ஆடாது. இதில் ஏதோ கள்ளயோசனை இருக்கின்றதெனக் காதோடு காதாக ஒருவர் சொல்லிவைத்தார்.

### ஆஸ்பத்திரி நாற்றம்

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியின் கேவலநிலை பற்றி யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது அங்கிருந்தவர்கள் அனைவரும் மூக்கைப் பொத்திக் கொண்டிருந்தனராம். ஆஸ்பத்திரி சமாச்சாரங்கள் அவ்வளவாக நாற்றம் எடுத்திருக்கின்றன. நோயாளர் போர்த்து மூடிய மரக்கட்டைகள் போல நிலத்திற் கிடப்பதும், 'வாட்'டுகள் துர்நாற்றமடிப்பதும் ஆஸ்பத்திரியின் நிர்வாகத்துக்கே இழுக்கு உண்டாக்குவதாகும். அரைகுறையாகக்கிடக்கும் கட்டடங்களைக் கட்டி முடிப்பதுடன் புதிய 'எக்ஸ்ரே' கருவியும் அவசிமென்பதை அரசினர் இனியும் உணராதிருக்கக் கூடாது. துர்நாற்றமடிக்கும் இச் செய்தியை நீங்கள் எப்படித் தான் வாசித்து முடித்தீர்களோ!

ஆஸ்பத்திரியின் நிலைமையை நேரில் அறிவதற்கு சுகாதார அமைச்சர் இம் மாதம் 25 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்ருர்.

### குண்டசாலைப் பெண்கள்

கம்பளத்தை விரிக்கிற சமயம் பார்த்து அன்பர் ஒருவர் துடித்துப் பதைத்து ஓடி வந்தார். "ஐயா! குண்டசாலையிற் பயிலும் தமிழ் மாணவிகளின் வீரமே வீரம். தமிழ், சிங்கள மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட கலவரம் பற்றி அதிகாரி விசாரணை நடாத்திய போது கல்லூரியை விட்டு வெளியேறிய தமிழ் மாணவர்கள் மீண்டும் அழைக்கப் பட்டாலன்றி தாம் வகுப்புக்குப் போக முடியாதென அவர்கள் அதிகாரியிடம் உரிமையுடன் வேண்டிக் கொண்டனராம். நிலைமை சரிவராதெனக் கண்ட அதிகாரி பயிற்சிக் கல்லூரியை விடுமுறை விடும் திகதிக்கு முன்னரே மூடி விடுமாறு உத்தர விட்டாராம்" என்ருர் ஒரே மூச்சில்.

விவசாயக் கல்லூரிப் பெண்கள் ஒரு வேளை அகப்பையும் கையுமாக அதிகாரி முன்னிலையில் தோன்றினர்களோ, என்னவோ. இல்லாது போனல் இவ்வளவு தூரம் அதிகாரி மசிந்திருக்கவே மாட்டார்!

## காந்தீய சேவா சங்கம் பத்தாவது ஆண்டு விழா

அகில இலங்கை காந்தீய சேவா சங்கத்தின் 10வது ஆண்டு விழா உருத்திரபுரம், "காந்தி நிலைய"த்தில் வருகிற 22-ந் திகதி சனிக்கிழமை காலை 9-30க்கு திரு. எஸ். எச். பேரின்பநாயகம் தலைமையில் ஆரம்பமாகிறது. மூன்ருவது சர்வோதய மகாநாட்டுக்கு வரவிருக்கும் ஸ்ரீ ஜெயபிரகாச நாராயணனின் சுற்றுப் பிரயாணம் பற்றி ஆலோசிப்பதுடன், மாலையில், பிரார்த்தனை, இசை நிகழ்ச்சிகள் சொற்பொழிவுகள் எல்லாம் நடைபெறும்.

## யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கரையூர் என வழங்கப்படும் பெயரை நீக்கப்பெற்று 'குருநகர்' என்ற பெயரே வழங்கப் படவேண்டுமென மேயர் தெரிவித்தார்.

மாநகர சபையின் முயற்சியின் பேருக அரசடியில் ஒரு மின்சார விநியோக நிலையமொன்று நிறுவுவதற்கு ஏற்பாடுகள் நடைபெறும். இதன் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு மின்சார விநியோகம் போதியளவு அதிகரிக்கப்படும்.

* *

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி நிலைமைபற்றி நேரில் பார்த்தறியச் சுகாதார மந்திரி யாழ்ப்பாணம் வருவாரெனத் தெரிகிறது.

# இந்திய ஹைகமிஷனுக்குள் பொலீஸ் தடியடி:

## விசாரணைக்கு பிரதமர் உத்தரவு

### இரண்டு ஆண்டுகளுக்குள் அரசாங்க நிர்வாகமெல்லாம் தனிச் சிங்களத்திலாம்!

### தமிழ்ப் பிரதிநிதிகளின் முக்கிய கடமை

— நமது கொழும்பு நிருபர் —

கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷன் எல்லைக்குள் அத்துமீறிப் புகுந்து, போலீசார் தடியடிப் பிரயோகம் நடத்தியது பற்றி இந்திய அரசாங்கத்துக்கு இலங்கை அதிகாரி வருத்தம் தெரிவித்துள்ளார். "யாரோ ஒரு சில்லறை போலீஸ்அதிகாரி நல்லெண்ணத்துடன் செய்த தவறை பெரிதுபடுத்தக் கூடாதென்று" நேரு கூறிவிட்டார் லோக சபையில்.

ஆனல் போலீஸ் தடியடியில் காயப்பட்டு, கஷ்டப்பட்டவர் நிலைமை என்ன? அவர்களுக்கு நஷ்ட ஈடு அளிக்கவோ, அவர்களுக்கு வருத்தமாவது தெரிவிக்கவோ இலங்கை அரசாங்கம் முன்வருமா? இதற்குக் காரணமான பொலிஸ் அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமா? இனி இவ்விதம் நடக்காமல் பார்த்துக் கொள்ளுமா? இப்போதுள்ளது வலதுசாரி மந்திரிசபையாதலால், கம்யூனிஸ்ட் ஆதரவாளர்மீது தடியடிப் பிரயோகம் நடத்தியுள்ளதா?

பார்லிமெண்டில் இவ்விஷயமாக பீட்டர் கெனமன் கேள்வி கேட்டபோது, பிரதமர் சபையில் இல்லை. இது குறித்து பிரதமர் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின்மீது இங்குள்ள கடல் கடந்த இந்தியரில் ஒருசாரார் இவ்வித பகிரங்க ஆர்ப்பாட்டமின்றி, அமைதியான முறையில் ஆட்சேபம் தெரிவித்திருந்தால், இவ்வித துரதிருஷ்ட சம்பவம் ஏற்படாமல் தடுத்திருக்கலாமென்றும் கருதப்படுகிறது. இந்த ஆர்ப்பாட்டம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி நடத்தியதல்ல. இங்குள்ள ஓர் இந்திய ஸ்தாபனம் நடத்தியதென்பது குறிப்பிடத்தக்கது.

### பார்லிமெண்டில்

இலங்கை பார்லிமெண்டில் அரசாங்க வரவு செலவு திட்டம்பற்றி, சபை கமிட்டியாக மாறி, ஒவ்வொரு இலாகா மான்யத்தின்மீதும் விவாதம் நடத்திவருகின்றது. ஒருநாள், 21 பேர்கூட இல்லாததால் 'கோர'மின்றியும் சபைகலைந்துள்ளது! இதிலிருந்து, மெம்பர்களின் சிரத்தையையும் விவாதப்போக்கையும் உணரலாம்.

என்ருலும் சிலசமயம் வாண வேடிக்கைகளுக்குக் குறைவில்லை. முன்னுள் உணவு மந்திரி பிலிப்புக்கும் பிரதமர் பண்டார நாயக்காவுக்கும் பேச்சுத் தடித்து, நாற்காலியும் தூக்கப் பட்டுவிட்டன. பார்லிமெண்டில் பேசக்கூடாத வார்த்தைகளும் பேசப்பட்டன. நல்லவேளையாக முடிவில் பிலிப் மன்னிப்புக்கேட்டு விஷயம் அத்துடன் முடிந்தது. தலைவர் இஸ்மையில் கண்டிப்பாக இருந்து சபையின் கௌரவத்தைக் காத்தார்.

பர்மாவில் அரிசி மலிவாகக் கிடைக்கையில் அமெரிக்காவிடம் அதிகவிலை கொடுத்து அரிசி வாங்கப்பட்டதென்பதே பிலிப் கூறிய புகார். பிரதமர் இதுபற்றிய புள்ளி விவரம் தெரியவில்லை என்ருர். இது பற்றிய சந்தேகங்கள் இனித் தெளிவாக்கப்படவேண்டும்.

### லஞ்சவிசாரணை

லஞ்ச விசாரணை கமிஷனை நியமிக்க, அரசாங்கக் கட்சியும் சம்மதித்துவிட்டது. ஆனல் சட்டப்படி, லஞ்சம் கொடுப்பதும் குற்றம். கொடுத்தவர் முன்வந்து சாட்சி சொல்லுவாரா? மேலும் பொய்க் குற்றம் சாட்டினல், அதற்கும் தண்டனையுண்டு இவ்வித நிலைமையில், உண்மை அம்பலமாகுமா? லஞ்சவிசாரணைகளெல்லாம் வெறும் கண்துடைப்பாகவே முடியுமென்று கருதப்படுகிறது.

சென்ற 1942-ம் வருஷம் முதல் 1959 வரை லஞ்சம் வாங்கப்பட்டது பற்றி விசாரணை நடக்கவேண்டு மென்பது அரசாங்கத்தின் யோசனை.

### மொழிப்பிரச்சினை

அரசாங்க நிர்வாகம் தனிச் சிங்களச் சட்டத்திலுள்ளபடி 1961-ம் வருஷம் முதல் சிங்களத்தில் நடைபெறக் கூடுமான முயற்சி செய்யப்படுமென்று பிரதமர் பார்லிமெண்டில் அறிவித்தார்.

அதாவது இதுவரை ஆங்கிலத்தில் நடைபெற்று வந்ததை இன்னும் இரண்டு வருஷங்களுக்குள் சிங்களத்தில் மாத்திரம் நடத்தி, ஆங்கிலத்தைக் கைவிட்டு விடலாமென்ருர்.

ஆங்கிலத்தை எப்போது கைவிடலாம்? என்பதை முடிவு செய்[illegible] உரிமையை நேருஜி இந்தி [illegible]த சிறுபான்மை மக்களுக்கே அளிப்பதாகச் சொன்னர். ஆங்கிலத்தை காலவரையறையின்றி நீடிக்கலாமென்றும் கூறினர்.

இங்கு அதே உரிமையை சிறு பான்மையோருக்கு அளிக்கவில்லை. ஆங்கிலத்துக்கு, சர்வதேச மொழி என்றமுறையில் நாட்டில் திட்டமான இடமிருக்குமென்று அவர் கூறினலும் தேர்தல் நெருங்கி வருவதால் இவ்விஷயத்தில் பிரதமர் தாராளமாக இருப்பாரென்று நம்புவதற்கில்லை.

கோப்பாய் பிரதிநிதி திரு. வன்னியசிங்கம் மொழி விஷயமாக பல குறைகளை எடுத்துச் சொன்னர். பிரதமரின் அறைக்கு முன்னுள்ள பெயர்ப் பலகையும் சிங்களத்திலேயே போட்டுள்ளதாயும், அவர் அறை இருக்குமிடம் அறிய முடியாதிருப்பதாகக் கூறியதும், பிரதமர், "இதை நான் போடவில்லை. பழைய அரசாங்கம்செய்தது "என்றுசொல்லித் தப்பப் பார்த்தார். "நீங்கள் ஏன் அத்தவறைத் திருத்தக் கூடாது!" என்று கோப்பாய் பிரதிநிதி பதில் கேள்விகேட்டு, வாயை அடக்கினர்.

தமிழ்ப்பிரதிநிதிகள் கண்ணில் திரி போட்டுக்கொண்டு, அவ்வப்போது மொழி விஷயங்களை கட்டுப்பாடாகவும் ஒற்றுமையாகவும் சேர்த்து அம்பலப் படுத்தினல்தான், தமிழ் பேசும் மக்களுக்குப் புதிய சங்கடங்கள் ஏற்படாமலாவது தடுக்க முடியும்.

# மலாயா பெடரேஷனில் தேர்தல் ஆரவாரம்

## அபேட்சகர்களுக்கு ஒழுங்கு முறைச் சட்டங்கள்

### கட்சிப் போட்டியில் ஒரு கோர நிகழ்ச்சி

மலாயா பெடரேஷனில், பாராளுமன்றத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் 19ஆம் திகதி. கூட்டணி, அகில மலாயா இஸ்லாமியக் கட்சி, சோஷலிஸமுன்னணி, மக்கள் முற்போக்குக் கட்சி, நாகரா, மலாயன் கட்சி ஆகியவற்ருேடு சுயேச்சைகள் வேறு போட்டியில்

**மலாயாக் கடிதம்**
★
நமது நிருபர்

இறங்கியிருக்கின்றனர். ஒவ்வொன்றும் தத்தம் பிரதாபங்களை விரிவாக விளக்கியும், பிரசாரங்கள்செய்தும் வருகின்றன. எது எப்படிப் போய் முடியும் என்று அடுத்த கடிதத்தில் சந்தித்துப் பார்ப்போம் என்று குறிப்பிட்டிருந்தோம். ஆனால், அதற்குள் மேலும் சில சுவையான நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன.

முறையே கூட்டணிக்கு ஐந்து; அ. ம. இ. கட்சிக்கு நான்கு; சோ. முன்னணிக்கு மூன்று; ம. மு. கட்சிக்கு ஒன்று இப்படியாக அந்தந்தக் கட்சியின் அபேட்சகர்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு ஈவித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்து அபேட்சகர்களுக்குக் குறைந்த கட்சிகளான நகரா, மலாயன் கட்சி ஆகியவற்றிற்கும் சுயேச்சை அபேட்சகர்களுக்கும் இந்த வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை.

#### தேர்தல் துறைவிருத்தி

1954ஆம் ஆண்டில் உள்நாட்டுச் சுயாட்சிக்கு அடியெடுத்து வைக்க, பொதுத்தேர்தல் நடாத்தியதைத் தொடர்ந்து, இதுநாள்வரை மாகாணத் தேர்தல்; நகரசபைத் தேர்தல் ஸ்தலகவுன்ஸில் தேர்தல் இப்படிப் பல தேர்தலைக் கண்டிருக்கிறது. இவற்றிலே ஒரே ஊரில் பிறந்தவர்கள்—ஒரே பாடசாலையிற் பயின்றவர்கள்—ஒரே இடத்தில் உத்தியோகம் வகிப்பவர்கள்— கூட்டாகத் தொழில், வர்த்தகம்புரிபவர்கள்—தங்கள் நட்புக்குப் புறம்பாக ஒரு கட்சியில் சேர்ந்துவிட்ட காரணத்துக்காகப் பிற கட்சிகளில் நிற்கும் உறவினர், நண்பர்களைத் தேர்தல் மேடைகளில் அந்தரங்கங்களைக்கூடப் பகிரங்கமாக வெளியிட்டு, தாக்கும் பிரச்சாரங்கள் செய்து வந்தார்கள்.

ஆனல், இந்தத் தேர்தலில் அபேட்சகர்கள் எவ்வாறெல்லாம் நடந்து கொள்ளவேண்டும்—கூடாது என்பவற்றை அரசாங்கமே சட்டமாக்கியிருக்கிறது. இதனல் பொதுமக்களுக்கு, வேண்டாதவற்றைக் கேட்கவும், பேசவும் இருந்து வந்த வம்பளப்புக்கு இடமில்லாதுபோயிற்று; மகிழ்ச்சியடையவேண்டியதே!

★ ஒரு கட்சி, எதிர்க்கட்சிகளையே தாக்கிப் பேசலாமே அன்றி, தனிப்பட்டவர்களைத் தாக்கக் கூடாது;

★ சுவரொட்டிகளைக் கிழித்தெறியவோ, அப்புறப்படுத்தவோ கூடாது;

★ தேர்தற் பிரசங்கத்திற்கு வந்திருக்கும்போது மக்களுக்கு எவ்விதப் பான வகைகளும் கொடுத்து மகிழ்விக்கக்கூடாது;

★ தேர்தலன்று, எண்ணிக்கைக்குக் கூடுதலான வாகனங்களை உபயோகிக்கக்கூடாது;

★ கட்சிச் சின்னங்களைத் தேவையற்ற அளவுக்கு மேல் பெரியதாக வைத்துக்கொள்ளக்கூடாது;

★ மேலும் பொதுமக்களுக்குத் தொல்லை தருவதும் அரசாங்க மதத்திற்குப் பங்கம் விளைவிக்கும் எவ்விதக் காரியங்களும் புரியவோ, தூண்டவோ கூடாது. இவற்றை மீறி நடப்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்று சட்டம் வந்துவிட்டது.

#### நிபந்தனை இல்லை


மலாயா பேரரசர் தலைமையில், மாகாண மலாய மன்னர்கள் கூடி, அரசாங்க மதமான இஸ்லாம், தேர்தலுக்குக் குறுக்கே நிற்காது; மலாய்க்கார வாக்காளர்கள் மலாய்க்கார அபேட்சகர்களுக்கே வாக்களிக்கவேண்டும் என்ற நிபந்தனை கிடையாது, யார் யாருக்கு விருப்பமோ அவர்களுக்கு வாக்களிக்கலாம் என்றும் அறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள்

என்றுலும் ஒரு சில அரசியற் குழந்தைகள் தேர்தல் முறைதவறிப் போவது ஒருபுறமிருக்க மனித தர்மத்துக்கு ஒவ்வாத, கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுத் தொல்லை தருகின்றனர்.

#### கோர நிகழ்ச்சி

ஆளும் கட்சி கூட்டணியில்; தொழில்—சமூகநல மந்திரியாயிருந்து, சிலாங்கூர் மாகாணத்தில் 14 ஸ்தானங்களுக்குப் போட்டியிடும் 37 பேரில் திரு. ஒங்-யொக்-லின் அவர்களும்ஒருவர். உலு சிலாங்கூர் தொகுதியில் நிற்கும் இவரை அ. ம. இ. க., சுயேச்சை ஆகிய இருவர் எதிர்த்து நிற்கிருர்கள். சென்ற வாரத்தில் திரு. ஒங்-யொக்-லின் தமது தேர்தல் பிரசங்கத்தை முடித்துக் கொண்டு திரும்புகையில், தஞ்சோங்மாலிம் பட்டினத்துக்கு அருகில் அவரது ஆதரவாளர்கள் ஐவர்மீது(அசிட்)நெருப்புத் திராவகம் வீசப்பட்டது. அதன் விளைவாக அந்த ஐவரது முகங்கள் கோர நாசத்திற்கு உள்ளாயின. இதுபற்றி, பிரதமர் டத்தோ அப்துல் ரஸாக் தக்க நடிவடிக்கை எடுக்கப் போலிசுக்கு உத்தரவிட்டிருக்கிருர்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற சில தினங்களில், மலாக்காவில் வசிக்கும் முன்னுள் மலாயன் சீனர் சங்கத் தலைவர் டுங்



அமிர்தசரஸிலுள்ள சீக்கியரின் சரித்திரப் புகழ்பெற்ற அழகான தங்கக் கோவில்

செங்-லாக்-டான், அவரது குமாரரான வர்த்தக மந்திரி திரு. டான்-சியூ-சின் ஆகிய இருவருடைய தலைகளை வாங்கிவிடப்போவதாக மிரட்டல் கடிதங்கள் சீன மொழியில் வந்திருக்கின்றனவென்றும், அக் கடிதங்கள் உடனே போலீஸ் உளவிலாகாவிற்கு அனுப்பப்பட்டு, தீவிரமாகப் புலன் விசாரிக்கப்பட்டு, வருவதாகவும் தெரிகிறது.

கிள்ளான் தொகுதியில் ம. இ. கா. ஆதரவில் நிற்கும் திரு. வி. மாணிக்கவாசகத்திற்கும் டெலிபோன்மூலம், மிரட்டல் வந்ததென்றும், அது மலாய் மொழியில் பேசப்பட்டதென்றும் தெரியவருகிறது.

#### தேர்தல் ஏற்பாடுகள்

மலாயாவில் பாராளுமன்றத் தேர்தல் சுமுகமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெறவேண்டிய அத்தனை ஏற்பாடுகளையும், தேர்தல் கமிஷன் அதிகாரி துவான்ஹஜி முஸ்தப்பா அல்பக்கரி செய்துவருகிருர்.

தேர்தல் செய்தியில் மற்றுமொரு முக்கியம் இல்லாமலில்லை. நாடு முழுவதிலுமுள்ள எண்ணிக்கைச்சாவடிகளில் வாக்குகள் எண்ணிச் சில விநாடிகளில் முடிவைத் தலைமைப் பட்டினம் கோலாலம்பூருக்கு அறிவிக்க, நவீன தந்திக்கருவிகள் பொருத்தப்பட்டு எல்லாம் பூர்த்தியாகும் தறுவாயில் இருக்கின்றன. ஆயிரக்கணக்கான தொழில் விற்பன்னர்கள், சிப்பந்திகள் காடுமேடெல்லாம் பிரத்தியேக ஸ்தம்பங்கள் நாட்டிக் கம்பிகள் பொருத்தி முடித்துள்ளனர். தென்கிழக்காசியாவிலேயே முதன்முறையாக இம்மாபெரும் திட்டத்தை மேற்கொண்டிருப்பது தந்தி-தபால் பொதுமராமத்துப்பகுதியாகும். இதன் பொருட்டு, அந்தப் பகுதியில் மந்திரி இஞ்சே ஸார்டோன் பின் ஹஜி ஜூபிரைப்பைப் பாராட்ட வேண்டும். இந்த நடவடிக்கையால் தேர்தல் தினத்தன்று, எண்ணிக்கை நடைபெற்ற சில மணி நேரங்களில் 104 தொகுதிகளில் நிற்கும் அபேட்சகர்களின் வெற்றி, தோல்விகளை அறிய இயலும்.

சுதந்திரத் தந்தையும், தேசியத் தலைவருமான துங்கு அப்துல் ரஹ்மான் அவர்களது கட்சியே ஆட்சிபீடம் ஏறும் என்று நாம் சொல்லும் சோதிடம் எவ்வளவுதூரம் சரிவரும் என்பதையும், வேற்று கட்சிகளின் நிலவரங்களையும் அடுத்த கடிதத்திற் கவனிப்போம்.

'ஹென்றலி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்றலி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்றலி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்றலி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்.

ஹென்றலி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.

செல்வக் குழந்தைகளே!

அனைவருக்கும் வணக்கம். இந்தியா எங்கள் தாய்நாடு. அந்நாட்டுக்கு 15-8-1947 இல் சுதந்திரம் கிடைத்தது. இன்று பதின்மூன்ருவது சுதந்திர தினமாகும். காந்தித் தாத்தாவை நீங்கள் அறிவீர்கள். அவரும் வேறுபல தலைவர்களும் தாய்நாட்டின் விடுதலைக்காக உழைத்தார்கள். அதன் பயனுகப் பாரதநாடு சுதந்திரம் பெற்று இன்று எல்லாத் துறைகளிலும் முன்னேறி வருகின்றது. வாழ்க இந்தியா என வாழ்த்துவோமாக.

சின்னமாமா

# சிறுவர் பகுதி

## பானை பேசுகின்றது

(த. பூங்கோதை — பதிவு எண். 4.)

மண்பானை என்னதான் பேசப்போகிறது என்கிறீர்களா? எனக்கு உங்களிலும் பார்க்கப் பெரிய வாய் இருப்பதை மறந்துவிட்டீர்களாக்கும். இந்தச் சின்ன வாயை வைத்துக்கொண்டு வாய் மூடாமல் பேசுகின்றீர்களே. மூடாமல் இருக்கும் பெரிய வாயால் நான் ஒன்றுமே சொல்லக் கூடாதா?

என்னைப் படைத்தவன் என்னைத் தன்னுடனேயே வைத்திருந்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் என்னை உயர்ந்த சாதியாகப் படைத்துவிட்டேனென்று சொல்லி என்னை ஒரு சங்கீதப்பிரியனுக்கு விற்ருன். நானும் சங்கீதம் கேட்கலாமென்று அவன் வீட்டுக்குப் போனேன். ஆனல் அவன் என்னை அடித்து நான் அழும்பொழுது அதில் இன்பம் காணுவானென்று எனத் தெரியுமா?

எனக்குக் கடம் எனப் பெயர் சூட்டியவர் இந்தச் சங்கீத வித்துவான்தான். படைக்கும் பொழுது பானையாகத்தான் இருந்தேன். என் தலைவிதி இப்படி மாறுமென்று நான் எண்ணினேனு!

இப்பொழுது இந்த வித்துவானிடம் ஒவ்வொருநாளும் அடிவாங்கவேண்டியிருக்கிறது. என் அழுகுரல் அவனுக்கு ஆனந்தகீதமாக இருக்கிறதாக்கும்.

வீட்டில் வைத்து என்னை அடித்தாலும் ஒருவாறு சகித்துக்கொள்ளலாம். நாலுபேர் கூடியுள்ள சபையில் வைத்து எனக்கு அடிக்கிருன்.

சபையில் இருப்பவர்களுக்கும் இரக்கம் என்பதே இல்லைப் போல் இருக்கிறது. எனக்கு அடிக்கும்பொழுது ஏற்படும் சத்தத்தைக்கேட்டு அவர்கள் கைதட்டுகின்ருர்கள். "அடிக்காதே பாபம்" என்று எனக்குப் பரிந்து பேசுபவர்கள் ஒருவருமேயில்லை. 'பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன் போகுது' என்பார்களே! அது போலிருக்கிறது.

அதுமட்டுமல்ல, என்னைச் சபையிலே தூக்கி எறிகின்ருன். எங்கேனும் விழுந்து நொறுங்கிவிட்டால் நல்லதென்று நான் எண்ணுவதுண்டு. ஆனல் அவன் என்னைப் பிடித்துவிடுகின்ருன். என் எண்ணத்தை அறிந்தவன் போல் மீண்டும்சுழற்றிச் சுழற்றி அடித்தான் ஆத்திரத்தால்!

இவ்வளவு அடி அடித்துவிட்டான். பயத்திலை காய்ச்சல் வந்துவிடுமோ என்று எண்ணியோ என்னவோ என்னைப் பட்டுத்துணியால் போர்த்துவிடுகின்ருன். இவ்வளவு அடித்துவிட்டுப் பட்டுத்துணியால் போர்த்துவிட்டால் மட்டும் போதுமா? என் நோதான் மாறிவிடுமா?

சாதாரண பிறவியாக இருந்தாலும் (பானை) என்னைப் பெண்களெல்லாரும் தலையிலும் இடுப்பிலும் வைத்து ஆற்றங்கரைக்குத் தூக்கிச் செல்வார்கள். அந்தப் பாக்கியம் இல்லாமல் போனதுடன் இப்படி அடிபட்டும் சாகவேண்டியிருக்கிறது.

இந்த அவஸ்தையிலிருந்து என்னை விடுவித்து விட்டால் பொங்கல்பொங்குவதாக இறைவனைப் பலமுறை நான் வேண்டியிருக்கின்றேன்.

இறைவனும் என் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்துள்ளாரென்றே கூற வேண்டும். எனக்கு அடிப்பதை இப்பொழுது நிறுத்தி விட்டான் என் உரிமைக்காரன். அவருக்குக் கையில் ஏதோசுகமில்லையாம், அதனல் (இப்பொழுதுதான் புத்தி வந்ததோ என்னவோ தெரியவில்லை) எனக்கு அடிப்பதையும் நிறுத்திவிட்டார்.

அவர் மனைவி என்னிடம் கருணைகொண்டு என்னைத் தன் கண்காணிப்பில் வைத்திருக்கின்ருள்.

நான் இப்பொழுது சாதாரண பானை. என்னைப் பிடித்தவள் பாக்கியசாலியல்ல. நான்தான் பாக்கியசாலி!

## விடை என்ன?

நா. இரஞ்சிதமணி
பதிவு எண் 109:

ஈட்டியிலுண்டு வாளில் இல்லை
பழத்திலுண்டு கனியில் இல்லை
நாட்டிலுண்டு நகரத்தில் இல்லை
கடுகிலுண்டு மிளகில் இல்லை

[விடை 5ஆம் கலம் பார்க்கவும்]

## அரசன் அளித்த பரிசு

(ப. நித்தியானந்தசர்மா — பதிவு எண். 60)

அவந்தி தேசத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் கலைகளில் அதிக ஆவலுள்ளவன். அதனல் பலவிதமான கலைஞர்களும் அவனுடைய சபைக்கு வந்து பரிசில் பெற்றுப்போனுர்கள். பிற தேசங்களிலிருந்தும் பல கலைஞர்கள் அங்கே வரத் தொடங்கினுர்கள். அந்த அரசன் கலைஞர்களை ஆதரிப்பவனுயினும் தகுதி பாராமல் பரிசளிப்பவனல்ல. ஒவ்வொருவருக்கும் அவரவர்களுக்கேற்ற பரிசுகளையே கொடுப்பான்.

ஒரு நாள் பிறநாட்டுப் போலிக் கலைஞன் ஒருவன் அரசனிடம் வந்தான். தான் ஒரு இரசவாதி என்றும் சில மூலிகைகளையும் மந்திரங்கள் கிரியைகளையும் கொண்டு செம்பு, பித்தளை, வெள்ளி இரும்பு என்னும் உலோகங்களைப் பொன்னுக மாற்றும் வித்தை தனக்குத் தெரியுமென்றும் அவன் அரசனிடம் சொன்னுன். உண்மையில் அந்த வித்தை அவனுக்குச் சிறிதுமே தெரியாதிருந்து பலரை அவன் தனது தந்திரத்தால் ஏமாற்றி வயிறு வளர்த்து வந்தான். இவனுடைய தந்திரத்தை முன்பே அரசன் அறிந்திருந்தான். இப்போது அவனுடைய பேச்சு முதலியவற்றிலிருந்து உண்மையை அறிந்துகொண்டு அவனுக்கேற்ற பரிசு கொடுக்கத் தீர்மானித்துச் சேவகனை அழைத்து ஒரு பெரிய பெட்டி கொண்டு வரச் சொன்னுன். பெட்டி கொண்டுவரப்பட்டது.

அரசன் "இதுவே உனக்கேற்ற பரிசு. எடுத்துச் செல்வாயாக" என்று சொன்னுன். போலிக் கலைஞன் திகைப்படைந்தான். "அரசர் பெருமானே, தங்களிடம் வந்தவர்கள் பட்டாடைகளும், பொன்னுபரணங்களும், தங்க நாணயங்களும், யானை குதிரைகளும் பரிசாகப் பெற்றுப் போகிருர்களே. எனக்கு இந்த வெறும் பெட்டிதானு பரிசு?" என்று ஏமாற்றத்தோடு கேட்டான். அதற்கு அரசன் "இரசவாதியே உன்னிடம் பொன் ஆபரணங்களும், தங்க நாணயங்களும் நிறைய இருக்குமே! உனது வித்தையினல் எந்த உலோகத்தையும் பொன்னுகவும் தங்கமாகவும் மாற்றியிருப்பாயே! அவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கு இந்தப் பெட்டி மிகவும் பயன்படும் என்றே உனக்குப் பரிசளித்தேன்" என்ருன்.

இதனைக் கேட்ட தந்திரவாதி பதில் கூற முடியாமல் தலை கவிழ்ந்தான்.

## புதிய மருமக்கள்

பெயர்களும், பதிவு எண்ணும்.

394. இ அம்பிகைராசா,
18A, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

395. ந. ஸ்ரீரங்கராணி
மண்டைதீவு.

396. கனக. திருச்செல்வம்
புங்குடுதீவு- 10.

397. இ. இந்திராதேவி
மே/பா. சு. இராசையா,
ஸ்ரீபவனம்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

398. தி. இராமலிங்கம்,
மே/பா. ஆர். திருச்செல்வம்
காட்டடைப்பு வீதி,
காங்கேசன்துறை.

399. கே. இருளப்பன்,
நிலவத்தைதோட்டம்,
நக்குவானை.

400. எம். ஐ. ஏ. றஸ்ஸாக்
ஹமீம்விலா,
15, வறக்காமுறை,
உக்குவளை.

401. வெ. அரியரட்னம்,
கடைச்சாமி
29/2 கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

402. ம. அப்துல்காதர் (காற்று)
மூர்வீதி,
மன்னுர்.

403. பூ. மகாதேவி,
கலட்டி,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பளை.

404. வை. மோகனதாஸ்,
மே-பா. மு: இராசரத்தினம்
உரும்பராய் வடக்கு,
உரும்பராய்.

405. எஸ். உருத்திரகுமாரன்,
மே/பா ஆர். சுந்தரமூர்த்தி,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

406. சி. சண்முகசுந்தரம்,
60, நெடுங்குளம் வீதி,
அரியாலை வீதி,
யாழ்ப்பாணம்.


407. க. நந்தகுமார்,
64, கண்டி வீதி
யாழ்ப்பாணம்.


408. எம். ஏ. செயிநூன்,
123, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.


விடை

"ஈழநாடு"

## தெரிந்து கொள்ளுங்கள்





மேலே காணப்படும் சின்னங்கள் "பிலிம்சொல் சின்னங்கள்" எனப்படும். இந்தக் குறிப்புகள் கப்பலின் உடலின்மேலே எழுதப்பட்டிருக்கும். இவை கப்பல் எவ்வளவு சுமையைத் தாங்குமென்பதைக் குறிக்கும். எப். டபிள்யூ (FW) என்ருல் 'புதிய தண்ணீர்' என்பது அர்த்தம். ஐ. எஸ். (IS) என்ருல் 'கோடையில் இந்தியசமுத்திரம்' என்று விளங்கும். எஸ் (S) என்ருல் 'கோடை'; டபிள்யூ (W) என்ருல் 'மாரிகாலம்'; டபிள்யூ. என். ஏ. (WNA) என்ருல் 'வட அத்திலாந்திக்கில் மாரி' என்றும் விளங்கும். இக் குறிப்புகளின் உபயோகம் கப்பல செல்லும் திசையைப் பொறுத்துள்ளது.

'ஹான்டிமன்' எனப்படும் இந்த இயந்திர மனிதன் ஐக்கிய அமெரிக்கப் பொது மின்சாரக் கொம்பனியால் கண்டுபிடிக்கப்பட்டது. சந்திர மண்டலத்தில் இறங்கக்கூடிய முதல் 'மனிதன்' இதுவாக இருக்கலாமென நம்பப்படுகிறது. மனிதக் கையின் தொழிலைச் செய்யக்கூடிய இந்த இயந்திர மனிதனை ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலும் இயக்கலாம். வானவெளியில் இந்த இயந்திர மனிதனை அனுப்பி ஆராய்ச்சிசெய்ய ஐக்கிய அமெரிக்க விஞ்ஞானிகள் திட்டமிட்டிருக்கின்றனர்.

'ஒக்ரெப்பஸ்' என்னும் இந்த எட்டுக்கைக் கடல் பிராணி, பயங்கரமான பிராணியெனப் பொதுவாக இருந்து வரும் நம்பிக்கை தவறு என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள். அது சாதுவான, பயங்கரமற்ற பிராணியாம். இதுவரை, மனித சரித்திரத்தில் இப்பிராணி மனிதனைக் கொன்றதாகத் தெரியவில்லை. என்று விலங்கியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

## உலக விடுகதைகள்

1. பேரு, 2. போர்த்துக்கல், 3. இத்தாலி, 4. சுவீடின், 5. பல்கேரியா ஆகிய நாடுகளின் சில விடுகதைகள் இங்கு வெளியாகியுள்ளன. விடைகள் அடுத்த வாரம் வெளியாகும்.

1. சின்னக் குகைக் குள்ளே
சிகப்புக் கொடி அசையுது.

2. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு
ஓட்டு வீட்டைப் பிரித்தால் வெள்ளை மாளிகை
வெள்ளை மாளிகையைப் பிரித்தால் உள்ளே குளம்.

3. வெள்ளை வெள்ளை நாற்காலி
மேலும் கீழும் நாற்காலி
மெதுவாய் ஆடுவாள் சிங்காரி.

4. அறுக்கமுடியாத அரிவாள் எது?

5. கஷ்டப்பட்டு நூல் நூற்பர்
கட்டிக்கொள்ளத் துணியில்லை.

# பாலும் கசந்ததடி...

**க. கணேசலிங்கம்**

தூண்டிற் புழுவாகத் துடித்த பாவையொருத்தி 'பாலும் கசந்ததடி' எனப் பாங்கி ஒருத்திக்குக் கூறியதாகப் பாரதியார் பாடியிருக்கின்றார். காதலன் பிரிவால் அன்று கசந்தது பால். ஆனால் இன்று காரணமில்லாமலே எல்லோருக்கும் பால் கசக்கத் தொடங்கியுள்ளது. இதற்குக் காரணம் பால் முன்போல் இல்லாதிருப்பதே.

என்மேல் உள்ள அன்பால் என்மனைவி கிளாசில் பால் கொணர்ந்து தந்தாள். ஆனால் முதலில் அவளிடம் எனக்கு அன்பு வரவில்லை, ஆத்திரந் தான் வந்தது. 'ஏன் தண்ணீரைக் கொண்டு வந்தாய்' என்று கொதித்தெழுந்தேன். 'பால்தானே கொண்டு வந்தேன்' என்று பணிவுடன் கூறினாள். நான் வெறுத்துரைத்தேன். அவள் அழத் தொடங்கினாள். அப்பொழுதுதான் அவள் கண்ணீருக்கும் கிளாசில் இருந்த தண்ணீருக்கும் வித்தியாசத்தைக் கண்டேன். கிளாசில் இருந்தது அவள் கண்ணீரை விடச் சற்று மங்கலாக இருந்தது. பின் நீரும் பாலும் போல இருவரும் ஒன்றுகூடிப் பேசினோம்.

'நீருயரப் பாலுயரும்' என்ற புது மொழியும் 'பசு இல்லாமல் பால் எடுக்கலாம்' என்ற ஆராய்ச்சி மொழியும் பாடசாலைகளிலேயே சொல்லிக்கொடுக்கத் தொடங்கியுள்ளார்களாம்.

அக்காலத்தில் பாலாறு ஓடியதாகப் புலவர்கள் தம் பாக்களிலே குறிப்பிட்டிருந்தார்கள். இதன்பால் நான் சில காலம் சந்தேகங் கொண்டிருந்தேன். இப்பொழுது ஒரு முடிவு தோன்றியுள்ளது. தண்ணீருக்குப் பால் என்ற மறு பெயர் ஒன்று இருந்ததோ என்ற முடிவு தான் அது.

பெற்ரோலில்லாமல் தண்ணீரைக் கொண்டே காரை ஓடச் செய்யலாம் என ஆராய்ச்சியாளர் கூறும்பொழுது, நாம் பாலை எதற்காக உபயோகிக்க வேண்டும். விட்டமின் ஒரு காலத்தில் அதற்கு இருந்திருக்கலாம். அதில் இப்பொழுது தண்ணீர்ச் சக்திதான் அதிகமிருப்பதால் தண்ணீரையே அதற்காக உபயோகித்தால் என்ன!

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடலை ஈந்தானும் எம்பிரான். என் பாலகன் அழுதால் என் மனைவி பசும் பாலைக் கொடுக்கப் பயப்படுகிறாள். 'அதில் ஏதேனும் கலந்திருக்கும் பின் குழந்தையின் தொண்டையில் அடைபட்டுக் கொண்டால் என்ன செய்வது, என்று விளக்கம் கூறுகிறாள் அவள்.

பாலை நன்றாகக் காய்ச்சினால் தான் அதன் சுவை கூடும் என்பார்கள். இப்பொழுது அதை நன்றாகக் காய்ச்சி விட்டால் அது பொரியலாக மாறி விடுகிறது. தண்ணீர் ஆவியாக மாறியவுடன் எஞ்சியிருக்கும் பொருள் வறுவலாகத்தானே மாறும்!

அன்னப்பறவைதான் தண்ணீரையும் பாலையும் பிரிக்குமென்பார்கள். இப்பொழுது நாமும் அந்த வினோத வேலையைச் செய்யலாம். கிளாசில் வாங்கும் பாலை ஊற்றுங்கள். சிறிது நேரம் ஒரு மேசையின் மேல் ஆடாமல் அசையாமல் வையுங்கள். ஒரு முறை கண்ணை மூடிப்பின் திறந்து பார்ப்பீர்களாயின் தண்ணீர் மேலும் பால் கீழுமாக நிற்பதைப் பார்ப்பீர்கள்.

'பாம்புக்கு பால் வார்த்தது போல்' என்று பேச்சுக்குச் சொல்வார்கள். இப்பொழுது துணிந்து அதை வார்க்கலாம். ஏனெனில் வார்த்தது நிறத்தில் சற்று வெண்மையாக இருந்தாலும் உண்மையில் சேதமானது தண்ணீர்தானே!

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன்" என்று ஒளவை மூதாட்டி விநாயகனை வேண்டினாளாம். இப்பொழுது நான் இந்த தமிழ் மூன்றையும் தா என்று விநாயகனை வேண்டினாலும் பாலைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை. பால் என்று கூறி வெறும் தண்ணீரைக் கொடுத்தால் முற்றையும் அறியும் மூலப் பொருளுக்கு விஷயம் தெரிந்து எனக்குத் தருவதையும் தராமல் விட்டு விட்டால் பின் என்ன செய்வது!

தற்காலப் பால் பற்றிக் கூறியதையிட்டு யாரும் என்பால் கோபம் கொள்ளக் கூடாது. ஏனெனில் இப்படிப் பால் போனால் நஷ்டம் எதிர் வரும் பாலகர்களுக்குத்தான். ஆகவே அவர்கள் பால் கருணை கொண்டு அன்பால், நட்பால், நற்பால் கொடுங்கள் அப்பால் எல்லாம் நன்றாகிவிடும்.

---

# உத்தியோகக் கல்வி முறை ஒழிய வேண்டும்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்தியாலய அதிபர் திரு. ந. நவரத்தினம் ஆரம்பத்தில் ஆண்டறிக்கையை வாசித்த போது, வித்தியாலயத்தின் சாதனைகளை நன்கு விளக்கினார்.

கல்வித்துறையில் வெற்றியீட்டிய சரஸ்வதி இல்லம் அதற்குரிய வெள்ளிக்கிண்ணத்தைப் பெற்றது. பரிசில்களை வழங்கிய வடமத்திய மாகாண வித்தியாதிகாரி செல்வி எவ்லின் பர்னாண்டோ, ஆங்கிலத்தில் சில வார்த்தைகள் கூறிய போது "மனிதனின் வயதுக்காலம் கூடியது நூறு வயது தான். அந்தக் குறுகிய காலத்தில் நாட்டுக்கும் உலகிற்கும் எவ்வளவோ சேவை செய்ய வேண்டியிருக்கையில் இலங்கையில் தமிழரும் சிங்களரும் சண்டை இட்டுக்கொண்டிருப்பது முறையல்ல" என்று கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில் உலகச் சகோதரத்துவம் போன்ற இயக்கங்களுக்கு ஆதரவு கொடுக்கும் ஒழுக்கக் கல்வி பள்ளி மாணவரிடையே போதிக்கப்படவேண்டும் என்றும், அத்தகைய பொதுத்தன்மையான கல்வி விவேகானந்தர் பெயரில் நடாத்தப்படும் பாடசாலையில் போதிக்கப்படுவதைத் தான் கண்டு மகிழ்வதாகவும் கூறினார்.

அதன்பின்னர் ஏராளமான பெற்றோருக்கு வித்தியாலயத்தின் கதம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

### ஆஸ்பத்திரி வேலை ஆரம்பம்

அனுராதபுரம் ஆஸ்பத்திரியின் அவலநிலைபற்றி முன்னர் 'ஈழநாடு' இதழில் வெளியான செய்தியறிக்கையை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்கள். சமீபத்தில் புதுநகர் ஆஸ்பத்திரியில் துரிதவேலைகள் தொடங்கப்பெற்றுள்ளன என்று தெரிகிறது. புதுநகர் ஆஸ்பத்திரியை விரைவில் முடிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்ய பொதுச்சுகாதாரச் சேவையின் துணை அதிகாரி டக்டர் கெலார்ட் சமீபத்தில் அனுராதபுரம் வந்து சென்றுள்ளார்.

சென்ற பெருவெள்ளத்தோடு இப் புது ஆஸ்பத்திரியில் ஏற்பட்டுள்ள சேதங்களையும் அவர் மதிப்பிட்டார் என்றும், இப்போது ஒன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான பழுதுபார்க்கும் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் பெற்று வேலைகள் தொடங்கி விட்டன என்றும் தெரிகிறது.

பழுதுபார்க்கும் வேலைகள் பகிரங்கசேவைப் பகுதியினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

---

# புகையிலை இல்லாத சிகரெட்

அமெரிக்கத் தலைநகரான நியூயோர்க்கில் உள்ள கொம்பனி ஒன்று புகையிலையற்ற சிகரெட்டைக் கண்டுபிடித்துள்ளது. இச் சிகரெட்டில் துளிக் கூடப் புகையிலை இல்லை. ஆனாலும், ஒரு சாதாரண புகையிலை சிகரட்டுக்குள்ள குணம், மணம், தோற்றம் யாவும் இதனிடம் உள்ளன. இச் சிகரெட்டில் நிக்கற்றின் (Nicotin) விஷமில்லை, பாஷாணமில்லை, வரியுமில்லை, மிக மலிவு என்றெல்லாம் இதைக் கண்டுபிடித்த கொம்பனியார் விளம்பரப்படுத்தியுள்ளனர். அமெரிக்க அரசாங்க அதிகாரிகளுக்கும், சிகரெட் கொம்பனிக்காரர்களுக்குமிடையே இந்தப் புதுச் சிகரெட் ஒரு பெரும் சச்சரவையும், பரபரப்பையும் உண்டக்கி விட்டிருக்கிறது.

---

# கடனாளி

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

விதியின் கடனாளி" என விந்தையான எழுத்துக்களில் பொறித்தது. பேரொளி நிறைந்ததொரு ஒளியுலகில் புகுவது போன்ற பிரமை.

மறு விநாடி அவன் கண்கள் பார்வையிழந்தன.

அதைத் தொடர்ந்து கண்ணற்ற அவன் காதுகளிலே காதடைக்கும்படி "நீ விதியின் கடனாளி" என இடியோசை முழங்கியது.

அன்று காலை அவன் கண்ட கனவு நிறைவேறியது!

அவன் உள்ளத்தில் நம்பிக்கை ஒளி நிறைந்தது.

தொடர்ந்து 'சோ' எனப் பெய்யும் மழையின் ஓசையையும் வீட்டினுள்ளே அழும் குழந்தையின் அழுகுரலையும் கேட்ட அவனுடைய ஒளியற்ற கண்களில் நீர் அரும்பியது.

---

# இப்படியும் சொன்னார்கள்

எமது கட்சியின் ஒன்பது வருட கால ஆட்சியில், அந்நிய ஆதிக்கத்தின் 450 வருட காலத்துத் தீமைகளை அகற்ற நாம் எவ்வளவோ செய்துள்ளோம்.

**டட்லி சேனநாயக்கா.**

மேற்கு பெர்லின் மக்கள் முதலாளித்வத்தின் கீழ் வாழ விரும்பினால் வாழட்டும். அது அவர்கள் சொந்த விஷயம். நாங்கள் அதில் தலையிட விரும்பவில்லை.

**குருஷேவ்.**

புத்த சமயக் குழந்தையொன்றைக் கிறிஸ்தவக் கல்லூரிக்கு அனுப்புவதிலும் பார்க்க அதைக் கடலில் வீசி விடுவது மேல்.

**ஒரு புத்த பிக்கு.**

கேரள அரசாங்கம் ராஜினமா செய்யட்டும். பிறகு தேர்தலுக்கு நிற்கட்டும். கம்யூனிஸ்ட்கள் தோற்றே போவார்கள். அவர்கள் வெற்றி பெற்றால், நான் அரசியலை விட்டே போய் விடுகிறேன்.

**அசோக் மேத்தா.**

எனக்கு இப்பொழுது கேலியாகப் பேசவே பயமாகவிருக்கிறது. ஏனெனில், கேலிக்குக் கூட முக்கியத்வம் கொடுத்து விடுகிறார்கள் இந்நாட்களில்!

**எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா.**

---

## 'ஈழநாடு'


விற்பனை செய்வோர்கள்

1. பி. காஸிம், பொப்பியூலர் ஸ்ரோர்ஸ், 239, மிகிந்தமாவத்தை, அனுராதபுரம்.
2. ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், மெயின் ஸ்றீற், கல்முனை.
3. கே. ஈ. கந்தையா அன்ட் சன்ஸ், பெரியகடை, மன்னர்.
4. என். ரத்தினம், மாங்குளம்.
5. ஸ்ரீ லங்கா ஹோட்டல், கிளிநொச்சி.
6. இன்ப நிலையம், ஸ்ரேஷன் வீதி, சுன்னகம்.
7. வி. மயில்வாகனம், வாசன் ஸ்ரோர்ஸ், சாவகச்சேரி.
8. எஸ். கணபதிப்பிள்ளை, நம்பர் 1, கவண்மென்ட் பில்டிங், சங்கானை.
9. றி. பொன்னுத்துரை, நியூஸ் ஏஜண்ட், சித்தங்கேணி.
10. எல். மனுவேல்பிள்ளை, பத்திமா ஸ்ரோர்ஸ், இளவாலை.
11. முத்துவேல் ஸ்ரோர்ஸ், இணுவில்.

---


நவநாகரிகமான முறையில்

குறித்த தவணையில்



ஓடர் நகைகள்

செய்து கொடுக்கப்படும்.

பொற் தொழில்

ஒத்துழைப்புச் சங்கம்

நல்லூர்

82/5, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

அருள்வழி

# சுத்தம், ஒழுங்கு, பக்தியுடனே நடைபெறும் நல்லூரான் திருவிழா

முதல் முறையாக, சென்ற ஞாயிற்றுக்கிழமை, நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கொடியேற்ற விழாவுக்குச் சென்றேன். நெற்றியிலே திருநீறும், சந்தனமும், குங்குமமும் இட்டு, நல்ல ஆடை ஆபரணமணிந்து, சிவப்பொலிவுடனே, பக்தி விரதத்துடன் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் ஏராளமாகக் கோவிலை நோக்கி ஆவலுடன் சென்றனர். கோவிலுக்கு இரண்டு பர்லாங் தூரத்திலேயே வண்டிகள் நிறுத்தப்பட்டன.

கோபுரத்தின்மீது குமரனின் சேவற்கொடி பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது. நாற்புறத்தெருவெல்லாம் சுத்தமாக இருந்தன. எதிரேயுள்ள திருக்குளத்தில் கால்கழுவிச் செல்வோமென்ருர் நண்பர். கோவில் குளமென்ருல் பாசி பிடித்து வழுக்கிவிடுமோ என்று மனதுக்குள் தயக்கம். இது தென்னுட்டுக் கோயில்களிற் பெற்ற அனுபவம். ஆனல், நல்லூரிலே, குளத்தின் படிகள் வழுக்கவில்லை. தண்ணீரும் சுத்தமாக இருந்தது. பயம் இன்றிக் கால்கழுவி வந்தோம்.

### அடி அழித்தலும் அங்கப்பிரதட்சணமும்

மண்டை வெடிக்கும் வெயில். தெருவிலே தார் உருகுகின்றது. பொடி ஒட்டிக்கொள்ளுகிறது. தெருவில் நடப்பது தீமிதியல் போலிருந்தது! ஓட்டமும் நடையுமாகச் சென்றேம். காலால் நடப்பதே இவ்வளவு கஷ்டமாக இருக்கையில் பெண்கள் பலர் விழுந்தெழுந்து பூமியில் தலைவைத்துக் கும்பிட்டுக் கும்பிட்டுக்கொண்டே அடியழித்துக்கொண்டு சென்றனர். ஆண்கள் பலர், படுத்து அங்கப்பிரதட்சணம் செய்துகொண்டே கோவிலை வலம் வந்தனர். பொய்க் கௌரவம், அகந்தை எல்லாம்விட்டு, அந்தச் சரவணனே சரணகதி என்று தங்கள் உடலை அவனுக்கே அர்ப்பணித்து, இப்படிக் கொடுமையான வெயிலில் இவர்கள் அடி அழித்தும், அங்கப் பிரதட்சணம் செய்துகொண்டும்சென்ற பக்திக் காட்சிகள் என் மனதை உருக்கிவிட்டன. இவ்விதமான காட்சிகளை, தென்னுட்டில் நான் கண்டதில்லை.

கோவிலுக்குள் ஒரே கூட்டம். அந்தக் கூட்டத்துக்குள்ளும், தள்ளிக்கொண்டு பெண்கள் அடியழித்துச்சென்று தங்கள் வேண்டுதல் விரதங்களைப் பூர்த்திசெய்தார்கள். நம் தமிழ்ப் பெண்களின் பக்தி வைராக்கியத்தைக் கண்டு பெருமை கொண்டேன். பக்கத்தில் இருந்த ஓர் அன்பர், "எங்களுக்குப் பெருமை தருவது எங்கள் பெண்கள்தான். அவர்களது பக்தியும், தியாகமும், வைராக்கியமுமே எங்களை உய்விக்கின்றது. அவர்கள் மௌனமாகச் செய்யும் தவம்தான் எங்களை இந்தமட்டில் வாழவைக்கின்றது" என்று உணர்ச்சியுடன், கண்களில் நீர்ததும்ப, பெருமிதத்துடன் சொன்னுர்.

### விநாடி பிசகாமல்

மணிகள், டாண், டாண் என்று அடித்தன. கைக் கடிகாரத்தைப் பார்த்தார் நண்பர். "கடிகாரம் சரிதான்" என்ருர். மணி 1-15க்குக் கொடியேற்றம் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. அவர் கடிகாரத்திலும் அப்போது மணி 1-15. இக் கோவிலிலே எல்லாம் விநாடி கூடப் பிசகாமல் ஒழுங்காகப் பூசை முதலியன நடக்குமென்பது பிரசித்தம். ஒரு நிமிடம் பிசகினுலும் தண்டம் விழுமாம். கோவிற் காவலர் அவ்வளவு கண்டிப்பு.

"பரமனின் பெரும்புகழைப் பாடிப் பணிதலன்றி வேறு பேச்சுகள் பேசற்க ஆலயத்தில்" என்பது கோவிற் காவலரின் ஆணை. கோவில் முன்னே இருபுறங்களிலும் எழுதி எச்சரித்துள்ளனர். வீட்டு வம்புகள் நாட்டு வம்புகள் எல்லாமே நம் கோவில்களில் நடப்பதும், ஆண்டவனை மறந்து, இந்த வம்புகளில் ஈடுபடுவதும், தென்னுட்டுக் கோவில்களில் அதிகம். ஒருமையுடன் அவனது திருவடி மலரைக் கோவிலிலும் நினைக்க முடியாதபடி வீண் வம்புகள் தடுக்கின்றன. கோவிலில் வம்பு பேசுகிறவர்களை என்ன செய்யலாம்? முதலில் எச்சரிக்கலாம். கேட்காவிட்டால், வெளியேற்றவும் செய்யலாம். எப்படியும் நம் கோவில்களில் சுத்தமும், ஒழுங்கும், அமைதியும் நிலவ, நல்லூர்க் கோவிலார் முன்மாதிரி காட்டி முயற்சிப்பது பாராட்டத்தக்கது.

விநாயகப் பெருமானும், மயில்வாகனம்மீது வேலாயுதமும், அன்ன வாகனம்மீது இரு சக்திகளும் சேர்ந்து காட்சியளிக்க, மேளவாத்தியமும், பஜனைகளும், 'முருகா முருகா' என்ற பக்தர் கோஷமும் புதிய கண்டா மணிகளும் சேர்ந்து ஒலிக்க நல்லூர்க் கந்தசாமியின் வேல் கொடியேறி 25 நாள் உற்சவமும் தொடங்கிவிட்டது.

தினசரி இரவில் முத்தமிழ் மணி வண்ணை மணிபாகவதரின் பெரிய புராண கதாப்பிரசங்கத்தை ஏராளமானவர் கேட்டு இன்புறுகிருர்கள் மூலைக்கு மூலை தண்ணீர்ப் பந்தல் தர்மம் நடக்கிறது.

### பொதுச்செல்வங்கள்

நமது கோவில்கள் நமது சமூகத்தின் மேலான பொதுச் செல்வங்கள். கோவில்களை தலைமை ஸ்தானங்களாகக் கொண்டு, நமது சமய, சமூகத் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்ய எவ்வளவோ வாய்ப்புண்டு. எந்தக் கோவில் சமூகத்திற்கு அதிகமாய் பயன்படுகின்றதோ அது மக்களின் ஆதரவையும் அதிகமாகப் பெறும். தமிழ் மக்களின் பக்தியும், தர்மசித்தையும் அளவு கடந்தது. இதைக் கோவில்கள் மூலம் நாம், பூரணமாய்ப் பயன் படுத்தி, பசி பட்டினியால் யாரும் தவிக்காமல் பார்த்துக் கொள்ளவும், நம் அருங்கலைஞர்களை ஆதரித்து, கலைகளை வளர்க்கவும், நமது கோவில்களைப் பயன் படுத்திக் கொள்ள எவ்வளவோ இடமுண்டு. முன்னர் தமிழ் மன்னர்கள் இதைச் செய்து வந்தனர். இன்று மக்களே மன்னர்கள். ஆகையால் மக்கள் தான் இதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும்.

கதிர்காமம் ஆடிவேல்த் திருவிழாவை ஒட்டி, மாவிட்டபுரம் உற்சவம், பின்னர் வண்ணை சிவன் கோவில் அம்மனுக்கு ஆடிப்பூர உற்சவம். அது முடிந்ததும், நல்லூர் கந்தனின் திருவிழா கொடியேற்றம். இதற்கிடையே பல இடங்களில் பல் வேறு திருவிழாக்கள். இத் திருவிழாக்களுக்கு ஏராளமான பணம் செலவாகின்றது. இத் திருவிழாக்களையும், கோவில்களையும், சமூகத்திற்கு அதாவது மக்களுக்கு நல்ல பயனுள்ள முறையில் கட்டுப்பாடாக நடத்த ஒரு திட்டப்படி ஒழுங்கு செய்வதாயின், சமூகமும் குறைகள் பல நீங்கி, பல விதங்களிலும் முன்னேற வழி பிறக்கும். எல்லாம் அவன் அருள்!

— ஐயாறன்.

குறிப்பு:-

1. அங்கப் பிரதட்சணம் செய்யும் தெருக்களில் அடிக்கடி தண்ணீர் தெளித்து அடியார்களுக்குக் கஷ்டத்தைக் குறைக்கலாம்.

2. உற்சவ காலத்தில் பக்கத்திலுள்ள மதுபானக் கடைகளை மூடி விடச் செய்யலாம்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.


★ ★ ★

# இவ்வாரம் எப்படி?

★ ★ ★

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | | | |
| | 16வ சிங். சூ. | | சூரி புத. |
| | 17உ விரு. வியா. | | செ. வெ. |
| சனி | | வியா. | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

*(15-8-59 — 21-8-59)*

**மேடம்:** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) இவ்வார முற்பகுதியில் தேகாரோக்கியம் சிறிது பாதிக்கும். நண்பர்கள் தாராளமாக உதவுவார்கள். பெண்மணிகள் தொல்லை தருவர்.

**இடபம்:** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) புது முயற்சிகளினுல் பிரயாசைகள் அதிகரிக்கும். சினேகிதர்களால் நன்மைகள் வரும். நடந்தகருமங்களினுல் பண வருவாய் அதிகரிக்கும்.

**மிதுனம்:** (மிருகசீரிடம் 3, 4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3-ம் பாதம்) வியாபாரத்துவறயில் முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். மாதாவழியினர் மூலம் தொல்லைகள் தோன்றி மறையும்.

**கடகம்:** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்) காத்திராப்பிரகாரம் இலாபம் வந்தடையும். சிக்கல்கள் நீங்கி மேல் அதிகாரிகளின் உதவி பெருகும். வீட்டில் மங்களகரமான நிகழ்ச்சிகள் ஏற்படலாம்.

**சிங்கம்:** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) எக்கருமத்திலும் மனமானது ஒரு வழியில் செல்லாதிருக்கும். இடமாற்றம் ஏற்படும். கொடுக்கல் வாங்கல் மூலம் பண வருவாய் அதிகரிக்கும்.

**கன்னி:** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2-ம் பாதம்) கமத்தொழிலாலும், வியாபாரத்தாலும் பண வருவாயுண்டாகும். இனத்தவர்களுடன் விரோதம் ஏற்பட இடமுண்டு. புத்திரர்களால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) உத்தியோகத் துறையில் நல்ல வாரம். பழைய முதலீடுகள் மூலம் அதிக இலாபமடைவீர். கடந்த கருமங்களினுல் சில தொல்லைகள் ஏற்படும்

**விருச்சிகம்:** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) வாக்கு வாதங்கள் தோன்றி மறையும். புதிய கருமங்களில் பகைவர்கள் தலையிடுவர். தொழில் முறையில் நற்பலன்கள் உண்டாகும். குடும்பத்திற் புண்ணிய கருமங்கள் நிறைவேறும்.

**தனுசு:** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) நீர் முயன்றுழைத்தே உம்முடைய கருமங்களை இவ்வாரம் நிறைவேற்ற வேண்டும். பழைய முதலீடுகள் மூலம் அதிக இலாபமடைவீர். எதிரிகள் அடிபணிவர். கமத்தொழில் மூலம் இலாபமும் கிடைக்கும்.

**மகரம்:** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம் அவிட்டம் 1, 2-ம் பாதம்) சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் தோன்றி மறையும். இகழ்ந்து பேசுபவர்களைப் பற்றி எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். புத்திரர்மீது சிறிது வெறுப்புத் தோன்றினுலும், உறவினர் அன்புடன் உதவி புரிவர்.

**கும்பம்:** (அவிட்டம் 3, 4-ம் பாதம்; சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) புதிய கருமங்களில் நாட்டம் செல்லும். இரகசியப் பகைவர் மூலம் தொல்லைகளைத் திறமையுடன் தவிர்த்துக் கொள்வீர். பெண்களின் உறவால் நன்மை வந்தடையும்.

**மீனம்:** (பூரட்டாதி 4-ம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி) மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்கள் அதிகம் உண்டு. பிரயாண அலைச்சல் உற்சாகத்தைக் குறைக்கும். பழைய முதலீடுகள் மூலம் இலாபம் கிடைக்கும். அன்னியர் நட்பு அதிகரிக்கும்.

## "நல்லூரான் கிருபை வேண்டும்!"

**பல்லவி**

நல்லூரான் கிருபை வேண்டும்—நாம் எந்நாளும்
பாடவேண்டும்...வேறென்ன வேண்டும்? (நல்லூ)

**சரணம்**

1. சொல்லும் பொருளுமற்று—சும்மா இருக்கவேண்டும்
   தூயகுருவின் பாதம்—துணையாகக் கொள்ளவேண்டும்.
2. அல்லும் பகலும் சிவ—நாமத்தைச் சொல்லவேண்டும்
   ஆசை மூன்றையும் அடி—யோடு கொல்லவேண்டும்.
3. கண்டு கண்டு மனங்—குளிர்ந்திட வேண்டும்
   காமக்குரோத மோகத்தை—தீர்க்க வேண்டும்.
4. பொறிவழி போய்மனம்—அலையாமை வேண்டும்
   பூரணமான நிஷ்டையும் வேண்டும்.
5. எல்லாரிடத்தும் அன்பு செலுத்த வேண்டும்
   எழில்பெறுஞ் சுழுமுனை வழிசெல்ல வேண்டும்.

சினிமா உலகம்

# ஸ்ரீ ராம பக்த ஹனுமான்

இராம ராஜ்யா, பரத்மிலாய் ஆகிய சினிமாப்படங்களை ஏற்கனவே தயாரித்துப் பெருமை ஈட்டிய வடநாட்டினர் **ஸ்ரீராம பக்த ஹனுமான்** மூலம் தமது கைவண்ணத்தை நன்கு காட்டிவிட்டனர்.

'ஆக்கத்திலே தொழில் ஊக்கத்திலே உயர்' பாரத நாடு எனப் பாரதியார் அன்று இன்பத் தமிழில் பாடிய போதிலும் அவருடைய அமுத வாக்குக்கு ஏற்பத் தொழில் வளர்ச்சியில் வட இந்தியாவே வியக்கத்தக்க சாதனைகளைச் செய்து வருகின்றது. சினிமாத் துறையிற்கூட வடநாடு உயர்ந்து உலக நாடுகளுடன் போட்டியிடத் தக்க முறையில் தம்மை நிர்மாணித்து வருகின்றதென்பதை 'ஸ்ரீராம பக்த ஹனுமான்' மூலம் ஓரளவு அறிந்துகொள்ள முடிகின்றது.

ஹனுமானின் பக்திமிக்க வீர வாழ்க்கையே இப் படத்தில் முற்று முழுதாகப் பிரதிபலித்தாலும் அவரது வாழ்க்கையுடன் இரண்டறக் கலந்த இராமனின் சரிதமும் ஓரளவு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. திரை உலகிற் பிரபலமடையாத நடிகர்கள் வேடங்களைத் தாங்கினலும் குணசித்திர பாவமும் உருவப் பொலிவும் நன்கு சோபிக்கத்தான் செய்கின்றன.

வால்மீகி இராமாயணத்தையே அடிப்படையாகக் கொண்ட இக்கதையில் ஹனுமானகத் தோன்றியவரை அவரது வீரம் மிக்க செயல், விஸ்வரூபம் பெறும் சக்தி என்பன நன்கு இணைந்து பூரணத்துவம் பெறச் செய்து விடுகின்றன.

இராமர், சீதை, இலக்குமணன் ஆகியோரின் அடக்கமும், கட்டுக்குலையாத பாவனைகளும், புராண காலத்துச் சூழ் நிலைக்கு இழுத்துச் செல்வது உண்மையே. எனினும் சீதையின் உடையலங்காரம் 'கிளாஸிக்' தன்மையைப் பெறவில்லை,

இலங்கை வேந்தன் இராவணேஸ்வரனுக்குப் பத்துத்தலைகள்தான் உண்டெனப் படித்தோம்; கேட்டோம்; சித்திரங்களிலும் பார்த்தோம். ஆனல் சமீப காலத்தில் உருவான கதைகளில் அது பகுத்தறிவுக்கு முரணனது என எண்ணி அத்தலைகளைக் கொய்து விட்டார்கள் போலும்! ஆனல் இக்கதையில் கம்பீரமாகத் தோன்றும் இராவணனும் ஒருதலையை உடையவனயினும் சீதாதேவியை அபகரித்துச் செல்ல எண்ணும் போது, அகங்காரம், ஞானம், மமதை, தற்புகழ்ச்சி, துர்ப்புத்தி, வெஞ்சினம், குரோதம், காமம் ஆகிய குணங்கள் அவனை அடையும்போது அவனுக்குப் பத்துத்தலைகள் வரிசைக் கிரமத்தில் தோன்றுகின்றன. ஈற்றில் அவை ஒன்ருகச் சங்கமித்து ஒருதலை இராவணனுக மாறும் காட்சியினல் பகுத்தறிவையே விஞ்சிவிட்ட முன்னேடிகளின் கற்பனையில் எழுந்த உருவப் பொலிவை ஓரளவு உணரக்கூடியதாகவிருந்தது. இத்தனைக்கும் இராவணனுகத் தோன்றியவரின் நடிப்புத் திறனும் உருவ அமைப்பும் ஒத்துழைத்து இராவண பாத்திரத்தைச் சிறப்பிக்கின்றன.

படப்பிடிப்பு, பின்னணிக் காட்சிகள், சங்கீதம், தந்திரக் காட்சிகள் என்பனவே படத்தின் தரத்தை உயர்த்துவனவாகத் தோன்றுகின்றன.

ஹிந்தி மொழியில் தயாரித்துத் தமிழில் 'டப்' செய்த போதிலும் வாய் அசைவுக்கு ஏற்ற வகையிற் சொற்களைத் தெரிந்தெடுத்துப் பாடல்களையும் வசனங்களையும் அமைத்தவர்கள் பாராட்டுதற்குரியவர்கள்.

படம் முடிகின்ற வரை ஹிந்திப்படம் ஒன்றைப் பார்க்கின்ருேம் என்ற உணர்ச்சியே எவருக்கும் உண்டாகவில்லை. இந்நிலையில் தென்னகம் சினிமாத் துறையில் வட இந்தியாவின் வளர்ச்சியை இன்னும் எட்டிப் பிடிக்கவில்லையே என்ற வருத்தம் இதயத்தில் கொப்பளிக்கத்தான் செய்கின்றது.

—அஜன்

## நாளை நடைபெறும்

### யாழ்ப்பாணம்—கொழும்பு

இலங்கை உதைபந்தாட்டக் கழகம் நடத்தும் மாவட்டப் போட்டியில் சென்றவாரம் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்பு மத்திய வெள்ளைக் கோஷ்டிக்குமிடையே கொழும்பில் நடைபெற்ற ஆட்டத்தில் கொழும்பு 6-0 கோல்களால் வெற்றிபெற்றது.

அதன் மறு ஆட்டம் நாளை மாலை 4-45க்குப் **பண்ணை** மைதானத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணக்கோஷ்டித் தலைவர் நவரத்தினராசா.

யாழ்ப்பாணத்துக்காக யாழ்ப்பாணத்தில் ஆடும் கடைசி ஆட்டம் இதுவேயாகும்.

கொழும்புக்கோஷ்டியில் சன்ரைஸ் புகழ் கோல்காப்பவர் ஹஷீம்டீன், திருக்கோணமலை நூர், ஹார்லெக்குவின்ஸ் புகழ் சூனு, வதுளை புகழ் கருணபாலா பெர்னுந்து ஆகியோர் ஆடுகிருர்கள்.

—

## யாழ்ப்பாண மாணவ கிரிக்கட்கோஷ்டியின் இந்திய சுற்றுப்பிரயாணம்

யாழ்ப்பாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர் கோஷ்டியொன்று கொழும்பு மாணவரோடு இருமுறை ஆடிப் பெரும் புகழ் ஈட்டியது பழைய செய்தியல்ல. அதிலிருந்து கிடைத்த உற்சாகத்தின் பலனுக இன்று மாணவர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கோஷ்டியொன்று இந்தியாவுக்குப் பிரயாணமாகிறது. கோஷ்டிக்கு மனேஜராக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விளையாட்டுப்பகுதி ஆசிரியர் பி. தியாகராசா செல்கிருர்.

## உதை பந்தாட்டம்

### திருக்கோணமலை கஞ்சிமடம் அரசினர் பாடசாலை விளையாட்டுப் போட்டி

"திருக்கோணமலையில் உள்ள பாடசாலைகளை உயர்தர நிலைக்குக் கொண்டுவந்து இங்குள்ள மக்களின் கல்வி வளர்ச்சியை விருத்திசெய்தல் வேண்டும். ஆனல் இங்குள்ள மாகாண அதிபர் பாடசாலைக்கு நிலம் கேட்டபோது பெற்ருேல் நிலையம் கட்டுவதற்காக அதை உபயோகிக்க முன்வந்துள்ளார். இந்தப் பாடசாலையின் முன்னேற்றத்துக்கு அரசாங்க அதிபர் குறுக்கே நின்று நிலம் தர மறுக்கிருர்" என்று திருக்கோணமலைநகரசபைத் தலைவர் திரு. பா. நேமிநாதன், கஞ்சிமடம் அரசினர் பாடசாலை விளையாட்டுப்போட்டிக்குத் தலைமைவகித்துப் பேசும் போது குறிப்பிட்டார்.

திருக்கோணமலை கஞ்சிமடத்தில் உள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலையின் முதலாவது வருடாந்த விளையாட்டுப்போட்டி மிகவும் சிறப்பாக நடைபெற்றது' இதன் தலைமையாசிரியர் திரு.பரம சிவானந்தம்பிள்ளை, மிகவும் சிறந்த முறையில் ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

திருக்கோணமலை சென் யோசப் தமிழ்ப் பாடசாலையில் வருடாந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. மத்தியூஸ் இல்லம் முதல் இடம் பெற்றது.

## சிவானந்த வித்தியாலயம் விளையாட்டுப் போட்டி

### இராமகிருஷ்ண இல்லத்துக்கு முதலிடம்

மட்டக்களப்பு

"நமது சமூகங்களிடையே சமாதானமும், நல்லெண்ணமும் அவசியம் வளர்க்கப்படவேண்டியன. விளையாட்டுப் போட்டிகள்மூலம் அவற்றை வளர்க்கலாம். இளைஞர்கள் விளையாட்டுப் போட்டிகளிற் கலந்து கொள்வதால் அவர்கள் சிறந்த பிரசைகளாகவும், சமாதான, நல்லெண்ணத் தூதுவர்களாகவும் நிச்சயம் மாறமுடியும்".

இவ்வாறு கல்லடி உப்போடை, சிவானந்த வித்தியாலய இல்லங்களின் விளையாட்டுப் போட்டியின்போது அரசாங்க அதிபர் திரு. ஜே.வி. பொன்சேகா தமது தலைமை உரையிற் குறிப்பிட்டார்.

இராமகிருஷ்ண, விபுலானந்தா ஆகிய இல்லங்களாக மாணவர்கள் பிரிந்து போட்டியிட்டனர். முடிவில் அதிகப்படியான புள்ளிகளைப்பெற்று இராமகிருஷ்ண இல்லம் முதலிடத்தைப் பெற்றது. 2ம், 3,ம் இடங்களை விபுலானந்த இல்லம், விவேகானந்த இல்லம் என்பன பெற்றன.

இல்ல அலங்கரிப்புப் போட்டியில் இராமகிருஷ்ண இல்லம் 1-ம் இடத்தையும், விவேகானந்த இல்லம், விபுலானந்த இல்லம் 2-ம், 3-ம் இடங்களையும் பெற்றன.

பார்வையாளருக்கான ஒரு மைல் ஓட்டப்போட்டியில் சுத்தானந்த விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த திரு. இ. தர்மலிங்கம் 1-ம் இடத்தையும், மோகன் விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த திரு. க. ஞானசூரியம் 2-ம் இடத்தையும் பெற்றனர். போட்டியிற் பரிசுபெற்ருேருக்குரியபரிசுகளைத் திருமதி பொன்சேகா வழங்கினர்.

முடிவில் போட்டியை ஒழுங்கு செய்த திரு. க. உ. வே. சிவபாதசுந்தரம் அனைவருக்கும் நன்றி கூறினர்.


COMETS

For Speed


TOURIST CLASS

for economy to

MALAYA

HONG KONG

JAPAN



Fly BOAC *Britannia* to all these and many other places —by frequent services eastbound from Colombo. You'll fly economically by Tourist Class, and comfortably too, aboard the world's finest and smoothest jet-prop airliner. Excellent meals are served en route, and your comfort is in the *personal* care of BOAC's world famous cabin staff. BOAC's de Luxe First Class and Tourist services fly you to major destinations on all six continents.

*Consult your local BOAC Appointed Travel Agent or James Finlay & Co. Limited, 63, Queen Street or Seaside Office, Galle Face Hotel, Colombo. 'Phone: 78281 or 2267*

ALL OVER THE WORLD

BOAC

TAKES GOOD CARE OF YOU

## ஆசிரியர் சம்பள அறிக்கை பொதுக் கூட்டத்திற் கண்டனம்

திருக்கோணமலை

சமீபத்தில் திருக்கோணமலையில் நடைபெற்ற ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அகில இலங்கை ஆசிரியர் சமர்ப்பித்த ஆசிரியர் சம்பள அறிக்கை வன்மையாகக் கண்டிக்கப்பட்டது. பிரதம பயிற்சிக்கும், சிரேஷ்ட பயிற்சிக்கும், பட்டதாரிகளுக்கும் ஒரே சம்பளத்தை வகுத்திருப்பது தவறென திரு. ஏ. சிறீஸ்கந்தராஜா குறிப்பிட்டார். எனவே இச் சம்பளத் திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்தல் வேண்டும் என்னும் பிரேரணை ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. திரு. பெ. கணநாதபிள்ளை இலங்கையில் பல்கலைக்கழகக் குழுவின் அறிக்கை விரைவில் வெளியிடப்படல் வேண்டும் என்ற பிரேரணையைப் பிரேரித்தார். இதுவும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. பின்வருவோர் இவ்வாண்டு உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: வண. பிதா எப். ஏ. பெண்டர்.

உப தலைவர்கள்: திரு. ச. அம்பலவாணர், செல்வி ம. மாரிமுத்து.

காரியதரிசி: திரு. பெ. கணநாதபிள்ளை.

உப காரியதரிசி: திரு. ஏ. சிறீஸ்கந்தராஜா.

தனாதிகாரி: செல்வி சரஸ்வதி சுவாமிநாதன்.

தாய்ச்சங்கப் பிரதிநிதி: திரு. எம். பெனடிக்ற்.

மாநாட்டுப் பிரதிநிதிகள்: திருமதி ஏ. டபிள்யூ. தங்கராசா, திரு. கோ. கோணேசபிள்ளை.

## சுந்தரமூர்த்தி நாயனர் பட்டினத்தடிகள் குருபூசை

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் ஆதரவில், சென்றசெவ்வாயன்று, நாவலர் மண்டபத்தில் சுந்தரமூர்த்தி நாயனர் குருபூசை நடைபெற்றது. காலையில் சிவபூஜா மண்டபத்தில் சிவபூசையும், நடராஜர்பூசை, நாவலர்பூசை, புராண படனம், மகேச்வரபூசை நடைபெற்றன. மாலையில், சுந்தரமூர்த்திநாயனர் பற்றி திரு. வே. சோமசுந்தரம், திரு. இ. திருநாவுக்கரசு இவர்கள் விரிவுரையாற்றினர்.

நாளை ஞாயிற்றுக்கிழமை பட்டினத்தடிகள் குருபூசை. அன்று இரவு 6.30 மணிக்கு அதேமண்டபத்தில் ஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயர், திரு. செ. சின்னத்துரை இவர்கள் சொற்பொழிவாற்றுவர்.

## முகவீணைக் கச்சேரி

திருநெல்வேலி பெருங்குளம் ஆதீன வித்துவான் திரு. எஸ். எஸ். ரெங்கப்பாவின் முகவீணைக் கச்சேரியொன்று சென்ற ஞாயிற்றுக்கிழமைமாலை யாழ்ப்பாணம் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. பெரும்பாலும் தமிழ் உருப்படிகளே கச்சேரியில் இடம் பெற்றன. அவரது இராக ஆலாபனைகளும் உருப்படிகளும் இரசிகர்களுக்கு இனிய விருந்தாக அமைந்திருந்தன. திரு. எஸ். இரத்தினசபாபதியின் வயலின் இசையும் திரு. எம். என். செல்வத்துரையின் மிருதங்க வாசிப்பும் கச்சேரியைச் சிறக்கச் செய்தன. இக் கச்சேரி யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றத்தின் ஆதரவில் நடைபெற்றது.

## பி. பி. ஸி. டெலிவிஷன் முன் திரு. வன்னியசிங்கம் எம்.பி.

இலங்கையிலுள்ள முக்கிய அரசியற் கட்சித் தலைவர்களின் பொது அபிப்பிராயங்களை ஒலிப்பதிவுசெய்து பின் அவற்றை டெலிவிஷன் மூலம் மேனாட்டுமக்களுக்கு அளித்து வரும் பி. பி. ஸி. டெலிவிஷன் கோஷ்டி 12-8-59 புதன்கிழமை தமிழ் அரசுக்கட்சித் தலைவர்களில் ஒருவரான திரு. வன்னியசிங்கத்தைப் பேட்டிகண்டது. குறிப்பிட்ட பேட்டியில் திரு. வன்னியசிங்கம் இலங்கைவாழ் தமிழ்மக்களின் இன்றைய நிலையை எடுத்துரைத்ததாக அறியப்படுகிறது. திரு. வன்னியசிங்கத்தின் பேட்டியில் அவர் இலங்கைவாழ் தமிழ் மக்களுக்குத் தொழிற்கல்வியை அரசாங்கம் மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

## தேசிய அடிப்படையில் சமஷ்டிக் கட்சி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கே: போராட்ட மென்றால் சென்ற வருஷம் நடத்தியது போன்ற போராட்டமா?

ப: அதைப்பற்றி எவ்வித முடிவும் செய்யவில்லை. யாழ்ப்பாணத்தில் இப்போது கூடும் கூட்டத்தில் இதெல்லாம் ஆலோசிக்கப்படலாம். அவசரப்பட்டு எவ்வித நேரடி நடவடிக்கையும் எடுக்கப்படாதென்றும், அதற்குமுன் தமிழ் மக்களைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றும், அதற்கிடையே பொருளாதாரத்திட்டம் வகுத்து அதை நடத்திவைக்கவேண்டுமென்றும் ஒரு சார்பினர் கருதுகின்றனர்.

சமஷ்டிக் கொள்கை தேசிய விஷயமென்றும், இதை தேசிய அடிப்படையில் தீர்மானிக்க வேண்டுமென்றும் இப்போது "தமிழரசு" என்ற கட்சி, வகுப்புமுறையில் இயங்குவதாயும், தேசியமுறையில் நடாத்தி, சிங்கள மக்களில் ஒருசார்பினரின் ஆதரவையும் பெற்றாலே, இந்த லட்சியத்தை அடைய முடியுமென்றும், அந்தவகையில், தேசிய அடிப்படையில், கட்சியை விரிவானபடி திருத்தி அமைக்கவேண்டுமென்றும் ஒரு கருத்து நிலவுகின்றது.

ஆனால் கட்சியிலுள்ள தீவிரவாதிகள், உடனடியாகப் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டுமென்றும் தேசிய முறையிற் கட்சியைத் திருத்தி அமைக்கக் கூடாது என்றும் கருதுகின்றனராம்.

தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், அவசரப்பட்டு உணர்ச்சி வேகத்தில் எதுவும் செய்துவிடக்கூடாது என்றே இருக்கின்றார்.

தமிழரின் அபிலாஷைகளில் அநுதாபப்படும் சிங்களவரின் ஆதரவையும் பெறவேண்டும் என்று கோப்பாய் பிரதிநிதி திரு. வன்னியசிங்கம், யாழ்ப்பாணக் கூட்டத்தில் கூறியது மிக முக்கியமானதென்றும், இது அக்கட்சியை விரிந்த தேசிய அடிப்படையில் திருத்தி அமைக்கும் நோக்கத்தைத் தழுவியதென்றும் கூறப்படுகிறது.

கட்சியின் எதிர்கால வேலைத் திட்டத்தைப்பற்றி ஆலோசிக்கையில் இவற்றைப்பற்றி விவாதம் செய்யப்படுமென்றும், எல்லாம் டிசம்பரில் கூடும் பத்தாவது மகாநாட்டிலேயே முடிவான தீர்மானம் செய்யலாமென்றும் தெரிகிறது.

இன்னும் அநேகமாக ஒரு வருஷத்துக்குள் பொதுத் தேர்தல் வருவதால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 25 தொகுதிகளிலும் அபேட்சகரை நிறுத்துவது பற்றியும், இக் கூட்டத்தில் பூர்வாங்கமாக ஆலோசனை செய்யப்படுமென்று தெரிகிறது.

## கிருஷ்ணனுக்கு விசேஷ அமெரிக்க பரிசு


டென்னிஸ் வீரரான ஆர். கிருஷ்ணனுக்கு அமெரிக்காவைச் சேர்ந்த பிலடல்பியா ராஜ்யத்தில், மிகப் பெரியதோர் வெள்ளிக்கோப்பை பரிசளிக்கப்பட்டது.

பிலடெல்பியா ராஜ்யத்தில் ஒவ்வொரு வருஷமும் அங்கு வரும் விளையாட்டு வீரர்களில், மக்களில் மிகவும் பிரியமானவரை, வாக்கெடுப்பின்மூலம் தெரிவுசெய்து, அவருக்குப் பெரிய வெள்ளிக்கோப்பை பரிசாக வழங்குவது வழக்கம். இந்தமுறை டென்னிஸ்பந்தயத்தின் கடைசிநாளன்று, கிருஷ்ணனுக்கு இந்த விசேஷப் பரிசு கிடைத்தது. பிறகு அவர் டெலிவிஷன்முன் தோன்றினர்.



மகத்தான 3-வது வாரம்!

முருகன் (ஜிந்துப்பிட்டியா) ஓடியன் (மவுண்ட் லவினியா) ராணி (யாழ்ப்பாணம்) லிபேர்ட்டி (வதுளை) ஜோதி (திருக்கோணமலை)

முதலிய படமாளிகைகளில் நூற்றுக்கணக்கான மக்கள் கண்டு களிகொள்கின்றனர்!



எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி
எஸ். வி. சகஸ்ரநாமம்
டி. ஆர். ராமச்சந்திரன்
வி. ஆர். ராஜகோபால்
டி. பாலசுப்பிரமணியம்
மற்றும் பலர்
திறம்பட நடித்த



டைரக்‌ஷன்: பீம்சிங்

சாவித்திரி பிக்ஸர்ஸ்

நடனம்: சாயி - சுப்புலெட்சுமி

பிரஸிடெண்ட் பஞ்சாட்சரம்

பின்னணி:
டி. எம். சௌந்தரராஜன்
எஸ். ஸீ. கிருஷ்ணன்
எம். எல். வசந்தகுமாரி
பி. லீலா பி. சுசீலா


"சபாஷ் மீனா" வுக்குப்பின் தமிழ்த்திரையில்
சிறந்த ஹாஸ்ய விருந்தாக ஒளி வீசும்
இப்படத்தைப் பார்க்கத் தவறாதீர்கள்!

சங்கீதம்: ஜி. ராமநாதன்

வெற்றிகரமான 3-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித் தெரு) வெலிங்டன் - மனோகரா (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) ஸ்ரீ கிருஷ்ண (திருக்கோணமலை) விஜிதா (மஸ்கேலியா) மொடர்ன் (பதுளை) ஜோதி (களகா)



★ சிவாஜி கணேசன்
★ என். டி. ராமராவ்
★ டி. கே. பகவதீ
★ வி. நாகையா
★ பி. வி. நரசிம்மபாரதி
★ வி. கே. ராமசாமி
★ ஓ. ஏ. கே. தேவர்
★ பத்மினி
★ ஜி. வரலெக்ஷ்மி
★ எம். என். ராஜம்
★ சீ. டி. ராஜகாந்தம்

மற்றும் பலர் நடித்த



டைரக்ஷன்: கே. சோமு
வசனம்: ஏ. பீ. நாகராஜன்
பாடல்கள்: மருதகாசீ
சங்கீதம்: கே. வீ. மகாதேவன்
தயாரிப்பு: எம். ஏ. வேணு
ஸ்ருடியோ: ரத்னு (சேலம்)

# சம்பூர்ண ராமாயணம்

மகத்தான 4-வது வாரம்!

செல்லமஹால் (கொழும்பு) தினசரி மாலை 6, இரவு 9-30 மணி வின்ஸர் (யாழ்ப்பாணம்)

# ஸ்ரீ ராம பக்த ஹனுமான்

(தமிழ்)

கண்ணைக்கவரும் பல வர்ணக்காட்சிகள் நிறைந்த ஓர் அற்புத ஓவியம்!

21-ந் திகதி தொடக்கம்

எல்பின்ஸ்டன் (கொழும்பு) ரொக்ஸி (வெள்ளவத்தை) வேல்ஸ் (கண்டி) வின்ஸர் (யாழ்ப்பாணம்)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், பத்மினி
மற்றும் பலர் திறம்பட நடித்த

# வீரபாண்டிய கட்டபொம்மன்

ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டியதோர் அற்புதச் சித்திரம்!


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி வெளியிடப்பெற்றது.

ஈழநாடு



# இந்தியா




## பிரயாண
## சிறப்பு மலர்

15-8-59

ஜெர்மனியில் உற்பத்தி செய்யப்பட்ட

# தமிழ் ரைப்ரைட்டர்கள்

**ஐடியல் ஸ்டான்டேட் டைப்ரைட்டர் நம்பர் : 10**




இந்த மெஷீன் சகல நவீன காரியாலய தேவைகளையும் பூர்த்தியாக்குமோர் இயந்திரமாகும். இதில் கடதாசியை இலகுவாகச் செருகக்கூடிய 5 உன்னத ஆழ்த்தியுடன் கூடிய பேப்பர் ஒழுங்குபடுத்தியும், 'கறீஜ்' பாகம் சப்தமில்லாது திரும்பிச் செல்வதற்கேதுவானதும், ஒவ்வொரு கறீஜ் நீள அளவையும் தனித்தனியே நிலைப்படுத்தக் கூடிய அளவு வரிசைப்படுத்தி தடையும்போன்ற பல மேன்மையான சாசனங்களுள்ளது. தசம் ஆறு அளவு வரிசைப்படுத்தி முதலியன. 11, 15, 18 அங்குல கறீஜ்.

ரூ. 865/- லிருந்து ரூ. 1015/- வரை.

**எரிக்கா போட்டபிள் டைப்ரைட்டர்**

Erika



இந்தக் கனம் குறைந்த மெஷீனில் நடுத்தர டைப்ரைட்டர்களிலிருக்கும் சகல அம்சங்களும் உள்ளது. கந்தோரில் அல்லது வீட்டில் பாவிப்பது போன்று பிரயாணத்தின் போதும் அதே பிரயோசனமானது.

நேரில் இயக்கிக்காட்ட வருக அல்லது விளக்கப் பிரசுரத்திற்கு எழுதுக.

## ஆவ்ரா லிமிட்.,

அலுவலக சாதனப் பகுதி

செட்டியார் தெரு, கொழும்பு.

போன் : 7211 & 7212.

யாழ்ப்பாணத்தில் சப் ஏஜன்டு: ஓட்டோஸ் லிமிடெட்.

---

எப்பொழுதும்

★ சுவை மிகுந்தது

★ சுத்தமானது

★ உற்சாக மூட்டுவது

# "பாரீஸ்" இனிப்புகள்




இலங்கை விநியோகஸ்தர்கள் :

## மஹாராஜா டிஸ்ரிபியூட்டேர்ஸ் லிமிடெட்,

54, பாங்ஷால் வீதி, கொழும்பு.

---

சேமியுங்கள் !

# "கிறவுன்"ஸின்

**மிகப்பெரிய விற்பனையில்**



★ ஆயிரத்துக்கு மேற்பட்ட சலுகைகள்....

★ விரைவில் வாருங்கள்......

★ சிறந்தவற்றை வாங்குங்கள்....

## கிறவுண் சில்க் ஸ்டோர்ஸ்

(நவீன புடைவைகளும்றெடி-மேட் உடைகளும் இங்குகிடைக்கும்)

118, மெயின் வீதி, :: கொழும்பு

---

# மொரிஸன் பம்புகள்

நெருங்கிப் பொருந்திய விவசாயத்துக்குரிய பம்புகள் மண்ணெண்ணெயால் தாமே இயங்கவும், நீடித்த பாவனைக்கும் உத்தரவாதமுள்ளவை,

1 1/2, 2, 2 1/2 அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏகவிநியோகஸ்தர்கள் :

## கே. என். அப்துல்காதர் ராவுத்தர்

அன் கம்பனி லிமிட்டெட்

312, ஸ்கின்னர்ஸ் ரேட் தெற்கு, கொழும்பு-10

டெலிபோன் : 2956. தந்தி : MEDAL

வடமாகாண விநியோகஸ்தர்தள் :

**ராஜு ஸ்டோர்ஸ்**

2/B ஸ்டான்லி ரேட், :: யாழ்ப்பாணம்

# கலைச்செல்வம் நிறைந்துள்ள பொன்னுடான தென்னுடு

## அன்னை இந்தியா அழைக்கின்ருள்!

யாத்திரை செய்யவேண்டுமென்ற ஆசையும் ஆவலும் நம்மில் பலருக்குமுண்டு.

இலங்கையிலேயுள்ள ஒரு தமிழரைக் கேட்டால், காசிக்குச் சென்று, கங்கையில் நீராடி விசுவநாதரைத் தரிசிக்கவேண்டுமென்பதே தங்கள் வாழ்க்கையின் முடிவான ஆசையென்பர். பௌத்தர்களைக் கேட்டால், புத்தகயா சென்று ஒருமுறை தரிசித்தால் அதுவே போதுமென்பர்.

முற்காலத்திலே காசியாத்திரை செல்லுவதென்பது அபாயமானது. திரும்பிவருவதே சந்தேகம். ஆனுல் இக்காலத்தில் யாத்திரை செய்ய பல வசதிகளுமுள்ளன.

தெற்கே கதிர்காமம் முதல் வடக்கே கைலாசம் வரை ஒரு சில நாட்களுக்குள்ளாக யாத்திரை சென்றுவிட்டு பலர் சுகமாகத் திரும்புவதைப் பார்க்கின்ருேம்.

ஆனுல் ஐரோப்பிய நாடுகளிலே, உல்லாசப் பிரயாணிகளை உலகின் பல பாகங்களிலுமிருந்தும் வரவர வசீகரித்து, பெரும் பயன் அடைகின்றனர். இதனுல் நாட்டுக்கு வருமானம். பல தேசமக்களின் அபிமானமும் சந்தோஷமும், வளர்ந்து வர்த்தகமும் கைத்தொழிலும் பெருக வழிபிறக்கின்றது. ஆகவே யாத்திரைசெய்வதற்குள்ள சங்கடங்களைக் குறைத்து, வசதிகளையும், சலுகைகளையும் பெருக்கிப் பெருநன்மை அடைகின்றனர்.

சமீப வருடங்களில் இந்திய அரசாங்கமும், உலகின் பல பாகங்களிலிருந்தும் யாத்திரீகர்களை வசீகரிக்கப் பல பல ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. "டூரிஸ்ட் சென்டர்" களை இலங்கை உள்ளிட்டு, உலகின் பலநாடுகளிலும்ஏற்படுத்தி, இந்தியாவிலே பயனுள்ள முறையிலே சுகமாக யாத்திரைசெய்யக் கூடுமான உதவிகளை எல்லாம் அளிக்கின்றனர். சம்புத்த ஜயந்தியின் போது மிகக் குறைந்த செலவில் இந்தியா வெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்ய ரயில்வே கட்டணச் சலுகைகளை விசேஷமாக அளித்திருந்தார்கள். இத்துறையிலே இருதேச அரசாங்கங்களும் சேர்ந்து ஒத்துழைத்து, பல தடைகளை நீக்கி வசதிகளைப் பெருக்கவேண்டியுள்ளது.

மக்கள் இவ்விதம் அதிகமாக யாத்திரை செய்வதால் இரு தேசமக்களிடையேயும் நட்பும் நல்லுறவும் பலப்படவும், பல வித நன்மைகள் ஏற்படவும் முடியும். இந்த நன் நோக்கத்துடனேயே இந்த விசேஷ மலரும் வெளியிடப் படுகின்றது.

**வேறு எந்த நாட்டிலும் இல்லாத தனிச்சிறப்பு தென்னுட்டுக்கு உண்டு. காரணம் அங்குள்ள கணக்கற்ற கோவில்களும், உன்னத கோபுரங்களுமேயாகும். இதனுல்தானே என்னவோ, மாணிக்கவாசகப் பெருந்தகை "தென்னுடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்று பாடியருளினுர்.**

**தென்னுட்டிலுள்ள பல திருக்கோவில்களைப் பற்றியும் அங்குள்ள சிறந்த கலைச்செல்வங்களைக் குறித்தும் எடுத்து விவரிப்பதாயின் அது பல நூல்களாகப் பெருகும். இவற்றைக் குறித்து சுருக்கமாகத் தொகுத்து இக்கட்டுரையில் தருகின்ருர் திரு. கோபால் அவர்கள்.**



**ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்ச கிருத்தியங்களையும் செய்து காலைத் தூக்கி ஆனந்த நடனமாடும் ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருவுருவம், தென்னுட்டுக் கலைச் செல்வங்களுள் மிகச் சிறந்ததாகும். உலக மக்களெல்லாம் இதைக் கண்டு வியப்புறுகின்ருர்கள். கோவிலில் பூசைக்குரிய இத் திருவுருவம் திருவனந்தபுரம் கண்காட்சி சாலையிலே காட்சி அளிக்கின்றது.**

பாரத புண்ணிய பூமியே ஒரு பெரிய கோவில். இப் புண்ணிய பூமியில் எங்கும் கலைக் கோயில்கள் மலிந்திருந்தன. ஆனுல் அன்னியர்கள் படையெடுத்து வந்து வட நாட்டிலிருந்த ஆலயங்கள் பலவற்றை இடித்து அழித்துவிட்டார்கள். இந்த வெறிக்கு தென்னுட்டு ஆலயங்கள் தப்பின. இதனுல் நமது கலைச் செல்வங்கள் காப்பாற்றப் பட்டன. உன்னதமான கோபுரங்கள் வானளாவி நின்று, உலகிலேயே தமிழனுக்குத் தனிப் பெருமை அளித்து வருகின்றன. இன்னும் வெளி நாட்டவர்கள் பலர் வந்து, இக் கோவில்களையும் கோபுரங்களையும் கண்டு வியப்புற்று நமது கலைத் திறனை மெச்சிப் பாராட்டுகின்ருர்கள்.

தென்னுட்டிலே கோயிலில்லாத ஊரே கிடையாது. ஒரு சின்னக் கிராமமாயினும் சரி, அங்கே கோயில்கள் சில உண்டு. கோயிலில்லாத ஊரில் குடியிருக்க வேண்டாமென்பது தமிழ் வாக்கு. பெரிய கோவில்களிலே நாடக அரங்கு, சங்கீத மண்டபம், ஆலோசனைச் சபா மண்டபம் முதலிய பலவும் இருப்பதைக் காணலாம்.

இக் கோவில்களைப்பற்றிய விபரங்களை யெல்லாம் கூறுவதாயின், பல பெரிய புத்தகங்களாகும். ஒரு திருத்தலத்தைப் பற்றிய வரலாற்றை எழுதுவதென்ருலே, ஒரு பெரிய நூலாகும். தென்னுட்டிலுள்ள முக்கிய ஸ்தலங்களில் சிலவற்றைப் பற்றியே மட்டும் இங்குப் பார்ப்போம்.

சென்னையிலிருந்து புறப்பட்டு தெற்கு நோக்கி வலமாக வந்து, கன்யா குமரி வழியாக, மேற்கே திருவனந்தபுரம், மைசூர் மார்க்கமாக வடக்கே பல திவ்ய ஸ்தலங்களைப் பார்ப்போமா?

### சென்னையிலே

சென்னை நகரிலே, மைலாப்பூரிலேதான், திருவள்ளுவப் பெருந்தகை அவதரித்தது. அந்தப் புண்ணியப் பதியில் கபாலீஸ்வரரின் கோவிலும், உன்னத கோபுரமும், திருக்குளமும் அழகாக அமைந்து, கண்டோர் மனத்தைக் கவர்கின்றன. இங்கே முக்கிய வருஷ உற்சவத்தின் கடைசி நாளன்று அறுபத்து மூன்று நாயன்மார்களும் சேர்ந்தாற்போல் புறப்பட்டு பவனிவரும் காட்சியைக்காண லட்சக் கணக்கான மக்கள் கூடுவர்.

பக்கத்திலே திருவல்லிக்கேணி என்ற விஷ்ணுஸ்தலம். ஸ்ரீ பார்த்த சாரதி கோவில் இங்கு அமைந்துள்ளது. ஏற்கெனவே இது நரசிம்மமூர்த்தியின் கோவிலாம். இங்குள்ள அழகான (திரு அல்லிக் கேணி) குளத்தை ஸ்ரீ கிருஷ்ணர் கண்டு வசப்பட்டு தமது இருப்பிடமாகச் செய்து கொண்டு விட்டாரென்பது ஸ்தலபுராணம். ஜனவரிமாதம் வைகுண்ட ஏகாதசியும் மார்ச்சு மாதம் வசந்தோற்சவமும் இங்கு மிக விசேஷம்.


முருகனுக்கும் இங்கு முக்கிய கோவிலுண்டு. "தருமமிகு சென்னையில் கந்த கோட்டத்து வளர் தலமோங்கு கந்த வேளே!" என்று இராமலிங்க சுவாமிகள் பாடிய கந்த கோட்டம் இன்றும் இருந்து, முருக பக்தர்களை வசீகரித்து அருள் பாலித்து வருகின்றது. சில மைல்களுக்கு அப்பாலுள்ள திருவொற்றியூர் பாடல் பெற்ற ஸ்தலம். சிவபெருமானுக்கு இங்குப் பெரிய கோவிலுண்டு.

### காஞ்சிபுரம்

சென்னையை விட்டுப் புறப்பட்டு தெற்கே 50 மைல் தூரத்திலுள்ள காஞ்சிபுரம் வருவோம். அது, எங்கும் கோவில்கள் நிறைந்த ஊராகும். "நகரேஷு காஞ்சி" என்று கூறுவதுண்டு. நகரங்களில் சிறந்தது காஞ்சிபுரமென்பர். சின்னக்காஞ்சி, பெரியகாஞ்சி என்று இரண்டாகப் பிரிக்கப்பட்டது இத்தலம். சின்னக் காஞ்சியில் வரதராஜர், வைகுண்டநாதர் என்ற விஷ்ணு கோவில்களும், பெரிய காஞ்சியிலே ஏகாம்பரநாதர், காமாக்ஷி, கைலாசநாதர் கோவில்களும் குமரகோட்டம், காமகோடிபீடம் முதலியனவும் உள்ளன. கைலாசநாதர், வைகுண்டநாதர், வரதராஜர் இக் கோவில்களிலே அரிய சிற்பக் கலைச் செல்வங்களைக் காணலாம். பல்லவ மன்னர்கள் செங்கோல் ஓச்சியகாலத்திலே, அவர்களுக்குகாஞ்சிபுரம் தலைநகராகவும், மகாபலிபுரம் முக்கிய துறைமுகமாகவுமிருந்தன. மகாமல்லர் என்ற பல்லவ ராஜன் பெரிய கலாரஸிகர். மலையைக் குடைந்து குகைக் கோவில்களையும், இரதங்களையும், சிற்பச் சிலைச் செல்வங்களையும் அளித்து, அழியாப் புகழ்பெற்றவர் அவர்.

சென்னைக்கு 50 மைல் தூரத்திலுள்ள திருத்தணி, முருகன் திருத்தலம். ஆந்திர ராஜ்யம் சென்ற இந்த முருகன் மீண்டும் தமிழ் ராஜ்யத்துக்குத் திரும்பிவிட்டார். இக்கோயில் ஒரு குன்றின் உச்சியில் கட்டப்பட்டது. ஆடிமாத கார்த்திகையன்று, லட்சக் கணக்கான பக்தர்கள் கூடித் தரிசிப்பார்கள். வள்ளியை மணம் புணர்ந்தபின், இந்த இடத்தில்தான் முருகன் தங்கியிருந்ததாயும், அதனுலேயே இதற்கு **தணிகாசலம்** என்ற பெயர்வந்ததென்றும் கூறுவர்.

(IV-ம் பக்கம் பார்க்க)



திருவனந்தபுரம் காட்சி சாலையிலுள்ள சோமஸ்கந்தா விக்ரகம்

# கலைச்செல்வம் நிறைந்துள்ள பொன்னுடான தென்னுடு

(III-ம் பக்கத் தொடர்ச்சி)

கர்நாடக சங்கீத மும்மணிகளுள் ஒருவரான முத்துச்சாமி தீட்சதர் இந்தத் தலத்தில் தான் அருள்பெற்றது.

## வடவேங்கடம்

வட வேங்கடம் அல்லது திருப்பதி தரிசனம் செய்யலாமா? சென்னையிலிருந்து ரயில் மார்க்கமாகவோ, பஸ் வழியாகவோ இங்குச் செல்லலாம். ரேணுகுண்டாவுக்குப் பக்கத்திலுள்ள திருப்பதி ஏழுமலைகளினிடையே அழகான இயற்கைச் சூழ்நிலையில் அமைந்துள்ளது. அங்குக் கோவில் கொண்டுள்ள ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் முன்னர் முருகனை இருந்ததாகவும் கூறுவர். மலை அடிவாரத்தில் பல கோவில்களுள்ளன. திருச்சானூர் எனுமிடத்திலே ஸ்ரீ பத்மாவதி அம்மனுக்கு உள்ள கோவிலில், கல்யாணங்கள் அதிகம் நடைபெறும்.

இனி திருவண்ணமலைக்குப் போவோம். இங்குள்ள புராதன கோவிலில் ஜோதிலிங்கமுள்ளது. பஞ்சலிங்கங்களிலே காஞ்சியில் பிருதிவி (மண்) லிங்கம், திருச்சிக்குப் பக்கத்திலுள்ள திருவானைக்காவலில் அப்பு (ஜல) லிங்கம், திருப்பதிக்குப் பக்கத்திலுள்ள காளஹஸ்தியில் வாயு (காற்று) லிங்கம், அண்ணமலையில் ஜோதி (தீ) லிங்கம், சிதம்பரத்தில் ஆகாசலிங்கம். திருவண்ணமலையை மனத்தால் நினைத்தாலும் முக்தியுண்டு என்பர் (ஸ்மரணே அருணசலம்) மலையும், கோவிலும் கண்டதும் யார் மனத்தையும் கவரும். இங்குதான் "கருணைக்கு அருணகிரி" உள்ளொளி கண்டு அருள் பெற்றதென்பர்.

## சிதம்பரம்

பஞ்ச கிருத்தியங்களையும் செய்து, திருநடம் புரிகின்ற, ஸ்ரீ நடராஜப்பெருமானை சிதம்பரம் சென்று தரிசிப்போம். தூரத்தில் செல்லும் போதே பல உயரிய கோபுரங்கள் 'வா, வா' என்று அழைக்கின்றன. கோவிலுக்குள்ளே, பெரிய திருக்குளம், ஆயிரம் கால் மண்டபம், தங்க ஓடுகள் போட்ட கனகசபை எல்லாம் உண்டு. கனகசபை திருநடனத்தைக் கண்டு ஆனந்தித்துக் கொண்டே இருக்கின்ருர் பக்கத்திலே கோவிந்தராஜப்பெருமாள். மார்கழி திருவாதிரை, ஆனித் திருமஞ்சனம், தைப்பூசம் முதலிய உற்சவங்களுக்கு ஏராளமான கூட்டம் வரும். இலங்கையிலிருந்தும் அடியார்கள் ஏராளமாக வந்து பக்தியுடன் தரிசிக்கின்ருர்கள்.

தெற்கே, சீர்காழியில் தான் சைவ சமய குரவராகிய திருஞானசம்பந்தர், சைவம் தழைக்க அவதரித்தது. உமையம்மை ஞானப்பால் அளித்தது. தோணிபுரத்து அண்ணல் ஆபத்தில் காக்கக் காத்திருக்கின்ருர். பக்கத்தில் வைத்தீச்வரன் கோவிலில் செல்ல முத்துக்குமரன் காட்சியளிக்கிருர். மேலும் நாம் தெற்கே வர, கும்பகோணத்திலே பல பெரிய கோவில்களைத் தரிசிக்கலாம். 12 வருஷங்களுக்கு ஒரு முறை மகாமகம் (மாமாங்க) உற்சவம் இங்குதான் நடைபெறுகிறது. மாமாங்கக் குளம் பெரிய அளவில் அழகாக அமைந்துள்ளது.

தஞ்சாவூரிலேயுள்ள பெரிய கோவில், ராஜராஜ சோழனல் கட்டப்பட்டது. இருநூறு அடி உயரத்துக்கு மேலுள்ள கம்பீரமான கோபுரம், தமிழரின் சிற்பத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு. சோழர் ஆட்சியின் சிறப்பினை விளக்கும் பல சித்திரங்களையும், சிலாசாஸனங்களையும் காணலாம். மூலஸ்தானமும், நந்தியும், துவாரபாலகரும் மிகவும் பெரிய அழகிய உருவங்கள். அக் கோயிலைச் சுற்றி கோட்டையும், அகழியுமுண்டு. . திராவிடச் சிற்பலட்சணங்களுடன் கூடிய இக்கோவில் கட்டி சுமார் ஆயிரம் ஆண்டுகளாகின்றன.

தஞ்சைக்குப் பக்கத்திலே திருவையாறு காவிரிதீரத்திலுள்ள இப்புண்ணிய ஸ்தலத்தில்தான், அப்பர் சுவாமிகளுக்கு, ஆடி அமாவாசையன்று, சிவபெருமான் கைலாசக் காட்சியை அளித்து ஆட்கொண்டது. "கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்" என்று அவர் பாடியதும் இங்குதான். கர்னடக சங்கீத மேதையான ஸ்ரீ தியாகையாவின் சமாதிக்கோவிலில், மார்கழியில் சங்கீத உற்சவம் நடைபெறுகிறது.

## திருச்சியில்

முப்பதுமைல் தூரத்திலே நன்றுடையானும் தீயதில்லானும், குன்றுடையானுமான தாயுமான சுவாமி, கோவில் கொண்டுள்ளார். மலைக்கோட்டைக்கோவில் அபூர்வ வேலைப்பாடுடன் கூடியது. மேலே உச்சிப்பிள்ளையார் கோவில். அங்கிருந்து பார்த்தால் தெப்பக்குளம், காவிரி, நகரம் முதலிய அற்புதமான காட்சிகளைக் காணலாம். காவிரிக்கு மறுகரையில் புகழ்பெற்ற ஸ்ரீ ரங்கம். மிகப் பெரிய கோவில், அபூர்வ சிற்ப, சித்திரவேலைப்பாடுகளுடன் கூடியது. திருச்சிக்கும் ஸ்ரீ ரங்கத்துக்கும் இடையிலே, அப்புலிங்க மூர்த்தியான திருவானைக்கா அண்ணல் காட்சி அளிக்கின்ருர். இதுவும் பெரியதோர் ஆலயம். அம்மன் பெயர் அகிலாண்டேஸ்வரி.

இலங்கையிலே ராவணசம்காரம் செய்துவிட்டுப் பாரத நாட்டிலே ஸ்ரீ ராமர் சிவலிங்க பூசை செய்த இடம்தான் ராமேஸ்வரம். கோவிலும், பெரிய மண்டபமும் புகழ்பெற்றவை. இந்தியாவில் எங்குமே இம்மாதிரிப் பெரிய அழகிய பிராகாரங்கள் கிடையா. ராமாயணம் சித்திரரூபமாகத். தீட்டப்பட்டுள்ளது. பக்கத்தில் தர்பசயனம், நவபாஷாணம், தனுஷ்கோடி முதலிய ராமர் வணங்கிய ஸ்தலங்களுள்ளன.

## மதுரையில்

மதுரையை ஒரு கோவில் நகரமென்பர். கோவிலை மத்தியில் கொண்ட மதுரை நகர் மிகவும் வனப்பு வாய்ந்தது. திருச்சியிலிருந்து 100 மைல் தூரம்தான். இக்கோவிலிலுள்ள சிலைச் செல்வமும் கலைச் செல்வமும் தமிழனின் பெருமையை உலகுக்குச் சொல்லாமற் சொல்லுகின்றன. கம்பீரமான கோபுரங்கள், எண்ணிறந்த மண்டபங்கள், முதலியன ஒப்பற்றவை. பாண்டியர்கள் அரசாண்ட இந்த மதுரையில் தான், சோமசுந்தரரும், மீனுட்சியும் திருவிளையாடல் நடத்தியது. விலையுயர்ந்த அரிய நகைகள் ஏராளமாக இக்கோவிலுக்கு உண்டு. இவை பெரிதும் மன்னர்கள் காணிக்கையாகச் செலுத்தியதாகும். சித்திரைத் திருவிழா மிகச் சிறப்புடன் கூடியது. சைவ வைஷ்ணவ ஒற்றுமையைக் குறிக்கும் இந்த உற்சவத்துக் காட்சிகள் கண்கொளாததாகும்.

பழனி, மதுரைக்கு 70 மைல் தூரத்திலே, முருகனது ஆறு படைவீடுகளில் ஒன்ருகஅமைந்துள்ளது. மலைமீது கோவில், அந்த மலையே ஒரு பழத்தைப் போன்ற உருவமுள்ளது. யோகர் என்ற சித்தர் அங்கு சமாதியாகியுள்ளதாகக் கூறுவர். பழநி பஞ்சாமிர்தத்துக்குப் பேர்போனது.

திருநெல்வேலிக்குச் செல்லும் வழியிலேயுள்ளது ஸ்ரீ வில்லிபுத்தூர் என்றவிஷ்ணு ஸ்தலம். ஸ்ரீ ஆண்டாள், பெரியாழ்வார் இவர்கள் இங்கிருந்து பல திருப்பாசுரங்களைப் பாடியுள்ளனர். தமிழில் மகாபாரதம் எழுதிய இடமும் இதுதான்.

காந்திமதி சமேத நெல்லையப்பர்ஆலயம் திருநெல்வேலியிலே அமைந்துள்ளது. ஆலயத்தின் முகப்பிலே ஒரே கல்லில் செதுக்கிய, நான்கு சங்கீதத் தூண்களுள்ளன. ஒரு கோலால் தட்டினல், அந்தத்தூண்களிலிருந்து பலவித இன்னிசை நாதங்கள் எழுகின்றன. இது ஓர் அதிசயம்.

கடற்கரையிலே, திருநெல்வேலிக்கு 40 மைல் தூரத்திலுள்ள **திருச்செந்தூரில்** இருந்து முருகன் அருள்செய்கின்ருன். கந்தபுராண முக்கியம்வாய்ந்த இந்த ஸ்தலத்தில், ஐப்பசி மாதம் ஸ்கந்தசஷ்டி உற்சவம் மிக விசேஷம். இலங்கையிலிருந்தும் பல பக்தர்கள் வருகின்ருர்கள். யாத்திரீகர்களுக்கு வசதியான விடுதிகள் பலவுள்ளன.

"நீலத்திரைக்கடல் ஓரத்திலே நித்தம் தவம்புரி குமரி எல்லை" என்று அமரகவி பாரதியார் பாடிய **கன்யா குமரி,** இந்தியாவின் தென்கோடி முனையாகும். முக்கடல்களின் அலைகள், கோவில் மதில்களை முத்தமிடுகின்றன. அம்பாள் கையில் மாலையுடன், தன் நாயகனுக்காகக் காத்திருக்கிருள். மனத்தை அள்ளும் அழகான திருக்காட்சி. இங்கு கடலில் உள்ள் ஒரு பெரிய கல்மீது அமர்ந்தே சுவாமி விவேகானந்தர், பாரத நாட்டின் விமோசனத்துக்காகப் பல மணி நேரம் தியானமும் தவமும் செய்தார்.

இங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள சுசீந்திரத்தில் ஓர் அழகான கோவிலுண்டு. விசுவரூபமெடுத்த ஹனுமானின் உருவம் இருக்கின்றது. இங்குள்ள ஸ்தாணுநாதரே, கன்யா குமாரியைத் திருமணம்செய்ய இருந்தாராம். கேரளத்தின் தலைநகர் **திருவனந்தபுரம்.** அனந்தபத்மநாப சுவாமியின் ஆலயம் புகழ்பெற்றது. பெரிய பெரிய குத்துவிளக்குகள், மரவேலைப்பாடுடன்கூடிய பிராகாரங்கள் கூடிய இக்கோவில், மிகப் புனிதமான முறையிலும் ஒழுங்காகவும் நடைபெறுகின்றது. ஸ்ரீ கிருஷ்ணு, சாஸ்தா, நரசிம்மம் இம் மூர்த்திகளுக்கெல்லாம் தனிக்கோவில் உண்டு.

(Vஆம் பக்கம் பார்க்க)


## நினைவில் வைத்திருங்கள்!

### இரும்புச் சாமான்களுக்கு

# செட்டிநாட்

சகலவிதமான உருக்கு, கூரை வேய்வதற்குத் தேவையான பொருள்கள், சீமெந்து, முள்ளுக் கம்பி, நீர்க்குழாய் வகைகள், கம்பி, கம்பி வலைகள் முதலியனவற்றிற்கு இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்.

எஸ்டேட் தேவைகளைப் பூர்த்திசெய்யும் அலுமினியம் லைனிங்களும், இரும்புக் கொளுக்கிகளும், கம்பி ஆணிகளும், பித்தளைப் பொருள்களும், வாள், மண்வெட்டிகளும், பிக்கான்முதலியவைகளும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா என்ஜினியரிங் வேர்க்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால் உற்பத்திசெய்யப்படும் "பியோனிக்ஸ்" மின்சார விசிறிகளின் ஏகவிநியோகஸ்தர்களும் நாங்களே.

சகலவிதமான கட்டட, நீர்ப்பாசன என்ஜினியரிங் வேலைகளையும் திருப்திகரமாகச் செய்து கொடுப்போம்.

# செட்டிநாட் கார்ப்பரேஷன் பிறைவேட் லிமிடெட்.

த. பெ. எண் 168.

116/118, கெய்சர் வீதி, :: கொழும்பு.

தந்தி: "பினன்ஸ்"

தொலைபேசி: 4276. 4277.

# ஒரு முறை பார்த்தவர்கள் என்றுமே மறக்க முடியாத மைசூர்

மைசூர் ராஜ்யத்திலே நாம் பார்க்க வேண்டிய இடங்கள் அதிகமுண்டு. புதிதாகச்சென்று பார்க்கும்யாத்திரீகர்களின்கண்ணையும் மனத்தையும் பல இடங்களும் கவர்ந்துவிடும். மைசூரின் சீதோஷ்ண நிலை மிகவும் சுகமானது. இதனுல் பல உல்லாசப் பிரயாணிகள் மட்டுமல்ல, யாத்திரீகர்கள்,கல்விமான்கள், கைத்தொழில் அதிபர்கள் எல்லாரும் ஏரா்ளமாக இங்கு வருகின்ருர்கள். ஒரு முறை வந்தவர்கள், மீண்டும் மீண்டும் வரவே ஆவல் கொள்வார்கள். அவ்வளவு வனப்புள்ளது மைசூர் ராஜ்யம்.

## கண்கவர் காட்சிகள்

புகழ்பெற்ற மன்னர்கள் பலர் அரசாண்ட இங்கு சரித்திர முக்கியம் வாய்ந்த பல நகரங்களும், யுத்த களங்களும், சிற்பச்சின்னங்களும், பெரிய சிலைகளும் அழகான துறைமுகங்களும், மனத்தைக் கவரும் உய்யானவனங்களும்தேக சுகாதாரத்தை வளர்க்கும் மலைவாசஸ்தலங்களும் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக்கொண்டு, என்னைப் பார், என்னைப் பார், என்று கேட்டு நம்மை, அழைக்கின்றன. உல்லாசமாகவும் பயனுள்ள முறையாகவும் பொழுது போக்க இதை விடச் சிறந்த இடம் கிடைப்பதரிது.

விருந்தோம்பலில் மைசூர் புகழ் பெற்றது. எல்லா வசதிகளுமுள்ள நவீன ஓட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள்,பிரயாணி பங்களாக்கள், வாடி வீடுகள் முதலியன நம் ஒவ்வொருவரது சக்திக்கும் உகந்த முறையாய் இருக்கின்றன. இனி இந்த ராஜ்யத்திலே நாம் பார்க்க வேண்டிய முக்கிய இடங்களைக் கவனிப்போம்.

## பங்களூர்

பங்களூர்தான் இந்த ராஜ்யத்தின் முக்கியமான நகரம். சுமார் பத்து லட்சம் மக்கள் இங்கு வசிக்கிருர்கள். இதன் பரப்பு சுமார் 26 சதுர மைல்களுக்கு மேலாகும். அரசாங்க தலைமைக் காரியாலயங்களும் இங்குதான் உள்ளன. செம்பிகௌடா என்ற பள்ளிகார் சிற்றரசர்தான் இந்த நகரை 17-வது நூற்ருண்டில் அமைத்தார். சீதோஷ்ண நிலை மிக சுகமாக இருப்பதாலும், பூகோள இயற்கை அமைப்புகள் விசேஷ வசதியுடன் இருப்பதாலும் பங்களூர் ஒருமுக்கியமான வியாபார ஸ்தலமாகியுள்ளது.

நகரிலே பழைய கோட்டை, திப்பு சுல்தானின் அரண்மனை, லால்பாக் பூங்கா, கூப்போன் பூங்கா, பங்களூரின் விண்ஸர் பாலஸ் என்று புகழ்பெற்ற மகாராஜாவின் அரண்மனை, பழைய புதிய அரசாங்கக் காரியாலயங்கள், விதானஸௌடா, வெள்ளி விழா தொழில்நுட்ப ஸ்தாபனம்,கைத்தொழில்பயிற்சிக்கூடம்,இஞ்சினிரிங் கல்லூரி, சென்டரல் கல்லூரி,சேர் கே.பி. புட்டனசெட்டி நகரமண்டபம் அமெரிக்க தகவல் இலாகாவின் புத்தகசாலை, மியூஸியம் கண்காட்சிச்சாலை,மேயோ மண்டபம், விமான நிலையம், இந்திய விஞ்ஞான நிலையம், ராமன் ஆராய்ச்சிக்கூடம், அகில இந்திய மனச்சுகாதார ஸ்தாபனம் இவையெல்லாம் பார்க்கவேண்டியவை. பங்களூரைச் சுற்றியும் சில இடங்களை யாத்திரீகர்கள் அவசியம் பார்க்கவேண்டும்.

## நந்தி குன்றம்

நந்தி குன்றத்துக்கு மக்கள் ஏராளமாக, சுகவாசத்துக்காகச் செல்லுகிருர்கள். பங்களூரிலிருந்து அது 38 மைல்தான். ரயிலிலோ மோட்டாரிலோ செல்லலாம். 4850 அடி உயரமுள்ள அந்த மலையின் உச்சிக்குச்செல்ல ஒரு வசதியான மோட்டார் வீதியுள்ளது. மலைமீது எல்லா வசதிகளுடனும்கூடியபங்களாக்கள் உள்ளன. மேலான சாப்பாடு வசதியுமுண்டு. மலைமீது உள்ள கற்கோட்டை, சரித்திர முக்கியத்வம் வாய்ந்தது.

பங்களூருக்கு 60 மைல் தூரத்தில்தான் கோலார் தங்க வயல்களுள்ளன. உலகிலேயே மிக ஆழமான சுரங்கங்கள் இவை. இச்சுரங்கங்கள் சமீபத்தில் தேச உடைமை ஆக்கப்பட்டன. இதை அரசாங்கமே நேர்முகமாக நிர்வகித்து வருகின்றது.

## பூங்கா நகரம்

மைசூர் நகரை "பூங்கா நகரம்" என்று அழைப்பது மிகவும் பொருத்தம். இந்தியாவிலேயே இதை மிகச் சுத்தமான நகரமென்றும் கூறலாம். கடல்மட்டத்துக்குமேல் 2525 அடி உயரத்திலுள்ள இந்நகரம், பெங்களூருக்குத் தென்மேற்கே 86 மைல் தூரத்திலுள்ளது. விசாலமான வீதிகளும், மனத்தை வசீகரிக்கும் பூங்காக்களும், நந்தவனங்களும், அரண்மனைகளும், மாடமாளிகைகளும் கூடகோபுரங்களும் மைசூர் நகரை அழகுபடுத்தி யாத்திரீகர் யாரும் அதை மறக்கமுடியாதபடி செய்கின்றன.


புரட்டாதி, ஐப்பசி மாதங்களிலே தசரா என்ற நவராத்திரி உற்சவகாலத்தில், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் ஏராளமான கூட்டம், இங்கு பல காட்சிகளைக் காணக்கூடுகின்றது.

ஒன்பதுநாள் உற்சவம் முடிந்து பத்தாம் நாள் விஜய தசமியன்று பெரிய ஊர்வலம் நடைபெறும். அந்த ஊர்வலக் காட்சிகள் கண்கொளாக் காட்சிகளாகும்.

## அழகிய மாளிகை

அரண்மனை மிகக் கம்பீரமான அழகிய மாளிகையாகும். தங்கத் தூண்களும், உயர்ந்த வாசல்களும், புராணச் சித்திரங்களும், தர்பார் மண்டபமும், கோபுரங்களும் யாரையும் வசீகரித்துத் திகைக்கவும் செய்யும். ஜகன்மோகன் அரண்மனையில் கலைக்கூடம் வைக்கப்பட்டுள்ளது. ரவிவர்மாவின் அழகிய சித்திரங்கள் பெரிய பெரிய அளவில், சுவர்களை அலங்கரிக்கின்றன. லலித மகால் என்ற மற்ருேர் மாளிகையும் பார்க்கத்தக்கது. மிருகக் காட்சிச் சாலையும் பார்க்க வேண்டிய முக்கிய இடமாகும்.

மைசூர் நகரிலிருந்து 10 மைல் தூரத்திலே ஸ்ரீரங்கபட்டணம் என்ற ஒரு 'தீவு நகரம்" உள்ளது. சரித்திர முக்கியம்வாய்ந்த நான்கு மைசூர் யுத்தங்களின் சின்னங்களையும், அதிற் பங்குபற்றிய யுத்தவீரர்களின் சின்னங்களையும் அங்கு காணலாம். ஸ்ரீரங்கநாத சுவாமியின் அழகிய கோவிலும், திப்பு சுல்தானின் கோடைகால அரண்மனையான தாரியா தௌலத் பாக்கும் திப்பு சுல்தான், அவரது பெற்ருேர்கள் இவர்களது சமாதிகள் அடங்கிய கும்பாஸும், யாத்திரீகர்கள் இங்கு அவசியம் பார்க்கவேண்டியவை.



மைசூர் ராஜ்யத்திலுள்ள ஜெயினர் கோவிலிலுள்ள சிரவண பெருகொலா என்ற கம்பீரமான சிலா விக்கிரகம். கோமதீஸ்வரர் வடிவமென்றும் இதைக்கூறுவர்.

## பிருந்தாவனம்

இந்தியாவிலேயே மிகப் பெரிதான அணைகளில் ஒன்ருன கிருஷ்ண சாகர் என்ற அணை, மைசூருக்கு வட மேற்கில் 10 மைல் தூரத்திலுள்ளது. இது ஒன்றே முக்கால் மைல் நீளமுள்ளது. 130 அடி உயரம். 50 சதுரமைல் பரப்புக்குத் தண்ணீர் பரவி நிற்கின்றது. அந்த அணையை அடுத்து மறுபக்கத்தில் தான் புகழ் பெற்ற பிருந்தாவனப் பூங்கா உள்ளது. அங்குள்ள மின்சார தீபங்களை ஏற்றிவிட்டால், அது ஏதோ இந்திரலோகம் போலக் காட்சி தரும். அங்கு உல்லாசப் பிரயாணிகள் வசதியாகத் தங்கியிருந்து, இந்தக் காட்சிகளை எல்லாம் கண்டு களிக்க நல்லதோர் ஓட்டலுமிருக்கிறது.

சோமநாதபுரம் என்னும் ஸ்தலம் மைசூருக்கு 33 மைல் தூரத்திலுள்ளது. சிற்ப அழகுக்கு இக்கோயில் பேர்போனது. சிற்பக்கலா ரஸிகர்கள் பலர் இங்கு வந்து இந்த அழகை விருந்தெனப் பருகி வியந்து செல்வர்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலே 3900 அடி உயரத்திலே, இயற்கை வனப்புக்களிடையே மர்க்காரா நகரம் அமைந்துள்ளது. மைசூருக்கு 75 மைல் தூரத்திலும், பங்களூருக்கு 84 மைல் தூரத்திலுமுள்ள மர்க்காராவில் யாத்திரீகர்கள் கோட்டை, ஓம்காரேசுவரர் ஆலயம், ராஜாக்களின் சமாதியான 'கட்டிகி', ராஜாவின் அரண்மனை இவைகளைப் பார்க்க வேண்டும்.

சிவ சமுத்திரம் என்ற ஜல சக்தி மின்சார நிலையம் மைசூரிலிருந்து 50 மைல் தூரத்திலுள்ளது. இங்குதான் புகழ் பெற்ற காவிரி ஆறு இரண்டாகப் பிரிந்து, இரண்டும் 200 அடி உயரத்திலிருந்து கீழ்ப் பாய்கின்றன. பக்கத்திலுள்ள வனத்தின் இயற்கைக் காட்சிகளை உல்லாச யாத்திரீகர்கள் கண்டு களிப்பதை என்றுமே அவர்களால் மறக்க முடியாது.

## கலைச்செல்வம் நிறைந்துள்ள பொன்னுடான தென்னுடு

(IVஆம் பக்கத் தொடர்ச்சி)

பள்ளி கொண்டபடியே ஸ்ரீ பத்மநாப சுவாமி, சிவலிங்கத்துக்குச் சதா பூசை செய்து கொண்டிருக்கின்ருர். மகாவிஷ்ணுவின் 12 முக்கிய ஸ்தலங்களில் இது ஒன்று.

திருச்சூரிலிருந்து 20 மைல் தூரத்தில் **குருவாயூர் அப்பனுன** ஸ்ரீ கிருஷ்ணரின் ஆலயம் உள்ளது. மலையாளத்திலே கோவிற் பூசையெல்லாம் மிகப் பயபக்தியுடனும், ஒழுங்காகவும் நடப்பதை இன்றும் காணலாம். துவாரகை வெள்ளத்தில் மூழ்குமுன், அங்கிருந்து ஸ்ரீ கிருஷ்ண விக்கிரகத்தைப் பிரகஸ்பதியும்(குரு), வாயுவும் இட்டுக்கொண்டுவந்ததாக ஐதீகம். நான்கு கைகளுடன்கூடிய குருவாயூரப்பனின் திருவுருவம் அருள்சுரக்கின்றது.

இந்தியாவிலே இந்துசமயம் அழியாமல் காத்த ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அவதரித்த **காலடி** எனும் திருத்தலம், திருச்சூருக்குப் பக்கத்தில் உள்ளது. ஆல்வாய் ஆற்ருேரம் ஸ்ரீ சங்கரருக்குக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. கொச்சி—ஷோரனூர் பாதையிலுள்ள அங்கமாமலை ஸ்டேஷனில் இறங்கிக் காலடிக்குச் செல்லவேண்டும்.

### மைசூர்

மைசூர் ராஜ்யத்தின் தலைநகரான மைசூர், தென்னிந்தியாவின் நந்தவனம் என்பர். சுமார் நாலாயிரம் அடி உயரத்தில் உள்ள குன்றின்மீது சாமுண்டேச்வரி ஆலயமுள்ளது. இது மைசூர் அரச குடும்பத்தார் வணங்கும் கோவில். நவராத்திரி முதலிய உற்சவகாலங்களில் மைசூரில் மின்சார தீபாலங்காரங்கள் செய்கையில் அது ஒரு தேவலோகம்போற் காட்சியளிக்கும். மைசூருக்குப் பக்கத்திலுள்ள, காவிரி அணையும், பிருந்தாவனமும் அவசியம் பார்க்க வேண்டியவை.

ஸ்ரீராமானுஜர் எனும் வைணவப் பெரியார் இருந்த மேலக்கோட்டை எனும் ஸ்தலமும் இந்த ராஜ்யத்தில்தான் உள்ளது. ஸ்ரீ நாராயணர்கோவிலில் மிக விலைமதிப்புள்ள வைர கிரீடமொன்றுண்டு. ஸ்ரீ கிருஷ்ணரே இந்தக் கிரீடத்தை அணிந்ததாகக் கூறுவர். இது மைசூர் நிதிச்சாலையில் இருந்து வருகிறது. வருஷம் ஒருமுறை உற்சவத்தின்போது இந்த வைர கிரீடத்துடன் சுவாமி பவனிவருவார்.

அகோபிலம் என்பது நந்தியாவுக்கு 30 மைல் தூரத்தில் உள்ளது. மலைமீது சிங்கவேல் குன்றம் என்ற கோவிலுண்டு. உக்கிர நரஸிம்மர் இங்கு காட்சி தருகிருர். மலை அடிவாரத்தில் லக்ஷ்மி நரசிம்மர் கோவில். இங்குதான் ஸ்ரீ மகாவிஷ்ணு, தூணில் இருந்து வெளிவந்து இரண்ய கசிபு என்ற அரக்கனைக்கொன்று பிரகலாதனை ஆட்கொண்டதாகக் கூறுவர். இது சுயம்புஸ்தலம்.

**ஸ்ரீசைலம்** என்பது புகழ் பெற்ற சிவஸ்தலம். மல்லிகார்ஜுன சுவாமி இங்கு கோவில் கொண்டுள்ளார். ஆதிசங்கரர் அருளிய சிவானந்த லகரியில் குறிப்பிட்டுள்ள 12 புனித லிங்கங்களில் இது ஒன்று. மகா சிவராத்திரி காலத்தில் பல்லாயிரக் கணக்கான அடியார்கள் இங்கு தரிசனத்துக்கு வருகிருர்கள்.

**பத்திராசலம்** என்ற புனித ஸ்தலம், ராஜமகேந்திரபுரத்திலிருந்து பத்து மைல் தூரத்திலுள்ளது. தோணியிலும், பஸ்ஸிலும் செல்லவேண்டும். பக்த ராமதாஸினுல் ஸ்ரீ ராமசந்திர மூர்த்திக்குக் கட்டப்பட்ட கோவில் இங்குள்ளது. ஸ்ரீ ராமநவமி உற்சவ காலத்தில் ஏராளமான மக்கள் தரிசனத்துக்காக இங்கு வருகிருர்கள்.

**சிம்மாசலம்** என்ற ஸ்தலத்தில் ஸ்ரீ நரசிம்ம மூர்த்திக்கு ஒரு கோவில் உண்டு. இது வால்டேர் ஸ்டேஷனுக்குப் பக்கத்திலுள்ளது. இங்குதான் பிரகலாதன் கடலில் எறியப்பட்டதாயும், அவன்மீது ஒரு குன்றத்தை ஏற்றி வைத்த போது, நரசிம்மர், அக்குன்றினை அசைத்துப் பிரகலாதனைக் காத்ததாகவும் கூறுவர். நரசிம்ம மூர்த்தி மிக உக்கிரமானதால், மூர்த்திக்கும், கர்ப்பக்கிரகமெல்லாமும் சந்தனக் காப்புச் செய்யப்படுகிறது. புஷ்பங்கள் நிறைக்கப்படுகின்றன. வருஷத்தில் ஒருநாள் அவை அகற்றப்படுகின்றன. நரசிம்மனின் உக்ரகம் தணியாததால், சிவபெருமான் சரபமாக வந்து அதைப் பிளந்ததாகக் கூறுவர். இந்தச் சிம்மாசலக் கோவில் பிரகலாதாழ்வாராற் கட்டப்பட்டதாம். 11 வது நூற்ருண்டில் இது புதுப்பிக்கப் பட்டிருக்கிறது.

# "பூலோகசுவர்க்க"மாக விளங்கும் காஷ்மீரம்

ஆர். பி. கோஸ்லா

காஷ்மீரத்தை "பூலோக சுவர்க்கம்" என்று பலர் பாராட்டியிருக்கின்றனர். ஐப்பசி, கார்த்திகை மாதங்களில்இது தனிச்சோபையுடன் விளங்குகிறது. டில்லியிலிருந்து காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகருக்கு 267 மைல்தூரம். மிகத்திறமையாக அமைக்கப்பட்ட சாலை உண்டு. டில்லிக்கும் ஸ்ரீநகருக்குமிடையே கிரமமான ஒரு விமானசேவையும் நடைபெறுகிறது. இக்கட்டுரையில் காஷ்மீரத்திற்கு நேர்முகமாகச் சென்று பார்வையிட்ட ஓர் உல்லாசப்பிரயாணி அதன் மோகன எழிலைப் படம்பிடித்துக்காட்டுவது போல் வாசகர்களுக்கு உரைவிருந்தளிக்கிறார்.

அழகான காஷ்மீரத்தின் குக்கிராமங்களிலொன்று தான் பனிகால். இங்கிருந்து பனிகால்மலைப்பாதை வரை வளைந்தும் நெளிந்தும் செல்கிறது அந்த நெடுஞ்சாலை. இந்த நெடுஞ்சாலை கருமையான ஒரு பயங்கரப் பிராணிபோல் வளைந்து துவண்டு மலை எல்லை வரைக்கும் காட்சியளிக்கிறது. சடுதியாக உங்கள் கண்களை ஏமாற்றுகிறது. எங்கே அந்தப் பாதை? ஆம் உங்கள் மனம் அங்கலாய்க்கிறது. தொலைவிலே தெரிகிற அந்தக் குடைந்த பாதையின் அகன்ற உதடுகள் அங்கேதான் சரணடைந்திருக்குமோ? ஆம் நீங்கள் நினைத்தது வீண் போகவில்லை. அங்கேதான் மறைந்து விட்டது. இயற்கையன்னையின் மாயாஜாலம் தானென்ன!

## மலைப்பாதை

குடைந்த பாதையின் குளிர்ந்த இடத்திற்கு நீங்கள் வந்து விட்டீர்கள். எங்கே நீங்கள் சற்று நேரம் தங்க நேர்ந்தால் அந்த மலைப்பாதையின் மோகன நெளிவுகளையும் அங்க அசைவுகளையும் காணத் தவற மாட்டீர்கள். மலைப்பாதை சுலபமாக நழுவிக் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. மலைமங்கை களிப்புடன் இக் காட்சியைப் பார்த்து பெருமிதம் கொள்வாள். கீழ்நோக்கிச் செல்லும் இப்பாதை வழியாகச் சென்றால் நீங்கள் ஓர் அழகிய கிராமத்தை யடைவீர்கள். இப்பொழுது தான் உங்கள் பிரயாண ஆராய்ச்சி பூர்த்தியடைகிறது. அகன்று திரண்ட பாறைகளை தன்மேல் போர்த்துக் கொண்டிருக்கும் மலைச்சாரல்களைக் கடந்து சென்றபின், நீங்கள் முற்றிலும் வேறுபாடுள்ள நாட்டில் கால் வைப்பீர்கள். குடைந்த பாதையின் கூப்பிய கரங்கள் உங்களை வரவேற்று விட்டன.

சில விநாடிகளுக்கு இருள் மயமாகத் தென்பட்டாலும், பின் ஒளிமயமாகி விடுகிறது. கூப்பியகரங்கள் மெல்ல விலகி விடுகின்றன. இப்பொழுது இயற்கை அன்னை பொன்முறுவல் பூக்கிறாள். எங்கும் பச்சைப் பசேலென்ற காட்சிகள். இப்பொழுது நீங்கள் கீழ்நோக்கிச் சென்றால் இன்னும் பல அதிசயங்கள் உங்களைக்காத்து நிற்கும்.

இந்தநெடுஞ்சாலை கீழ்நோக்கி விரைந்து செல்கின்றது. நீங்கள் இச்சாலையோடு கீழிறங்கும் போது மலைச்சாரலின் பல வர்ணக் காட்சிகள் உங்கள் கண்களிலே பதிந்து விடுகின்றன. மலையிருக்குமிடமெல்லாம் இயற்கையன்னை களிநடம் புரியும் இதே காட்சி நீங்கள் பார்க்குமிடத்திலிருந்து பல மைல் தூரம் வரை. மலையின் பள்ளத்தாக்குகள் நீண்டு பரந்து கிடக்கும் மனோரம்மியமான காட்சி. சடுதியாக ஒரு நீர் ஊற்று! நீங்கள் ஒரு கணம் பிரமித்தே போய்விடுவீர்கள். இது தான் ஜீலம் நதியின் பிறப்பிடமான "வெரிநாக்". ஜீலம் நதிபிறக்கும் பகுதியை முகலாய மன்னனை (ஜெகாங்கீர்) ஓர் அழகான நந்தவனமாக மாற்றினான். தடாகத்தைச் சுற்றியுள்ள மதில்களை ஓர் எட்டுமூலை சிற்ப வேலைப்பாடுகளுடன் மிகவும் அழகுற அமைப்பித்தான். இதன் ஆழம் சுமார் அறுபதடிகள் இருக்கும். இந்த ஆழமான ஏரியிலிருந்து தண்ணீர் கீழ்நோக்கி ஓடுகிறது. இதனுடைய பிரயாணத்தில் நீருற்றுக்களையும், புற்தரைகளையும் வண்ணமலர் களையும் ஊடுருவிச் சென்று சடுதியாகப்பள்ளத்தாக்கில் குதித்து விடுகிறது. இதன் பின் இந்தக் குறுநதியின் வேகம் குறைந்து விடுகிறது. அத்துடன் அதனுடையஅகலமும் அதிகரித்துவிடுகிறது.

பள்ளத்தாக்கினூடேசெல்லும் பாதையும் பரந்து தள்ளாடிச் செல்லும் இந்தநதியும் இரண்டொரு முறைதான் கூடிக் குலவமுடியும். இந்தப்பாதையின் இரு மருங்கிலுமுள்ள "பொப்லார்" மரங்கள் இந்தப் பாதையின் மகிமையை உலகுக்கெடுத்தியம்பிவிட்டன. இந்தப்பாதை காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகர் வரைசெல்கிறது. "பொப்லார்" மரங்களின் அணிவகுப்பினூடே செக்கச் செவேலென்று செந்நெற் புலங்கள் காட்சி தருகின்றன.

இன்னும் சற்றுக் கூர்ந்து கவனிப்பீர்களாயின் மலைச்சரிவுகளின் மகோன்னத எழில் உங்கள் கண்களுக்கு ஓர் பரந்த காட்சி ஓவியமாகத் தென்படும். படிப்படியாக பள்ளத்தாக்கு பரந்து கொடுக்கும். அடிமட்டம் போல் நேராகக் காட்சி தந்த பள்ளத்தாக்குகள் சிறிது வளைய ஆரம்பித்து விடுகின்றன. இதோ! வந்து விட்டீர்கள் காஷ்மீரத்தின் தலைநகரான ஸ்ரீநகருக்கு.

இப்பொழுது நீங்கள் அழகான காஷ்மீர் பள்ளத்தாக்கின் மத்தியில் இருக்கின்றீர்கள். ஸ்ரீநகர், காஷ்மீர் பள்ளத்தாக்கின் சகல விஷயங்களும் கூடி சங்கமமாகுமிடம். பள்ளத்தாக்கில் காணப்படும் ஒரே பட்டினம் இதுவேதான். குல்மார்க்கும், பகல்காமும், மிகச் சிறிய பட்டினங்கள். ஸ்ரீநகர் இயற்கையெழில் பொங்கும் வனப்புமிக்க நகரம். ஜீலம் நதி இதன் நாலா பக்கங்களிலும் சுற்றி வளைந்து சலசல நாதமெழுப்பியவண்ண மிருக்கிறது. ஜீலம் நதியின் கரையோரங்களில் காட்சிதரும் மனைவள்ளங்கள் பார்ப்போர் உள்ளத்தைப் பரவசமூட்டும். அணைக்கட்டின் அருகாமையில் பள்ளத்தாக்கின் கடைமனைகளைக் காண்பீர்கள். இங்கே நவநாகரிகமான பொருள்களை யாவரும் பெற்றுக் கொள்ளலாம். இங்கேயிருக்கும் கடைத்தெருக்கள் சுத்தமாகவும் பிரகாசமாகவும் நன்று பராமரிக்கப் பட்டிருக்கும்.

உல்லாசப் பிரயாணிகள் இங்கு வரும் காலங்களில் கடைத் தெருக்களெல்லாம் நிறைந்து பொலிந்து காணப்படும். கடையின் சொந்தக்காரர்கள் கூரையின் மேலிருந்து சூரிய வெப்பத்தை அனுபவித்துக்கொண்டிருக்கும் காட்சி தனைப்பார்க்கலாம்.

## சங்கராச்சாரி மலை

இங்குள்ள ஆறுகளின் கீழ்ப்புறத்திலிருந்து தோன்றும் கால்வாய்களில் ஒன்றில் படகு மேலேறி உல்லாச யாத்திரை செய்வீர்களானால், நீங்கள் நிழல் வாடையின் நித்திய சுகந்தம் ததும்பி அமைதி நிலவும் அழகு மலரோடையான சேனார் பாக்கையடைவீர்கள். மேலே பார்த்தீர்களாயின், பரமசிவன் கோயில்கொண்டுள்ள ஓராயிரமடி உயரமுள்ள **சங்கராச்சாரி மலையைக்** காண்பீர்கள். இந்த மலையை ஏறிப்பார்க்கத் தயங்காதீர்கள். ஏறிப் பார்த்தால் அதற்குத் தகுந்த பலனையடைவீர்கள். இம்மலையின் உச்சியிலிருந்து, கீழே நோக்கினால் வெரிநாக நதியும் ஜீலம் நதியும் மலைப்பாம்புகள் போல் வளைந்து வளைந்து செல்லும் அதி அற்புதக் காட்சியைப் பார்க்கலாம். சம வெளியினூடே சில நேரம் ஊர்ந்துவிட்டுச் சடுதியாக இந்த நதிகள் மறையும் காட்சியையும் காண்பீர்கள். உங்களுக்கு இன்னும் கீழே, ஒரு புறத்தில் நகரக் காட்சிகளையும் மறுபுறத்தில் டால் பொய்கையும் நகீன் பொய்கையும், மனை வள்ளங்களையும் அதன் சிகரங்களையும் பார்ப்பீர்கள். இந்தப் பொய்கைகளில் அன்னம் போல் நீந்திச் செல்லும் உல்லாசப்படகுகளில் ஏறி நீங்கள் ஷாலிமார் நந்தவனத்துக்கும் நிஷாத் பூம்பொழில்களுக்கும் செல்லலாம்.

## பூம்பொழில்

இந்த நந்தவனங்களையும் பூம்பொழில்களையும் முகலாய மன்னனை ஜெகாங்கீரே அமைப்பித்தான். இந்த நந்தவனங்களினமைப்பு "வெரிநாக்" நந்தவனத்தைப்போலவேயிருக்கும். இந்த நந்தவனங்களின் முன் வாயிலில் ஓர் அழகு நீரோடையைக் காணலாம். இந்த நீரோடையிலிருந்து கால்வாய் வழியாக நந்தவனத்தின் நாலாபக்கங்களிலும் நீர் செறிந்து செல்லும். இந்த நீரோட்டம் டால் பொய்கையை வந்தடைய முன் சிலவிடங்களில் நீர் வீழ்ச்சி அருவி போலும், சிலவிடங்களில் நீர் மங்கை நடனமாடுவது போலும் காட்சி தரும். ஞாயிற்றுக்கிழமைகளில் இந்த இடத்திற்கு ஏராளமானோர் உல்லாசப்பொழுது போக்குக்காக வந்துகுவிந்தவண்ணமிருப்பார்கள். சிறுபையன்கள் இங்கு கூடி, ஆனந்தப் பொய்கையில் புனலாடும் காட்சி பார்ப்போர் மனத்தை ஈர்த்துக்கொண்டே செல்லும்.

இந்த நந்தவனங்களின் அண்மையில் "சாஷ்மா சாகி" என்று ஓர் சிறு நீரோடையிருக்கிறது. இந்த ஓடையின் நீர் அபூர்வ சக்தி படைத்ததாகக் காணப்படுகிறது. பல நோய்களைக் குணப்படுத்தும் சிறந்த தன்மை மிக்கது இப் புனித நீர். இந்த நீரோடையைச் சுற்றி ஒரு சிறு மலர் வனம் காட்சி தருகிறது. இந்த மலர் வனத்தை யாவரும்வெளியிலிருந்து பாராமல் செய்வதற்கு பெரிய மதில் சுவர்கள் எழுப்பியிருக்கப்பட்டுள்ளன. இந்த மலர் வனத்தின் அடியில் ஓர் முகலாய பாணியில் அமைக்கப்பட்டுள்ள மொட்டை மாடியிருக்கிறது. இந்த மொட்டை மாடி டால் பொய்கை மீது உயர்ந்து கம்பீரமான தோற்றமளிக்கிறது. இந்த டால் மலர்ப் பொய்கையின் அழகிற்கு அழகு செய்கிறது இயற்கை மங்கையின் முல்லைநகை.

ஸ்ரீநகர் ஓர் அமைதி நிலவும் பட்டினம். எங்கு பார்த்தாலும் எங்கு சென்றாலும் ஒரு குளுமை, புல்லரிப்பு, மகிழ்ச்சி, இத்தகைய உணர்ச்சிகளே ஏற்படும். ஸ்ரீநகரின் சௌந்தரியத்தை வேறு எந்த நாட்டாலும் தோற்கடிக்க முடியாத அத்தனை எழில்!

ஸ்ரீநகரிலிருந்து இப்பொழுது நாங்கள் விடைபெற்றுக்கொள்வோம். நாம் இப்பொழுது குல்மார்க் என்ற சிறிய பட்டணத்தைக் கவனிப்போம். மோட்டார் வண்டிகள் போகக்கூடிய பாதை டான்மார்க்கில் முடிவடைகிறது. இங்கிருந்து நீங்கள் நடந்தோ அல்லது குதிரைமீதேறியோதான் செல்லல் வேண்டும். இது ஒரு செங்குத்தான பள்ளத்தாக்கு. இதன் உயரம் இரண்டாயிரம் அடிகள் வரையிருக்கும். இதன் உச்சியிலே ஒரு பச்சை வர்ணப்பாவாடையை இயற்கையணங்கு அணிந்திருக்கிறாள். இங்கே அடர்த்தியான புல் வகைகள் மெல்லிய தென்றலின் தாக்குதலால் அங்குமிங்கும் தள்ளாடும் காட்சி அருமையான காட்சி. இந்தப் புல்தரை கில்லன்மார்க் (Khilanmarg) என்னும் இரண்டாயிரமடி உயரமுள்ள ஓர் சிறு குன்று வரை தொடர்ந்து காணப்படும்.

கில்லன் மார்க்கிலிருந்து சிறு தூரத்திற்கப்பால் கரடு முரடான ஒரு மலையிருக்கிறது. இதனை அப்பார்வட் என்று அழைப்பார்கள். இதன் உயரம் கடல் மட்டத்திலிருந்து சுமார் 14,500 அடிகளிருக்கும். இந்த மலையில் ஏறிப்பார்க்க உங்கள் மனம் துடியாய்த் துடிக்கும் ஆனால் என்ன துர் அதிர்ஷ்டம்! உங்களால் முடியவே முடியாது.

குல்மார்க் பட்டினத்தின் நேரெதிராகக் காட்சியளிக்கிறது பகல்காம். இதுவுமோர் சிறிய பட்டினம். இங்குள்ள மக்கள், கூடாரங்களிலேதான் வாழ்கிறார்கள். இங்கிருந்து தான் "அமர்நாத்" என்ற பாடல் பெற்ற ஸ்தலத்திற்குச் செல்லும் யாத்திரீகர்கள் புறப்படுவார்கள். இங்கு பனிக்கட்டிகள் தண்ணீரின் மேல் பவனி வரும் காட்சி அற்புதம்!

காஷ்மீர் பள்ளத்தாக்கின் மகோன்னத எழிலை நின்று பார்த்தாலும் மனம் பூர்த்தியடைவதில்லை. இந்த "பூலோகத்திலுள்ளசுவர்க்கததின்" சுந்தர லாவண்யத்தைப் பார்த்துவிட்டு உங்கள் சூழ்நிலைக்கு அமைதியாகத் திரும்பி இன்புறுங்கள்.



காஷ்மீரிலே: மலைகளால் சூழப்பட்டு இயற்கை அழகுடன் கூடிய நகீன் ஏரியிலே, படகு வீடுகள் நம்மை உல்லாசமாக ஏற்றிச் செல்லக் காத்திருக்கின்றன.

# கலைப் பொக்கிஷங்களுடன் திகழும் மாமல்லபுரம்

**"கலங்க ளியங்கும் மல்லைக் கடல் மல்லை......"**

என்று வைணவத் தமிழ்ப் பெரியார் திருமங்கையாழ்வாரால் புகழ்ந்து பாடப்பட்ட மாமல்லபுரம், இன்று கடற்கரையோரத்தே அமைதி தவழும் சிறு கிராமமாகக் கலைப் பொக்கிஷங்களுடன் திகழ்கிறது.

சென்னைக்குத் தென் கிழக்காகச் சுமார் ஐம்பத்திரண்டு மைல் தூரத்தில்இந்தக்கிராமம் இருக்கின்றது.

இன்று சுமார் நூறு வீடுகளுடன் விளங்கும் இக்கிராமம் ஒரு காலத்தே சிறந்த துறைமுகப்பட்டினமாயிருந்த தென்பது நாம் பெருமைப்படக் கூடிய விஷயங்களுள் ஒன்று. அந்நிய நாடுகளுடன் வியாபாரம் செய்யும் கலங்கள் சதா வந்து சென்று கொண்டிருக்கும் துறைமுகமாய் மட்டும் விளங்காமல் மாமல்லபுரம் கலைக் கூடமாகவும், சிற்பக் களஞ்சியமாகவும் திகழ்ந்தது.

## கலைகள் வளர்ந்தன

தமிழகத்தைச் சிறப்பாக ஆண்ட மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களுடன் சேர்த்துப் புகழப்பட வேண்டிய அளவு திறம்பட, சுமார் கி. பி. 300 முதல் கி. பி. 800 ஆண்டுகள் வரை ஆட்சிபுரிந்தனர் பல்லவர்கள். அவர்களது ஆட்சியிலே அமைதி நிலவியது; தமிழும் வடமொழியும் வளர்ந்தன; நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றித் தீந்தமிழ்ப் பாடல்கள் பல இயற்றினர்கள்; சைவமும்—வைணவமும் ஒற்றுமையுடன் வளர்ந்தன; இசை, நாடகம், ஓவியம், சிற்பம் முதலிய கலைகள் செழித்தோங்கி வளர்ந்தன.

பல்லவர்களைப் பற்றி அறிஞர்கள் பலதரப்பட்ட ஆராய்ச்சிகளைச் செய்திருக்கிருர்கள். அவர்களை அந்நியரென்றும், வடதிசையினின்றும் தென்னுட்டிற்கு வந்து குடியேறியவர்களென்றும், ஒரு சாரார் கூறுகின்றனர். "பல்லவர்கள் கடல் தந்த குழந்தை; சோழ அரசனுக்கும் அயல் தேசத்துக் கன்னிகை ஒருத்திக்கும் பிறந்து, தொண்டைக் கொடியால் சுற்றி அனுப்பப்பட்ட தொண்டைமான் இளந்திரையனின் சந்ததியர்கள் பல்லவர்கள்" என மற்றொரு சாரார் சொல்லுகின்றனர். அது எப்படியாயினும் ஆகுக. தமிழகத்திலேயிருந்து, தமிழர்களோடு ஒன்று கலந்து வாழ்ந்து, தமிழருக்கு நன்மையை உண்டாக்கும் எவரும் தமிழ் இனத்தவர்தான்.

## மகேந்திரவர்மன்

இன்று காணும் செங்கல்பட்டு, தென்னுர்க்காடு, வடவார்க்காடு ஜில்லாக்களும், மற்றும் அதை யொட்டிய சில பிரதேசங்களும் சேர்ந்து தொண்டைமண்டல மென்ற பெயருடையதா யிருந்தது. தொண்டை நன்னுட்டையும், காவிரி பாயும் சோழ நாட்டின் ஒரு பகுதியையும், கிருஷ்ண நதிக்கரை வரையிலுள்ள பிரதேசத்தையும் பல்லவர்கள் ஆண்டு வந்தனர், அவர்களில் முதல் அரசர் ஸிம்ஹவிஷ்ணு ஆவார். இவருக்குப் பிறகு தான் பிரசித்தி பெற்ற அரசர் மகேந்திரவர்மன் பட்டத்துக்கு வந்தார். அவரது ஆட்சிக் காலமாகிய முப்பது ஆண்டுகளில் நாட்டில் கலை வளர்ந்தது; ஒற்றுமை உயர்ந்தது; ஆட்சி முறையிலே அசோகருக்கும்; அக்பருக்கும், ஹர்ஷவர்த்தனருக்கும் சிறிதும் குறையாத திறமை படைத்தவர் மகேந்திரர்.

பல இடங்களிலுள்ள கல்வெட்டுகளிலிருந்து மகேந்திரவர்மனுக்குக் குணபரன், சத்துருமல்லன், விசித்திரசித்தன், பக்காப்பிடுகு, சேத்தகாரி, சித்திரக்காரப்புலி, மத்தவிலாஸன் என்று பல பிருதுப் பெயர்கள் இருந்ததாக அறியவருகிறது. சித்திரக்காரப்புலி என்ற பெயருடைய பட்டப் பெயர், இவருக்கு ஓவியத்திலுள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. 'மத்த விலாஸம்' என்று அக்கால காபாலிகர்களின் நிலையைச் சித்திரிக்கும் நாடகம் ஒன்றும் அவர் இயற்றினர் என்று தெரியவருகிறது. இவரது காலத்திலேதான் சித்தன்ன வாசல் குகைமண்டபத்திலுள்ள வர்ண ஓவியங்கள் தீட்டப்பட்டன. அக் குகை மண்டபத்திலே மகேந்திரவர்மனுடைய உருவ மொன்று பாதி அழிந்த நிலையிலுள்ளது. அம் மண்டபத்துத் தூண்களிலே தீட்டப்பட்டுள்ள அப்ஸர ஸ்திரியின் அழியாத ஓவியம் மகேந்திரன் காலத்து ஓவிய உயர்வைக் காட்டுகிறது. மேற்படி ஓவிய வேலைகள் அவர் காலத்திலே, அவரது மேற்பார்வையிலேயே நடைபெற்றதாகவும் தெரியவருகிறது. மகேந்திரருக்கு ஓவியத்திலே உண்டான ஆசைதான் மாமல்லபுரமாக உருவெடுத்தது.

சிற்ப, ஓவிய, இசைக் கலைகளில் தன் வாழ்நாளைச் செலவழித்த மகேந்திர வர்மன் காலத்திலே பெரும் யுத்த மொன்று வந்தது. அசோகரைப்போல் யுத்தத்தை வெறுத்து, மக்களிடையே ஒற்றுமை யுணர்வையும், கலையார்வத்தையும் ஊட்டுவதிலே கவனத்தைச் செலவிட்ட இம் மன்னனல், பெரும் படைகளுடன் வந்த புலிகேசியைச் சமாளிக்க முடியவில்லை. எனினும், தனது சாதுர்ய புத்தியாலும், சாமர்த்தியத்தாலும் புலிகேசியின் எண்ணம் நிறைவேருமல் செய்தார். நாவுக்கரசரைக் கல்லோடு கட்டிக் கடலிலிட்ட மன்னர் இவரே. பிற்பாடு நாயனரின் உபதேசத்தால் சமண சமயத்தினின்றும் சைவ சமயத்துக்கு மாறினர்.



மைசூர் ராஜ்யத்திலுள்ள வேலூர் கோவிலில், கலை அழகுடனே பரதமாடும் ஒரு பெண் தெய்வம். கல்லும் களி நடனம் புரியும் இது போன்ற பல அபூர்வமான சிற்பச்செல்வங்களை இங்குகாணலாம்.

## 'மாமல்லன்'

இவருக்குப்பின் அரியணை ஏறிய நரஸிம்ஹவர்மன் பெரும் புகழ் வாய்ந்தவன். தந்தையின் மனோரதத்தை ஒருவாறு நிறைவேற்றினன். ஹெர்குலஸ்ஸிற்கும், அர்ஜுனனுக்கும், கரிகால் பெருவளனுக்கும் சமானமாக வீரத்திலே வைத்து எண்ணப்படவேண்டியவன் நரஸிம்ஹவர்மன், பெரும் வீரனயிருந்தமையாலும், அநேக மல்லர்களை வென்றமையாலும் இவனுக்குச் சிறு வயதிலேயே மாமல்லன் என்ற புகழ்ப் பெயர் கிடைத்தது. மகேந்திர வர்மர் தான் ஏற்படுத்திய துறைமுகப் பட்டினத்திற்கு 'மாமல்ல'னது பெயரையே இட்டு, என்றும் அவ் வீரனின் பெயர் உலகில் நின்று நிலவும்படிச் செய்தார்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட பல்லவ ராஜதானியிலே மாமல்லபுரம் பெருந்துறைமுகப் பட்டினமாகவிளங்கிற்று. அந்நிய தேசங்களுடன் வாணிபஞ் செய்து பெருஞ்செல்வங்களைக் கொண்டு சேர்க்கும் மரக்கலங்கள் இத்துறைமுகப் பட்டினத்திற்குச் சதா வந்துசென்றவண்ணமாயிருந்தன. பல்லவநாட்டு மக்கள் சிறந்த மாலுமிகளாகவும், பெருத்த வியாபாரிகளாகவும் இருந்தனர்.

மாமல்லன் காலத்தே வசித்த வைணவப் பெரியார் திரு. மங்கையாழ்வார், **"......கலங்களியங்கும் மல்லைக் கடல் மல்லை..."** என்று மாமல்லபுரத்தைச் சிறப்பித்துப் பாடியிருப்பதிலிருந்து அதன் பெருமை தெரிய வருகிறது.

மாமல்லன் காலத்தே வந்த பிரசித்தி பெற்ற சீன யாத்ரிகரான **ஹ்யூவான் ஸ்வாங்** பல்லவ நாட்டைப்பற்றி எழுதுகையில் காஞ்சிபுரம் பெரும் நகரமாகக் கடற்கரை வரையில் பரவியிருந்ததென்றும், அங்கிருந்து சீனத்திற்கும், சிங்களத்திற்கும் கப்பல்கள் சென்று கொண்டிருந்தனவென்றும் கூறுகிறுர்.


## இயற்கை இன்பம்

பல்லவ நாட்டிற்கே—ஏன்—தமிழகத்திற்கே பெருமையுடன் விளங்கிய மாமல்லபுரம் இன்று நூறு வீடுகளுடன் கூடிய ஒரு சிறு கிராமமாயிருக்கிறது. கடலுக்கும் பக்கிங்காம் கால்வாய்க்கும் நடுவே திகழும் இக்கிராமத்தை மலை மீதிருந்து பார்த்தால் ஒரு தீவைப்போல் தோன்றும். ஊருக்குப் போகும் வழியின் இடையேயுள்ள உப்பங் கழிக்கும், பக்கிங்காம் கால்வாய்க்கும் இன்று கட்டப்பட்டுள்ள 'முத்துரங்கம் பாலம்' (ராஜாஜியால்திறக்கப்பட்டது) கட்டப்படும் முன்பு இக்கிராமத்திற்குச் செல்வது மிகவும் கடினம். அச்சமயம் பஸ் முதலிய சாதனத் தொடர்பற்றிருந்தமையால், இவ்வளவு ஆண்டுகள் வரை இதன் புகழ் வெளியில் அதிகமாகப் பரவாமலிருந்தது. 'முத்துரங்கம் பாலம்' கட்டப்பட்ட பிறகு ஊருக்குள் போவதும் வருவதும் மிகச் சுலபமாகிவிட்டது. ஊருக்குள்ளேயே பஸ் செல்லுகிறது இப்பொழுது.

சென்னையினின்று கிளம்பும் பஸ் செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம் முதலிய ஊர்களைக் கடந்து செல்கிறது. ஓங்கி வளர்ந்த குளிர்தரு மரங்களையும், இரு புறமும் பச்சைக்கம்பளம் விரித்தது போன்ற பசும் வயல்களையும், நடுநடுவே சிறு சிறு குன்றங்களையும் கொண்ட இயற்கைக் காட்சியின் இன்ப விளையாட்டுக்கு நடுவே திகழும் சாலையில் பஸ் செல்லுகையில், பிரயாணத்தால் ஏற்படும் தொந்தரவை இயற்கையின்

(Xஆம் பக்கம் பார்க்க)


USE
K.D.K
Fans



அல்லிக் குளத்தருகில் வீசும் தென்றற் காற்றை எங்கள் வீடுகளிலோ, காரியாலயங்களிலோ, அறைகளிலோ பெற்றுச் சுவாத்தியம் பெறவேண்டும் எனில்

உலகப் பிரசித்திபெற்ற

கே. டி. கே.

மின்சார விசிறிகளைப் பாவியுங்கள்.

★ உறுதிப்பாடு ★ நீடித்தபாவனை

★ திறமையானசேவை

இவைகளுக்குக் கே. டி. கே. மின்சார விசிறிகள் உத்தரவாதம் பெற்றுள்ளன.

மேசை, கூரைப்பலகை, அடித்தம்பமுடைய மின்சார கே. டி. கே. விசிறிகள் விதம்விதமான அளவுகளிலும், கண்கவர் வர்ணங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
விலை போட்டாபோட்டி.

இலங்கையில் சோல் ஏஜன்டுகள் :

துரை அருள் & கோ லிமிட்.,

93, கெய்ஸர் வீதி, :: கொழும்பு
போன்: 4588

பரத நாட்டியம் என்று சொல்லப்படும் கலைக்கோயிலிலே அக்கலையே உருவெடுத்தாற் போன்ற பாலசரஸ்வதி தமக்கென ஒரு தனியிடம் வகுக்கும் தகுதி வாய்ந்தவர்.

# அபிநய ராணி பால சரஸ்வதி

— மாயா சஞ்சீவி ராவ் —



செல்வி மாயா சஞ்சீவிராவ் பங்களூரைச் சேர்ந்தவர். மைசூர் பல்கலைக்கழகத்தில் பி. ஏ. (Hons)பட்டம் பெற்றவர். ஜெயப்பூர் மகா ராணி காயத்திரிதேவி கல்லூரியில் தங்கிப் பேராசிரியராகப் பணியாற்றினர். 1954-ம் ஆண்டு இலங்கை வந்து கண்டி நடனம் கற்றதுடன் சித்திரசேன நடனசாலையில் கதக் கிராமிய நடனங்களைக் கற்பித்தார். இந்திய அரசினரின் உதவி பெற்று பத்மஸ்ரீ சம்பு மகாராஜிடம் கதக் நடன உயர்தரப் பயிற்சி பெற்றவர். 29 வயதான செல்வி மாயா, இப்போது டில்லியிலே பாரதீய கலா கேந்திரத்தில் நடன உதவிப் பேராசிரியராக இருந்து அரிய கலைத் தொண்டாற்றி வருகின்றார்.

புதுடில்லியிலுள்ள 'சப்ரு ஹவுஸ்' என்னும் விருந்தினர் இல்லத்தில் பாலசரஸ்வதி அவர்களின் அற்புதமான நாட்டியக் கச்சேரியை அனுபவிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. மறுநாள் காலை ஒரு பிரபல நாட்டியக் கலைஞரைக் காணப் போகின்றேன் என்ற பதட்டத்துடன், அவர் தங்கியிருந்த



விருந்தினர் இல்லத்துக்குச் சென்றேன். 'கிருஷ்ணா நீ பேகனே பாரோ' என்ற பதத்தின் நாதநயம் எனது காதுகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தது.

நான் உள்ளே சென்றபோது முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்றார். மறுகணம் தமது கச்சேரி எப்படியிருந்தது என இதமாகக் கேட்டபோது அவருடைய குழந்தை உள்ளத்தை என்னால் நன்கு உணர முடிந்தது. அவரின் தனிமையான சுபாவம் எனது பதட்டத்தை நீக்கி இதமான சூழ்நிலையை உண்டாக்கியது. நான் அவர்மீது அள்ளிச்சொரிய வேண்டுமென எண்ணிச் சென்ற பாராட்டுரைகள் எல்லாம் அவர் இன்னிசையில் ஆற்றல் இழந்தனவாகி விட்டன. எனவே, நான் எடுத்துச் சென்றிருந்த ஒரு பிரபல பத்திரிகையின் பிரதியை அவரிடம் நீட்டினேன். அதில் 'பாலசரஸ்வதியின் நாட்டியக்கலை, விமர்சனத்துக்கே அப்பாற்பட்டது. அவர் பரத நாட்டியமே உருவாகப் பெற்றவர்' என்று கண்டிருந்தது. அவர் அந்தப் பத்திரிகையின் புகழுரையைப் பார்த்துவிட்டு "இத்தகைய புகழுரையைப் பெறுவதற்கு எத்தனை ஆண்டுகள் முயன்று பயின்று சாதகம் செய்ய வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று என்னைப் பார்த்துக் கேட்டார். இப்படி அவர் கேட்டபோது பழையகால நினைவுகள் அவரின் மனத்திரையிலே தோன்றியிருக்கவேண்டும். பின்னர் தமது நளின எழில் வாய்ந்த கைகளிலேயுள்ள சில தழும்புகளைக் காட்டிக்கொண்டே 'இவை எனது பரதநாட்டியப் பயிற்சியின் வரலாற்றைக் கதை கதையாகக் கூறும்' என்றார்.

## ஒரு சம்பவம்

அத்தழும்புகளைப் பயபக்தியுடன் தடவிக்கொண்டே "என்னைப் பரதநாட்டியக் கலையிற் பக்குவம் பெறச் செய்த எனது குரு கந்தப்பிள்ளை அவர்களுக்கே இந்தப் பெருமை எல்லாம் உரியது; எனது பாட்டியாகிய வீணை தனம்மாளும் தாயாகிய ஜயம்மாளும் என்னை எனது குருவிடம் நாட்டியப்பயிற்சிக்காக ஒப்படைத்தபோது எனக்கு நான்கு வயதுதானும் இல்லை. குரு கந்தப்பிள்ளை ஒரு சிறந்த ஆசிரியரும் கலைஞருமாவார். நாட்டியத்துடன் இணைந்த அடவு, ஜதி முதலியவற்றிலேகூட ஒரு சிறிய பிழையையேனும் அவர் பொறுக்கமாட்டார் என்றால், மற்றைய விஷயங்களைப் பற்றிக் கேட்பானேன். காலசைவுகளிலும் முத்திரைகளிலும் ஒரு சிறு தவறு நேர்ந்ததற்காகத் தமது குரு தம்மைக் கடுமையாகக் கண்டித்தது பற்றிய சில சம்பவங்களைப் பால சரஸ்வதி தெரிவித்தார். நான் ஆவலுடன் கேட்கலானேன்.

"அன்றொருநாள் அழகு பொழியும் அந்திப் பொழுதில், எனது அருமைத் தோழிகள், வீட்டு முற்றத்திலே விளையாடிக்கொண்டிருந்தார்கள். உள்ளே எனது குரு நாட்டியம் பயிற்றிக் கொண்டிருந்தார். என்னை மீறியே எனது சிந்தனைகள் எனது தோழியர்களை நாடி அலைந்துகொண்டிருந்தன. இதனால் ஒரு குறித்த அடவிலே தவறுகள் நேர்ந்துவிட்டன. எனது குரு என்ன செய்தார் தெரியுமா? நாலு மணி நேரமாக ஒரு கணந்தானும் ஓய்வின்றி மீண்டும் அதனையே பயிலுமாறு பணித்தார். எனக்கோ அளவு கடந்த ஆயாசம். இதனால் ஒரு ஹஸ்தத்திற் பின்பும் தவறு நேர்ந்தது. எனது குருவினால் இதனைப் பொறுக்கவே முடியவில்லை. நீங்கள் நம்புகின்றீர்களோ, என்னவோ, அவர் சமையற் கட்டுக்குள்ளே விறுக்கென்று சென்றார். கரிந்துகொண்டிருக்கும் ஒரு தணலைக் கொண்டுவந்து எனது கைகளிலேயே வைத்துவிட்டார். எனது தாயாரும் பாட்டியாரும் நீர்மல்கும் கண்களுடன் எட்டிப்பார்த்தார்கள். அவர்களால் என்னதான் செய்ய முடியும்! ஏனெனில் நாங்கள் எல்லாம் ஒரு குருவை எங்கள் பாதுகாவலராகவும் மதிக்கின்றோம்.

இத்தகைய தண்டனைகள் அவருக்கு மனத் தளர்ச்சியை ஊட்டவில்லை. அவர் தமது குருவின் அன்பு கனிந்த ஆசியைப் பெறுவதில் ஆர்வங் கொண்டார். இவ்வாறு சொல்லிக்கொண்டே போகையில் அவர் திடீரென எழுந்தார். தாம் முன்பு கூறிய அந்த அடவினைச் செய்துகாட்டிப் பெருமிதம் பொங்கப் பின் வருமாறு கேட்டார். "இது போன்ற எழிலும் கலைத்திறனும் செறிந்த அடைவினைத் தாங்கள் எங்காவது கண்டதுண்டா? இத்தனைக்கும் எனது குருநாதர் எனக்குச் சிரத்தையுடன் அளித்த பயிற்சியே காரணமாகும். இதற்காக நான் அவருக்கு என்றும் கடைப்பாடுடையேன்."

## அரங்கேற்றம்

இவ்வாறே நாமிருவரும் அவரது பரத நாட்டியப் பயிற்சியைப் பற்றிப் பேசிக்கொண்டு வரும்போது காஞ்சீபுரம் மீனாட்சி அம்மான் கோவிலில் நடைபெற்ற அவரது நாட்டிய அரங்கேற்றம் பற்றிய நயமான செய்திகளையும் விரிவாகக் கூறினார். கலாரசிகர்கள், வித்துவான்கள், விமர்சகர்களாகியோரைக்கொண்ட ஒரு பேரவையில் அவரது அரங்கேற்றம் நடைபெற்றது. இந்த முதற் கச்சேரியின் போதே அவர் மேதா விலாசம் நன்கு வெளியாயிற்று. பரத நாட்டியத்தின் சில நுட்பமான அம்சங்களை அவர் அநாயாசமாக ஆடிச் சபையோரை வியப்பில் ஆழ்த்தினர்; தங்கப் பதக்கமும் பெற்றார். நெஞ்சைவிட்டு அகலாத இந்த அரங்கேற்றம் அவரது வெற்றிகரமான கலைவாழ்வின் உன்னத ஆரம்பமாக அமைந்துவிட்டது. அதன் பின்னர் பாரத நாட்டிலே நடைபெற்ற இசை நாட்டிய விழாக்களுக்கு எல்லாம் அழைப்புக்கள் வந்த வண்ணமாக விருந்தன. இன்று பாலசரஸ்வதி பல நூற்றுக் கணக்கான உன்னதமான கச்சேரிகளை நாட்டின் முக்கிய நகரங்களில் எல்லாம் செய்து பெரும் புகழ் நாட்டியுள்ளார்.





பாலசரஸ்வதி

## பெண்ணுக்கினிய இயல்பு

வேறு சில கலைஞர்களைப் போல, பாலசரஸ்வதி தமது கச்சேரிகள் ஈட்டிய வெற்றிகளைப் பற்றிப் பேசிக் கொள்வது குறைவு. பம்பாய் நகரில் நடைபெற்ற சில முக்கியமான நாட்டிய விழாக்களைப்பற்றி நான் அவருடன் பேசமுயன்றபோது, அவர் அந்த நாட்டியக் கலா மண்டபத்தின் அருகிலுள்ள கடைவீதியிற் காணப்படும் அழகான பொம்மைகளைப் பற்றியும் வளையல்களைப் பற்றியும் மிகுந்த ஈடுபாடுடன் பேசத் தொடங்கினார். எந்தப் பெரிய நகரத்துக்குச் சென்றாலும் அவரது கவனத்தைக் கவர்வன அங்குள்ள பலவித வளையல்களும், பொம்மைகளும், சேலைகளும், பட்சண வகைகளுமேயாம். பம்பாய், கல்கத்தா, டில்லி ஆகிய பட்டினங்களில் அவர் நாட்டியம் ஆட விரும்புவது எதற்குத் தெரியுமா? அங்கெல்லாம் அவர் தமக்குப் பிரியமான பொருள்களை வாங்கிக் கொள்வதற்கு நல்ல வாய்ப்புக்கள் உண்டு என்பதற்காகவே. பாலசரஸ்வதி ஒரு சிறந்த கலைஞர் மாத்திரமன்றி, பெண்மணிகளுக்கே உரிய இயல்புகளும் வாய்க்கப் பெற்றவர். இவ்வாறு கலாரசிகர் ஒருவர் குறிப்பிட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

பரத நாட்டியம் என்று சொல்லப்படும் கலைக்கோயிலிலே அக்கலையே உருவெடுத்தாற் போன்ற பாலசரஸ்வதி தமக்கென ஒரு தனியிடம் வகுக்கும் தகுதி வாய்ந்தவர்.

அவரை அபிநய ராணியென அபிமானிகள் அழைக்கின்றனர். இப்புகழுக்கு அவர் பரிபூரணமான தகுதி வாய்ந்தவரேயாயினும் 'நிருத்தம்' அல்லது 'நிருத்தியம்' போன்ற நாட்டிய அம்சங்களில் அவர் திறமை குறைந்தவரென எவரும் எண்ண வேண்டியதில்லை. இம்மியும் பிசகாத திறனுடனும், தமக்கே உரித்தான எழிலுடனும் அவர் புரியும் நிருத்தங்களைப் போன்று வேறு எவரிடமும் நாம் காணமுடியாது.

இவரது அதி அற்புதமான கலை நுணுக்கங்களை விதந்து பரிசளித்த அக்கடெமி பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: "பாலசரஸ்வதி தீர்மானங்களில் அடைந்துள்ள பூரணத்துவம் இன்றுவரையும் இணையற்றதாக விளங்குகிறது.

## அபிநயம் பிடித்தல்

அபிநயம் பற்றிப் பேசிக்கொண்டிருக்கையில் இந்த அம்சத்திற்கு அதிக முக்கியத்துவம் தருவது எதனால் என்று அவரைக் கேட்டேன். அதற்கு அவர், தாம் பார்த்த நாட்டிய நிகழ்ச்சிகளில் அபிநயம் பிடித்தல் ரசமற்றுத் தேங்கிவிடுவது பற்றிக் குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியதாவது: "நான் எனது நாட்டியக்கலை வாழ்வை ஆரம்பித்தபோது நட்டுவனர்கள் அபிநயம் பிடித்தல் என்ற அம்சத்தை முற்றாகப் புறக்கணித்துவிட்டு, நிருத்தத்துக்கே அதிக முக்கியத்துவம் தருவதைக் கண்டிருக்கிறேன். இதனால் நாட்டியக்கலை, நுணுக்கங்களில் மட்டும் நிபுணத்துவம் பெறுவதோடு நின்றுவிடப் பார்க்கின்றது. இவ்வாறான போக்கு நாட்டியக்கலையின் உண்மையான தன்மையைக் கைநழுவ விடுவதை ஒக்கும். இக்கலையின் உண்மையான நோக்கம் வாழ்க்கையின் பல்வேறு மனோபாவங்களை வெளியிடுவதே. இதனை உணர்ந்தே மறைந்துகொண்டு வரும் இக்கவின் கலைக்குப் புது வாழ்வும் புத்துயிரும் தர முனைந்தேன்".

**இக் கட்டுரையில் வரும்படங்கள் ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் அபிநயதோற்றங்கள்**

அபிநயத்துக்கு மறுமலர்ச்சி ஊட்டும் ஆர்வமிகுதியினால் இரவும் பகலும் உழைத்து, ஓர் உயர்ந்ததரத்தை நிலைநாட்டினார். பெரும் புகழ்வாய்ந்த இவரது பாட்டியார் வீணை தனம்மாளும், தாயார் ஜெயம்மாளும் மிகச் சிறந்தனவான பதங்களையும், ஜாவளிகளையும் இசைத்து, பாலசரஸ்வதியின் இந்தக் கலைப்பணிக்கு உறுதுணையாக இருந்தார்கள். அன்றியும், அபிநயக்கலையில் கை



வந்தவராகிய மயிலாப்பூர் கௌரிஅம்மாளுடன் இருந்து அருமையான அபிநயங்களைப் பிடிப்பதில் அதி உன்னத நிலை அடையும் வாய்ப்பினைப் பெற்றார். குச்சிப்பிடிப்பாணியில் வல்லுனராகிய வேதாந்தம் லட்சுமி நாராயணசாஸ்திரிகளிடம் இக்கலையின் உயர்நிலையான சில அம்சங்களைப் பயின்றார். இதனைக் கசடறக் கற்றறிந்தபின் தமது கச்சேரிகளில் அபிநயம் பிடிக்கும் விதத்தில் ஒரு வரையறையான முறையைப் புகுத்தியுள்ளார். இதன் பிரகாரம், பல்வேறு நாயக, நாயகி பாவங்களையும், நவரசங்களின் பல நிலைகளையும் வெளிக்கொணரும் வகையில் பத்துப் பதங்களுக்காவது அபிநயம் பிடிப்பார். பாலசரஸ்வதி தாமே ஒரு இசைக் கலைஞராகவும் விளங்குவதால், கைவழி நயனஞ்செல்லும் இக் கலையின் நாத இன்பத்தைத் தமது கானாமிர்தத்தால் உயர்த்துகின்றார்.

(IX பக்கம் பார்க்க)

# நாட்டிய உலகில் ஈட்டிய புகழ்

(VIII பக்கத் தொடர்ச்சி)

இதனால், சபையோரை இசையால் பிணிக்கும் சக்திவாய்ந்தவர் என்ற பெருமைக்கும் உரியவராகின்றார். இவரது உடல் முழுவதும் இசை ஊடுருவி வியாபித்து, அவரது அங்க அசைவுகளில் எதிரொலிக்கின்றதென மற்றொரு கலாரசிகர் கூறியுள்ளார்.

### கற்பனைக் கருவூலம்

ஒன்பது அல்லது பத்துப் பதங்களை ஒவ்வொரு கச்சேரிக்கெனத் தேர்ந்து கொண்டு போவதிலும், தமக்கு மிகவும் விருப்பமான ஒன்றிலேதான் தமது முழுத்திறனையும் வெளிக்காட்டுகின்றார். "ஸ்ரீ கிருஷ்ண நீ பேகனே பாரோ"என்ற பதமே எல்லாக் கச்சேரிகளிலும் சோபிக்கின்றது. நான் பார்த்த அவருடைய பல கச்சேரிகளிலிருந்து இதனை நேரில்தெரிந்து கொண்டேன். வளமிக்க தமது அற்புதமான கற்பனைக் கருவூலத்திலிருந்து சங்கீத சாகித்தியத்தின் அந்த ஓர் அடிக்கு அவர் தரும் பரந்த, விரிந்த வியாக்கியானங்கள் பெருவிருந்தாகும். ஒவ்வொரு கச்சேரியிலும் பதத்தின் ஒரு குறித்த கருத்துப் பாங்கினை அவரது அபிநயம் புலப்படுத்துகின்றது. நான் பார்த்த முதல் நடனத்தின் போது "கிருஷ்ண நீ பேகனே பாரோ" என்பதில் 'பாரோ' என்ற சொல்லுக்கு விரிவான விளக்கம் தந்து கொண்டிருந்ததைக் கண்டேன். பல வகை உணர்ச்சிகளை அவர் சித்திரித்துக் காட்டினார். அன்பு மகனை அழைக்கும் அருமைத் தாயின் நிலையையும், குறும்பை விரும்பி அழைக்கின்ற தோழர்களின் குறிப்பையும், விரக தாபத்தால் வெதும்பி கண்ணனின் வரவை எதிர்பார்க்கும் கோபியரின் மன நிலையையும் அவர் லாகவமாகக் கையாண்டார். ஒரு முறை அவர் அரங்கின் பக்கமாக வந்து, ஆர்வம் நிறைந்த கண்களுடன் யாரையோ எதிர்பார்த்து அழைப்பது போல் நின்ற பொழுது, சபையில் இருந்த இரண்டொருவர் எழுந்தோடிச் சென்று அவரது கரங்களைப் பிடிக்கப் புறப்படுவது போன்ற நிலையில் காட்சி தந்தனர். மற்றொரு சமயம், அதே பாடலிலுள்ள 'ஜக தோத்தாரண' என்ற சொல்லுக்கு விளக்கந் தந்தார். கண்ணன் கதையிலுள்ள பல லீலைகளை, அதிசயப்படக்கூடிய அபிநயங்களுடன் ஆடிக்காட்டினார். துச்சாதனனின் கொடுமைகளிலிருந்து தம்மைக் காப்பாற்றுமாறு பாஞ்சாலி கண்ணனை அழைக்கும்போதெல்லாம் அவர் உருக்கமாகக் கையாண்ட முறைகளானது பாடலின் கருத்தை அறிந்து கொள்ள முடியாதவர்களின் நயனங்களிலும் நீரை வருவித்தது. அவர் அரங்கிலே தோன்றி நாட்டியம் ஆடும் வேளையில் தம்மையே மறந்து கலையுடன் ஒன்றிவிடுகின்றார். அரங்கிலே தோற்றமளிக்கும் பாலசரஸ்வதி இருக்கிறாரே, அவர் புறம்பான ஒருவர். நாட்டிய அலங்காரம் செய்யும் கூட்டத்திலிருந்து தாம்பூலம் தரித்தவாறு நகைச்சுவை ததும்பப் பேசி விளையாடும்போது காட்சிதரும் பாலசரஸ்வதி வேறொருவர்.

### அரசினர் கௌரவம்

டில்லிஅரசாங்கம்அவருக்குப் பத்மபூஷண என்ற பட்டத்தை அளித்துள்ளது. அக்கடெமியும் அவரது கலைத்திறனை வியந்து பரிசு வழங்கியுள்ளது. பாலசரஸ்வதி தமக்கே உரித்தான பாணியில் தமது நாட்டியத்தை மக்களுக்கு வழங்க வேண்டுமென்பதில் அசைக்கமுடியாத நம்பிக்கைகொண்டவர். மேடை அலங்காரத்தையும்,ஒளிஅமைப்புமுறைகளையும் அவர் வெறுக்கின்றார். இந்த நவீன சாதனங்கள் தம்மைச் சபையோரிடமிருந்து பிரித்துவிடுகின்றன என்பது அவரது கவலை. வீனசாதனங்கள் அமைக்கப்பற்ற ஓர் அரங்கில் ஒரு சமயம் ஆடும்போது, தமது நாட்டியத்தை இடையிலே நிறுத்திவிட்டு, குறிப்பாகக் குவிந்துசெல்லும் வண்ண ஒளிக்கதிர்களை நீக்கிச் சாதாரண ஒளியைப் பரப்பிவிடுமாறு வெடுக்கெனக் கூறினார். ரசிகர்களின் முகபாவங்களைத் தாம் உணரமுடியாதாயின், மேடையில் தாம் ஆடமுடியாதென்றார் அவர். ஆட்டத்தை ஆரம்பிக்க முன், சில நிமிடநேரம் அரங்கிலே நின்றவண்ணம் சபையோரின்உளப்பாங்கைக்கணிப்பது அவரது வழக்கம். இக்காலத்து நாட்டிய ரமணிகள் போலன்று, பாலசரஸ்வதி எளிமையான உடையலங்காரத்தையும், புனை அலங்காரத்தையும் விரும்புகின்றார். இதனால் அவரது அங்கங்கள் சுயாதீனமாக அசைய ஏதுவாகின்றது.

### பிறரைக் கணித்தல்

பரத நாட்டியத்தின் தூய்மை இழிவு படுத்தப் படுவதை பாலசரஸ்வதி கணமேனும் பொறுக்க மாட்டார். பரத நாட்டியக் கலை ஞானமும், ஆடல் திறனும் மிக்க இவரைப் பிற கலைஞர்கள் நன்கு மதித்து வருகின்றனர். இக்காலத்துப் பரத நாட்டியக் கலைஞர்களைப் பற்றி அவரிடம் விசாரித்தபொழுது, அவர் தாம் விரும்பாத சில நிகழ்ச்சிகளைப் பற்றி ஒளிவு மறைவின்றித் தம் கருத்தைத் தெரிவித்தார். வர்ணம், தில்லானா அல்லது ஜதி ஒவ்வொன்றின் இறுதியிலும் சிலையொத்த அங்க அமைப்பு நிலையில் ஆசைப்படுவதும் இக்குறைபாடுகளில் ஒன்றாகும். சிலையொத்த நிலையைப் பின்பற்றி நிற்கும் இந் நிலையானது அங்க அசைவுகளாலும் அபிநயங்களாலும் 'ஆன கவிதையென வர்ணிக்கப்படும் நடனத்தின் அழகு மயமான தத்துவத்தைப் பழுது படுத்தி விடுகின்றது. இதனால், தில்லானாவின் போது கூட பாலசரஸ்வதி அவ்வாறு செய்வதில்லை. அவரது சகல நடன நிகழ்ச்சிகளிலும், பரத நாட்டியத்தின் அதி நுண்ணிய அம்சங்கள் அத்தனையும் பரந்து, செறிந்து வெளிப்படுகின்றன. பாலசரஸ்வதியின் நடனம் பகட்டற்றதாயும், உள்ளக் கிளர்ச்சியும் அழகுணர்ச்சியும், வாய்ந்ததாகவும் அமைந்துள்ளதென ஒரு கலாவிமர்சகர் கூறுகின்றார் இந்தப் பாணியையே தாம் நாட்டிய உலகிற் பரப்புவதென பாலசரஸ்வதி எண்ணியுள்ளார்.

### கலைக்கே அர்ப்பணம்

பரதநாட்டியத்திற்கே பாலசரஸ்வதி தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்துள்ள போதிலும், பிற நாட்டிய முறைகளின் மீது அவருக்கு எவ்வித வெறுப்பும் கிடையாது. இந்துஸ்தானி சங்கீதத்திலும், வட இந்திய நடனமான 'கதக்'கிலும் அவர் மிக்க கவர்ச்சி கொண்டவர். டில்லிக்கு ஒரு முறை அவர் வந்திருந்தபோது, ஸ்ரீ சம்பு மகாராஜ் ஒரு தும்றிக்கு (தமிழ் நாட்டில் 'பதம்' என்பதை வடநாட்டில் 'தும்றி' என்பர்) அபிநயம் பிடிப்பதைக் காண ஆசைப்பட்டார். "இந் நிகழ்ச்சியின் போது மாறி மாறித் தோன்றும் கோபிகளின் உணர்ச்சிகளான மகிழ்ச்சி, ஆசை சிதைந்த நம்பிக்கை, அவலம் போன்றனவற்றைச் ஸ்ரீ சம்பு மகாராஜ் அபிநயங்கள் மூலம் வெளிக்கொணர்ந்த அற்புத சாதனை என்னை மிகவும் கவர்ந்தது.அவரின் அருகிருந்து அவற்றையெல்லாம் கற்பது போன்ற பிரமை எனக்கேற்பட்டது." இவ்வாறு பாலசரஸ்வதி குறிப்பிட்டிருந்தார்.

சென்னையில் பாலசரஸ்வதி ஏற்பாடு செய்திருந்த ஒரு கச்சேரியில், சம்பு மகாராஜின் மருகரான பிரிஜூ மகாராஜ் என்ற 'கதக்' நாட்டியக்கலைஞர் நுட்பமான அசைவுகளைத் திறமையுடன் செய்து காட்டிய பொழுது, தமக்கு மிகவும் விருப்பமான தில்லானாவுக்கு ஏற்ப நடனமாடும்படி வேண்டினார். அவர் இசையவே பாலசரஸ்வதி அரங்கிலேறி பின்னணி இசைக் கலைஞர்களுடன் அமர்ந்து தில்லானாவைப்பாடினார். பழைமையில் ஊறித்தோய்ந்த கர்நாடக சங்கீத வித்துவான்கள் அச் செயலை அங்கீகரிக்காதவிடத்தும், பாலசரஸ்வதி அதனைச் சிறிதேனும் பொருட்படுத்தவில்லை. நாட்டியக்கலையிற் கைவந்த ஒருவர் இன்னொரு கலைஞரின் பின்னணிச் சங்கீதக் கோஷ்டியினருடன் சரிநிகராக இருந்து பாடுவது முறையற்ற செயல் என்பது அவர்களின் கோட்பாடு. ஆனால், பாலசரஸ்வதியைப் பொறுத்த மட்டில் அந்நாள் அவருக்கு ஒரு வெற்றித் திருநாளாகும். அவரது தில்லானாவுக்கு ஏற்ப ஆட்டம் அழகாக நடந்து கொண்டிருந்தது. தில்லானாவின் அழகு நுணுக்கங்களை வட இந்திய பாணியில் நிபுணத்துவம் வாய்ந்த ஒருவருடன் ஆராய்ந்தால் தான் அதன் செவ்வியை நன்கு உணரமுடியுமென பாலசரஸ்வதியின் குருநாதர் கூறிய வாசகம் அத்தருணத்தில் பாலசரஸ்வதியின் நினைவுத்திரையில் நிழலாடிற்று.

இப்பெருங்கலைஞருடன் தொடர்புள்ள இரசமான சம்பவங்கள் பல எனது நினைவை விட்டுஅகலாதவாறு நெஞ்சிலே ஆழப்பதிந்துகொண்டன. வாழ்விலும் கலையிலும் அருமையான மனோபாவங்களின் களஞ்சியமாக ஒளிரும் பரத நாட்டிய மணி பாலசரஸ்வதியைப் பற்றி அறிவது உள்ளத்துக்கு உவகையூட்டும் இதமான அனுபவமாகும்.

### வேற்றுமையில் ஒற்றுமை

"வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியா" என்ற தலைப்புடனே XIII (13-ம்) பக்கத்தில் வெளியாகியுள்ள கட்டுரையை எழுதியவர், இந்திய அரசாங்கத்தின் பிரயாண அதிகாரியாக இலங்கையில் உள்ள **திரு. எம். எஸ். ஸேத்தி** அவர்கள்.




# சிறப்பு மிக்க மதுரை

முச்சங்கத்தைத் தோற்றுவித்து முத்தமிழை வளர்த்த பொற்புடைத் தென்னவனின் புகழ்சால் மதுரையிலே இருந்தது இறுதிச் சங்கமாகும். முதலிரண்டு சங்கங்களும் முறையே தென்மதுரையிலும், கபாடபுரத்திலும் இருந்ததாகத் தமிழ் நூல்கள் கூறுகின்றன. கடல் கொந்தளிப்பிற்கு ஆளாகி நீரால் விழுங்கப்பட்ட நிலப்பரப்பினுள் அந்த மாநகரங்கள் இருந்திருக்கவேண்டும் என்பதை வரலாற்று ஆசிரியர்களும் ஓரளவு உடன்படுகின்றனர்.

வளமார் மதுரையின் எழில்சேர் மாடங்களும், கிரேக்க வீரர் காத்துநின்ற பொன் திகழும் திண்ணிய கதவங்களைக்கொண்ட அதன் பெரு வாயில்களும், 'ஆறுகிடந்தன்ன' அகன்ற அழகிய வீதிகளும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திற்கு வந்த பிறநாட்டினர், கண்டு வியந்த காட்சிகளாகும். அன்று தமிழ் தவழ்ந்த மதுரை இன்றும் தமிழ் வளர்க்கும் மதுரையாகவே இலங்குகின்றது.

வேனிற்காலத்திலே வைகை நதியின் இடைக்குறையிலேயுள்ள சோலையிலே புகுந்து ஆடவரும் மகளிரும் நீராடி மகிழ்ந்திருப்பதும், இளவேனிலில் நிலா முற்றமேறி நறுஞ்சாந்து பூசிக் களிகொள்வதும், கூதிர்காலத்திலே குறுங்கண் சாளரம் அடைத்து உறங்குவதும் போன்ற இன்பக் காட்சிகளில் இடையறாது இந்நகர மாந்தர் மூழ்கியிருந்த செய்தியைச் சிலப்பதிகாரம் சுவைபடக் கூறுகின்றது.

தென்னவன் செங்கோல் சீர்பெற்றுத் திகழ்ந்த மதுரை இன்றுவரை தன் சிறப்பை இழக்கவில்லை. இடைக்காலத்தில் அதன் ஒளி சிறிது மங்கிற்றேனும், தலைநகரம் என்ற சிறப்பை அது ஆங்கிலேயர் காலம்வரை இழக்கவில்லை. நாயக்கர் காலத்திலும் ராணி மங்கம்மாள் காலத்திலும் அந்த நகர் பெற்ற கீர்த்தி இன்றுவரை நிலைத்திருக்கின்றது. இன்று அதற்கு ஒரு நாட்டின் தலைநகரம் என்ற தனிப்பெருமை இல்லாமல் போயினும், கலையின் தலைநகராக விளங்கும் பேற்றினை அது பெற்றிருக்கிறது. தமிழகத்தின் இரண்டாவது பெரிய நகராகவும் திகழ்கின்றது. ஏறத்தாழ ஐந்து லட்சம் மக்களைக் கொண்ட அந்நகர் 5 சதுரமைல் பரப்புடையதாக இன்று உள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க மதுரையைத் தலைநகரமாகக் கொண்ட மதுரை மாவட்டம் நீர்வளம், நிலவளம்மிக்க ஒரு பகுதி. மதுரை மாவட்டத்தின் பரப்பு 3,115,718 ஏக்கராகும். இதில் உள்ள விளைநிலப் பகுதி 1,170,342 ஏக்கராகும். எஞ்சிய பகுதியில் மரங்களடர்ந்த காடுகளாக 394,145 ஏக்கர் உள்ளது.

விளைநிலப்பரப்பு 1951ஆம் ஆண்டில் இருந்ததைக்காட்டிலும் இப்பொழுது மிகுதி என்பது குறிப்பிடத்தக்கது. அன்றிருந்த பரப்பு 1,137,645 ஏக்கரே.

மதுரைமாவட்டத்தில் உள்ள கோடைக்கானல் இயற்கை அன்னையின் எழிற்கூடம்; வளமாகும் தண்ணறுஞ் சோலை. அங்கேயுள்ள அருவியும் ஏரியும் கண்களுக்கு விருந்து; கருத்துக்குக் காவியம்.

பழனிமலைபற்றிப் பகரவும் வேண்டுமோ? பன்னெடும் மைல்கள் கடந்து அப்பழமுதிர் சோலைவேலவனைக் காணவரும் பக்தர்கள் எண்ணற்றோர்.

இன்னும் திருப்பரங் குன்றம், அழகர்மலை இவற்றின் பெருமைகளுக்கும் அளவுளதோ?

(VIIஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்ப ஜாலம் மறக்கச் செய்கிறது.

### பார்க்க வேண்டியன

மாமல்லபுரத்தில் காண வேண்டியவைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ளலாம். (1) கடற்கரைக் கோயில், (2) பகீரதன் தவம்; ஐந்து ரதங்கள். (3) மலைச் சரிவிலே குடையப்பட்டுள்ள குகை மண்டபங்கள்; அங்கிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள சலிவன் குப்பம் என்ற கிராமத்திலுள்ள சிங்கக் குகையும், குகை மண்டபமும்.

# கலைப் பொக்கிஷங்களுடன் திகழும் மாமல்லபுரம்

மல்லையில் எவ்வளவு நாள் தங்கியிருந்த போதிலும், அதிகாலையிலும் மாலையிலும் கடற்கரையிலே காலத்தைச் செலவிட வேண்டும். கடற் காற்று உடம்புக்கு நல்லது. இயற்கைக் காட்சிகள் கண்ணுக்கும், கருத்துக்கும் இன்பம் தரும். காலை எட்டு மணி சுமாருக்கு, இளம் வெய்யில் படும் வேளையில், கட்டப்பட்டுள்ள படிக்கட்டுகளின்மீது உட்கார்ந்துகொண்டு பகீரதன் தவம் பாறைச் சிற்பத்தைப்பார்த்து அனுபவிக்க வேண்டும். பழைய கலங்கரை விளக்கத்திற்குக் கீழேயுள்ள மகிஷாசுர மர்த்தனி மண்டபத்தைக் காலை சுமார் பத்து மணிக்குச் சென்று பார்த்தோமானல் வெளிச்சத்தில் சிற்பங்களின் தன்மை நன்கு புலப்படும்.

மேற்குத் திக்கை நோக்கியிருக்கும் மலைச்சரிவில் குடையப்பட்டுள்ள மண்டபங்களை மாலை வேளையிலே, மூன்று மணிக்குப் பிறகு காணுவது நலம்.

### உள்ளத்தில் ஓர் அமைதி

மாமல்லபுரம் செல்லுபவர்கள் ஒரு மணி நேரமோ, அரை மணி நேரமோ தங்கிக் கண்ணோட்டமாக எல்லாச் சிற்பங்களையும் பார்த்துத் திரும்பும்படித் திட்டம் வகுத்துச் செல்வதில் ருசியிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. சிலர் சொந்தக் காரில், இவ்வூருக்கு வருகிருர்கள். நேரே கடற்கரைக் கோயிலுக்குச் சென்று பார்த்து, பிறகு ஐந்து ரதங்களைக் கண்டுவிட்டுத் திரும்பிச் சென்று விடுகிருர்கள். அவர்கள் மனதிலே மாமல்லபுரத்தைப் பார்த்து விட்டதாக எண்ணம்! இரண்டு நாட்களாவது இருந்து மாமல்லபுரச் சிற்பங்களைக் கண்டு ரசிக்க வேண்டுமே யொழிய, அரை மணியிலும் ஒரு மணியிலும் அரை குறையாகப் பார்த்துத் திரும்புவதில் பயனில்லை. கலையை அநுபவிப்பதற்காகவாவது, உல்லாசமாகப் பிரயாணம் செய்பவர்கள் ஒரு வாரம் அதிகமாகக் கூடத் தங்கலாம். திரும்பி வரும் பொழுது அவர்கள் உள்ளத்தில் அமைதி தவழும்.

['மாமல்லபுரம்' எனும் நூலிலிருந்து அனுவதிக்கப்பட்டது]

### கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ள

இயற்கை அன்னையும் செழிப்பையும் அழகையும் இலங்கையில்தான் பார்க்க வேண்டுமென்று நினைத்திருந்தேன். ஆனல், சென்ற வருடம் நான் கோடைக்கானல் சென்று பார்த்தபோது அதன் வனப்பு என்னை வசீகரித்து விட்டது. கண்டியிலுள்ள ஏரியை விட அங்குள்ள ஏரி, அழகான சூழ்நிலையில் அமைந்துள்ளது. ஓரமெல்லாம் பெரிய பெரிய "யூகிலிபிடஸ்" மரங்கள். ஏரியில் உல்லாசமாகப் படகு ஓட்டலாம். வசதியான ஓட்டல்கள். கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ள மிகவசதியான இடம்

—இலங்கையன்


# இந்தியா

## அதிசய உலகம் உங்கள் தலைவாயிலில் நிற்கின்றது!

வனப்பும், லாவண்யமும் நிறைந்த இவ்வுலகை பண்டைய சிற்பிகள் எல்லோரா, அஜந்தா, கோனராக், முதலிய இடங்களில் கல்லுருவத்தில் செதுக்கியிருக்கிருர்கள் ............... மலைகள் நிறைந்த இடங்களில் மனோரம்மியமான காட்சிகள் ....... பழம் பெரும் பொக்கிஷங்களும் மகிழ்ச்சி பொங்கித் ததும்பும் திருவிழாக்களும்... புராதன கட்டடங்கள், ஸ்தூபிகள் ........ நவ இந்தியாவின் மகோன்னதத் திட்டங்கள் ........ இவையெல்லாம் நீங்கள் பார்த்து மகிழக் காத்து நிற்கின்றன!

**இப்பொழுது இந்த 1959-ம் ஆண்டில் இந்தியா குளிர்சாதனங்களுடன்கூடிய ரயில்வே, விமானம், ஹோட்டல் முதலிய நவீன வசதிகளையெல்லாம் உங்களுக்கு அளிக்க முன்வந்துள்ளது.**

**இவற்றுக்கான கட்டணங்கள் எல்லாம் உங்கள் குடும்பச் செலவுத் திட்டத்திற்கு அமைந்தவையே!**

**உள்ளம் மகிழும் உல்லாச யாத்திரிகைக்கு நல்ல தருணம் இதுவே!**



For details write to your travel agent
or
**GOVERNMENT OF INDIA TOURIST OFFICE**
6, York Street, Fort,
Colombo.
Phone: 78805
Grams: TOURINDIA

விபரங்களுக்கு:

உங்கள் பிரயாண ஏஜன்டுக்கு அல்லது இந்திய அரசாங்க டூரிஸ்ட்காரியாலயம்,

6, யோர்க் ஸ்டிரீட், கோட்டை, கொழும்பு.

போன்: 78805 — — தந்தி: "TOUR INDIA"

# கனவில் கண்ட கற்பனைக் காட்சிகளை நேரில் பார்க்கலாம்

கே. ஏ. அப்பாஸ்

இந்தியா வந்தடையும் உல்லாசப் பிரயாணிகள் இந்தியா பற்றித் தமது கற்பனையிலே தோன்றுவன எல்லாம் உயிர் பெற்று அவை நடமாடும் ஓவியங்களாகவும் பேசும் பொற் சித்திரங்களாகவும் பொலிந்து விளங்குவதைக் கண் முன் கண்டுகளிப்பார்கள்.

## இயற்கையின் அற்புதங்கள்

ஆதிகாலந்தொட்டு இயற்கை ஆரணங்கு புகழீட்டிவரும் அற்புதங்கள், பனிக்கட்டிகள் படர்ந்திருக்கும் பாங்கான மலைச்சாரல்கள், உவகையூட்டும் உறைபனிப்படலங்கள், பண்டைக்காலப் பெருமைகளைப் படம்பிடித்துக்காட்டும் நினைவு ஸ்தம்பங்கள், கல்வெட்டுகள், சிற்ப சித்திர வேலைப்பாடுகள், கட்டட அமைப்புகள், நவநாகரிகப் பட்டினங்கள், அமைதியும் அழகும் கொஞ்சும் மண் குடிசைகள், வானமண்டலத்தை நோக்கிப் பெருமிதத்துடன் புகையைத் தள்ளும் யந்திரத் தொழிற்சாலைகள், ஆலைகள், புராதன நடன நாட்டிய நிகழ்ச்சிகளிலிருந்து எழும் சிலம்பொலிகள் இவைதாம் நீங்கள் தொடர்ந்து பார்க்கப் போகும் இந்தியக் காட்சிகளின் முன்னோட்டம்.

கலைஞருக்கு நிறைந்த கண்கவர்காட்சிகளை இந்தியா உல்லாசப் பிரயாணிகளுக்கு அள்ளி அள்ளிக் கொடுக்கின்றது.

இந்தியாவில் அவசர அவசரமாக இருபத்துநான்கு மணி நேரம் கழித்தாலும்சரி, ஆறு மாதகாலம் ஆறுதலாகத் தங்கி நின்றாலும் சரி அந் நாட்டின் பவித்திரமான காட்சிகள் மனத்திரையில் ஆனந்த நர்த்தனம் புரிந்துகொண்டே இருக்கும். பாரதத்தின் பண்பாடு, தொழில்முறை, சிற்பசித்திர சாஸ்திரம் என்பனபற்றி வெகு இலகுவில் தெரிந்து கொள்ளலாம்.

## காதற் கோவில்

இந்தியாவின் கவின்மிகு காட்சிகளிற் சிலவற்றை இனிக் கவனிப்போம். இதோ! பால் நிலவு பொழியும் பூரண சந்திரனின் தண்ணொளியில் பளபளக்கும் ஆக்ராநகரின் அழகு மாளிகை 1 **தாஜ்மஹகால்** இலட்சியக்காதலின் அழியாச் சின்னமாக விளங்கும் இக் காதற்கோவிலைத் தரிசிக்க எந்தப்பிரயாணியும் தவறுவதில்லை.

புகழ் மண்டிக்கிடக்கும் மொகலாய மன்னர்களின் இராசதானியாகிய வற்றியூர் சிக்கிரி, ரோஜாநிறநகரமாகிய ஜயிப்பூர், நந்தவனங்கள் நிறைந்த கவின்மிகு காஷ்மீரம்; அஜந்தா எல்லோராக்குகைகளின் வண்ண ஓவியங்கள், சிற்பங்கள் மகாபலிபுரத்திலும் மதுரையிலும் உள்ள பழம் பெருங் கோவில்கள் இவை போன்ற பல காட்சிகளை இந்தியாவில் நேர்முகமாகப் பார்த்து ரசிக்கலாம்.

இவைமட்டுமல்ல, அமைதியும் எளிமையும் நிலவும் கிராமியக்காட்சிகளைக் கலைக்கண்கொண்டு பார்ப்பவர்கள் நிச்சயமாகப் பரவசப்படுவார்கள். எழில் நிறைந்த இக் காட்சிகள் எல்லாம் உல்லாசப்பிரயாணிகளுக்கு கண்ணுக்கும் கருத்துக்கும் உவகைதரும் நல் விருந்தாகவேயிருக்கும். ஓர் உல்லாசப் பிரயாணி சுதந்திரச் சிட்டுப்போல் இந்தியாவைச் சுற்றிப்பார்த்தால் இவை போன்ற காட்சிகள் இன்னும் எத்தனை எத்தனையோ........

## தலைவாயிலிலே

பாரதநாட்டின் தலைவாயிலாக விளங்கும் பம்பாய் நகருக்குச் செல்லும் யாத்திரீகர்களில் எத்தனைபேர் பூனு அல்லது நாசிக் அல்லது இகற்பூரிவரை மலைத்தொடருக்கு ஊடாக மோட்டாரிற் சென்றிருக்கிறார்கள்? உற்சாகந்தரும் இப்பிரயாணத்தில் காஷ்மீரத்தை நினைவூட்டும் அழகுக் காட்சிகள் பலவற்றைக்காணலாம்.

சாலை ஓரங்களிலே பழம் பெரும் கோயில் குளங்களையும், மகாராஷ்டிரக் கிராமங்களையும், மெல்லிய இளங் காற்றில் மிதக்கும் மோகன கீதத்துக்கு அபிநயம் பிடிக்கும் நெற்கதிர்களையும், வெண்ணுரை பொங்கி வழியும் நீர்வீழ்ச்சிகளையும் வில்சன் அணைக்கட்டு வரை சென்று பார்க்கலாம். கிராமிய வளத்தை வாரிவழங்கும் இப்பகுதியை எத்தனை பேர்தான் தரிசித்தார்களோ!

## அலிகார் பல்கலைக்கழகம்


இதே பிரயாணத்தைத் தொடர்ந்து பூனுவுக்குச்சென்றால் கடாக்வாஸ்லா என்னும் இடத்திலுள்ள இந்திய இராணுவப் பயிற்சிச்சாலையையும் வேறு தொழிற்சாலைகளையும் பார்க்கலாம்.

இந்தியா செல்லுவோர் புதுடில்லியைத் தரிசியாது திரும்புவதில்லை. அங்கிருந்து அக்ரா சென்று உலக அற்புதங்களில் ஒன்றாகிய தாஜ்மஹாலைப் பார்ப்பதே பெரிய பாக்கியமாகும்.

இஸ்லாமிய பண்பாட்டின் கலங்கரைவிளக்கமாகஇந்தியாவில் திகழ்கின்றது அலிகார்ப் பல்கலைக்கழகம். அங்குள்ள பள்ளிவாசல் (மசூதி) பழமையின் பிரதிநிதிபோற் குவிந்த மாடங்களைத் தன்னகத்தே கொண்டு அழகின் இருப்பிடமாக மிளிர்கின்றது. நவநாகரிகக் கட்டடக்கலையைப் பின்பற்றி அலிகார் நகரில் அமைக்கப்பெற்றுள்ள விஞ்ஞான ஆய்கூடங்களும் எஞ்சினியரிங் கல்லூரிகளும் ஒக்ஸ்போட் பல்கலைகழகத்தை நினைவூட்டத் தவறமாட்டா.

## செங்கோட்டை

சரித்திரப் பிரசித்திவாய்ந்த புதுடில்லியின் சிறப்பே தனி. அங்குள்ள 2. **செங்கோட்டையின்** உச்சியில் பாரத மணிக்கொடி பட்டொளி வீசிப் பறப்பதை இப்போதெல்லாம் பார்க்கலாம். மாபெரும் பள்ளிவாசலாகிய 3 **ஜம்மாமஸ்ஜி** த்தையும் 4**குதுப்மினர்** என்ற கோபுரத்தையும் அவசியம் பார்க்கவேண்டும். புது டில்லியின் மத்தியிலே 5 **ஜந்தர் மந்தா** எனப்படும் பண்டைய காலத்து வானசாஸ்திர ஆராய்ச்சி நிலையமொன்றிருக்கின்றது. ஜனதிபதியின் மாளிகையாகிய இராஷ்டிரபதி பவனில் தேசியப் பொருட்காட்சிச்சாலை உளது. பாரதப் பண்பாட்டின் வரலாற்றினைக்கதை கதையாகச் சொல்லும் எத்தனையோ அபூர்வமான பொருள்களை அங்கு கண்டு பிரமியாதவர்களே இல்லையெனலாம்.



கள்ளமிலா உள்ளமுறு காதற் பண்பின்
கவினதனை விளக்கிநிற்கும் காதற் கோவில்
வெள்ளையுளம் கொண்ட பெண்ணாள் **மும்தாஸ்** தன்னின்
விருப்பினையே பூர்த்திசெய்த **ஷாஜ கானின்**
உள்ளத்தை உலகத்தில் எடுத்துச் சொல்லி
உயர்இந்திய நாடதனின் கலையின் பண்பை
தெள்ளுறவே தெரியவைக்கும் **தாஜ்ம ஹாலின்**
சீர்மிகுந்த தோற்றத்தைக் காண்போம் இங்கே.

கலாசித்திரக் காட்சிகளும், இன்னிசைக் கச்சேரிகளும், நாட்டியங்களும், கதம்ப நிகழ்ச்சிகளும் புதுடில்லி செல்லும் கலையார்வம் மிக்க உல்லாசப் பிரயாணிகளுக்கு உற்சாக மூட்டுவன என்று துணிந்து கூறிவிடலாம்.

## உயிர்ததும்பும் காட்சி

வெளிநாட்டு அன்பர் ஒருவருக்கு டில்லிமாநகரைச் சுற்றிக் காட்ட வேண்டுமாயின் அவரை நான் கடைகள் நெருக்கமாகவுள்ள பழைய டில்லிக்கு அழைத்துச் செல்லத் தவறமாட்டேன். இங்கெல்லாம் பொற் கொல்லரும், வெள்ளி நகைகள் செய்வோரும் இன்றும்தான் தலைமுறை தலைமுறையாகத் தங்கள் கலைத்தொழிலை நடாத்திவருகின்றனர். அவர்கள் செய்துமுடிக்கும் ஆபரணங்களையும் அலங்கார நகைகளையும் காணும் எந்தப் பெண்மணிதான் அவற்றை விரும்பாமல் இருக்கமுடியும்! எனது நண்பருக்கு சுவையான 'சீக்க பாப்' என்ற பதார்த்தத்தையும் 'குல்வி' எனப்படும் ஐஸ்கிறீமையும் வாங்கிக்கொடுக்க மறக்கவே மாட்டேன். இவற்றையெல்லாம் பிரமாண்டமான அந்தப் பள்ளிவாசலின் படிக்கட்டிலிருந்து சுவைத்துக் கொண்டே எதிரிலுள்ள மைதானத்தில் மந்திரவாதிகளின் ஜாலவித்தைகளையும் தந்திரங்களையும் பார்த்து இரசிக்கலாம். இவற்றைப் பார்க்க அங்கு ஒரு பெரிய கூட்டமே திரண்டுவிடும். இங்கேதான் உண்மையான இந்தியாவைப் பார்க்க முடிகின்றது. நினைவுச் சின்னங்கள் கூறும் கதைகளைப் பார்க்கிலும் மாலைநேரத்திற் காணும் இந்த உயிர் ததும்பும் காட்சிமூலம் இந்தியாவையே படம்பிடித்துவிடலாம்.

## புண்ணியதலம்

எனது நண்பர் கல்கத்தா நகரைப் பார்க்க விரும்பினல் அவர் விக்டோரியா ராணியாரின் ஞாபகார்த்த மண்டபத்தையும் வில்லியம் கோட்டையையும் பார்ப்பதுடன் வங்காளக்கிராமம் ஒன்றையும் பார்த்தேயாக வேண்டும். முற்றிவிளைந்த நெல்வயல்களும், நீண்டு வளர்ந்து நிற்கும் தென்னைகளும், வாழைத் தோட்டங்களும் ரம்மியமான காட்சியாகும்.

புண்ணியதலமாகிய **காசிமாநகரில்** கோயில்களையும் தீர்த்தக் கரைகளையும் பார்ப்பதுடன் நின்றுவிடாது அங்குள்ள பல்கலைக் கழகத்தையும் பார்க்கலாம். பனரிஸ், பட்டுச்சேலைகளுக்குப் புகழ்பெற்றது. இதனை நுட்பமாக நெய்பவர்களை அவர்கள்தமது தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது பார்ப்பது உபயோகமானவொரு பொழுதுபோக்காகும்.

லக்னோ செல்லும் பிரயாணிகள் மெல்லெனப்பாயும் கோமுதியாற்றிலே உல்லாசமாகப் படகேறிப்பவனி வரலாம்.

(XIVஆம் பக்கம் பார்க்க)

1. **தாஜ்மஹால்:** மொகலாயமன்னன் ஷாஜஹான் தமது காதலி மும்தாஸ் மஹாலின் ஞாபகார்த்தமாக ஆக்ராவில் கட்டி எழுப்பிய உலகப்புகழ்பெற்ற பளிங்கு மண்டபம். ஆக்ரா டில்லியிலிருந்து 120 மைல்தூரத்தில் உள்ளது.

2. **செங்கோட்டை:** தாஜ்மஹாலைக் கட்டிய மொகலாய மன்னனை ஷாஜஹான் இதனை 1639 இல் ஒருகோடி ரூபாய் செலவிற் கட்டினர். இதனைக் கட்ட ஒன்பது ஆண்டுகள் ஆயின.

3. **ஜம்மா மஸ்ஜித்** என்ருல் பெரிய மசூதி என்பது பொருள். ஷாஜஹான் தான் இதனையும் கட்டினர். செங்கோட்டையிலிருந்து இரண்டு பர்லாங் தூரத்தில் உள்ளது.

4. **குதுப்மினர்** டில்லியில் மிக உயர்ந்த கோபுரமாகும். மகாராஜா பிருதிவிராஜ் என்பவரால் 12ஆம் நூற்றுண்டிலே தொடங்கப்பெற்றது. இவரே டில்லியை ஆண்ட கடைசிச் சிந்து மன்னனவார்.

5. **ஜந்தர் மந்தர்** என்பது வானிலை ஆராய்ச்சிக்கூடம். இதனை ஜெய்ப்பூர் மகாராஜாவான ஜெய்சிங் 1724இல் கட்டினர்.

# சினிமாஸ் தாபனத்தார் பின்வரும் படங்களை

**விரைவில் வெளியிடுவார்கள் என்பதைப் பெருமிதத்துடன் அறிவிக்கின்றார்கள்!**

## மின்னல் வீரன்
ரஞ்சன் — சாந்தியா — வீரப்பா — டி. பி. முத்துலட்சுமி

## ஒரே வழி
ஸ்ரீரஞ்சனி — எம். என். ராஜம் — பிரேம் நஸீர் — டி. எஸ். பாலையா — எஸ். வி சுப்பையா

## அதிசயத் திருடன்
ஜெமினி கணேசன் — சாவித்திரி — தங்கவேலு — பாலையா

## மனமுள்ள மறுதாரம்
பாலாஜி — சரோஜாதேவி — சுசீலா — தங்கவேலு — முத்துலட்சுமி

## ராணி சம்யுக்தா
பத்மினி — எம். என். ராஜம் — எம். ஜி. ராமச்சந்திரன் — சகஸ்ரநாமம்

## கடன்வாங்கி கல்யாணம்
சாவித்திரி — ஜெமினி கணேசன் — ஈ. வி. சரோஜா ஜமுனா — தங்கவேலு — பாலையா

## வண்ணக்கிளி
பிரேம் நஸீர் — பி. எஸ். சரோஜா — மனோகர் — மைனாவதி — விஜயகுமாரி — எம். சரோஜா

## கல்யாணப் பரிசு
ஜெமினி கணேசன் — சரோஜாதேவி — தங்கவேலு விஜயகுமாரி — எம். சரோஜா

## ராஜா மலையசிம்மன்
ரஞ்சன் — ராஜசுலோசனா — ரஜனாலா — கே. சாரங்கபாணி — வி. ஆர். ராஜகோபால் — சௌகார் ஜானகி

## காத்தவராயன்
சிவாஜி கணேசன் — சாவித்திரி — பாலையா — எம். என். ராஜம் — கண்ணாம்பா — சந்திரபாபு

## ராஜா தேசிங்
எம். ஜி. ராமச்சந்திரன் — எஸ். எஸ். ராஜேந்திரம் — பானுமதி — பத்மினி — எம். என். ராஜம் — என்.எஸ். கிருஷ்ணன் — மதுரம்

## பெற்றமகனை விற்றஅன்னை
எஸ். எஸ். ராஜேந்திரன் — பண்டரிபாய் — மனோகர் — விஜயகுமாரி — சகாதேவன்



- ★ மிகச் சிறந்த உணவு வகைகள்
- ★ அப்பிள், முந்திரி, மற்றும் உலர்த்தப்பட்ட பழங்கள்
- ★ சிமெந்து, மற்றும் சகலவித இரும்புச் சாமான்கள்
- ★ தேயிலைப் பெட்டிகள், "ஹஸியான்" சணல்

இவைகளுக்கெல்லாம் இலங்கையின் பிரசித்திபெற்ற இறக்குமதியாளர்களாக விளங்குபவர்


# கே. எம். காளியப்பாபிள்ளை அன்ட் கோ லிமிடெட்

**263, செட்டியார் தெரு, :: கொழும்பு.**

போன்: 4161, 3913, 5852.

# வேற்றுமைகளில் ஒற்றுமை காணும் இந்தியா

**இந்தியாவிலே ஒவ்வொரு கிராமத்திலும் வேறுபாடுகள் இருக்கின்றன. ஒவ்வொரு தனி வகுப்பினருக்குமே தனிப் பழக்க வழக்கங்கள், தனி உடைகள், உணவுகள் உண்டு. ஆனல் இந்த வேறுபட்ட, மாறுபட்ட குணங்களின் வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே இந்தியாவின் சிறப்பாகும்.**



**பாரதநாட்டின் பாராளுமன்றமான, புதுடில்லியிலுள்ள லோக்சபை. இந்த மாளிகையின் நிழல் பக்கத்திலுள்ள தடாகத்தில் படிந்திருக்கும் அழகேதான் இது.**

இந்தியாவா! அது பலவித வேற்றுமைகளும், வேறுபாடுகளும், முரண்பாடுகளும் நிறைந்த ஒரு நாடு என மற்றவர்கள் கூறுவதைத்தான் நீங்கள் நிச்சயமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். பக்கத்து வீட்டுக்காரியமாயினும் சரி அல்லது மைல்களுக்கு அப்பால் உள்ள ஒரு விசித்திர சமாச்சாரமாயினும் சரி, ஏதோ திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வருவதே மனித இயல்பாகும்.

இதனுலேதான், வெளிநாடுகளில் வசிக்கும் மக்கள் இந்தியா, பல மொழிகள் பேசும் ஒரே இனத்தைக்கொண்டவொரு நாடென்றும், பசுமாடுகளையும், யானைகளையும் வளர்க்கும் தேசமெனவும் கற்பனை செய்கின்றனர் போலும்! இந்த எண்ணம் முற்று முழுக்க உண்மையானதல்ல. இப்படி அரைகுறையான உண்மைகள் இருந்துவருவதால், முழுவதும் பிழையான ஒரு கருத்திலும் பார்க்க இது மிகவும் அபாயமுள்ளதாகத் தோன்றுகின்றது.

இந்தியாவை முப்பெரும் நிலப்பகுதிகளாகப் பிரிக்கலாம். இப் பிரிவுகளிடையே பூகோள அடிப்படையில் தானும் பொதுத்தன்மை இருப்பதாகத் தெரியவில்லை.

## இமாலயப் பிரதேசம்

வடக்கே, 2,000 மைல் நீளமுள்ள மலைத்தொடர், சங்கிலி போல் நீண்டு வளைந்து செல்கின்றது. இதுதான் இமயம். இமயம் வெறும் மலைகள். நிறைந்த பிரதேசம் மாத்திரமல்ல; அன்றேல் வெறும் எல்லை மாத்திரமல்ல. அது பிரம்மாண்டமானவொரு மாநிலமாகும். இப் பிரதேசத்தில் இலங்கையைப்போன்ற பன்னிரண்டு தீவுகளைப் போட்டு வைக்கலாம்!

இந்த இமாலயப் பனிமண்டலத்தில், ஆசியாக்கண்டத்தின் குளிர்கால விளையாட்டுக்களை எல்லாம் நடாத்திமுடிக்கலாம். ஆனல், இந்த இடம், இந்தியாவின் செல்வவளத்தின் ஒருபகுதி மிகுந்துவிளங்குகின்ற ஓர் இடமாகவே இப்பொழுது இருக்கின்றது. வனச்செல்வம் நிறைந்த இவ்விடத்திலிருந்தே தேயிலை, ரப்பர் தோட்டங்களிலிருந்து பெறப்படும் பொருள்கள் உற்பத்தியாகின்றன.

இரண்டு உலகமகா யுத்தங்களில் மங்காத புகழ் ஈட்டிய கூர்க்கர்கள், கார்வாலியர், டோக்ராக்கள் போன்ற யுத்த வீரர்களின் பிறப்பிடம் இப்பகுதியேயாகும். அதுமாத்திரமல்ல, மங்கோலியரின் இனத்தைச் சேர்ந்த இம் மலைநாட்டு மக்களிற் பலர் சிறந்த கலைஞருமாவர்.

## கங்கையாற்றுப் பள்ளத்தாக்கு

இந்த இமாலய மலைத்தொடருக்குத் தென்பாகமாக உள்ளதுதான் கங்கை ஆற்றுப் பள்ளத்தாக்கு. சமஸ்கிருத நாகரிகத்தின் பிறப்பிடம் இதுவே. முக்கியமான புத்த தலங்களான கயா, சாரநாத், குஷிஞரா, லம்பினி, ஸ்ராவஸ்தி, நாளந்தா, ரஜ்ஜிர் போன்றவை இப் பகுதியிலேயே உள்ளன. இந்தப் பகுதியிலுள்ள மக்கள், இங்கேயுள்ள வேறுபட்ட **சுவாத்தியங்களைப்** போன்று மாறுபட்ட குணங்கள் கொண்டவர்களாக விளங்குகின்றனர். கிழக்கேயுள்ள மக்கள் குள்ளமாகவும், மாநிறத்தவராகவும், கலைத்திறன் படைத்தவர்களாகவும் இருக்கின்றனர். மேற்குக் கரையிலுள்ளவர்களோ உயரமானவர்களாகவும், சிவப்புநிறத்தவராகவும் இருக்கின்றனர்.

மேற்கிலே, வெய்யில்காலம் வரட்சியும் உஷ்ணமும் நிறைந்ததாக விருக்கின்றது. வெய்யில் காலத்தில் 115 டிகிரிக்கு மேலே உஷ்ணமும், குளிர் காலத்திலே உடல் விறைத்துவிடுமளவுக்குக் குளிரும் உண்டாகின்றன. ஐரோப்பிய நாடுகள் சிலவற்றைப்போலவே, இந்தியாவிலும் கம்பளிப் புடைவை பல இடங்களிலும் அத்தியாவசியத் தேவை என்று சொன்னல், ஐரோப்பியர் சிலர் இதை நம்பக்கூட மறுத்துவிடுவர்! ஆனலும், இங்கு அது பலவிடங்களில் தேவைப்படத்தான் செய்கின்றது.

## தக்கண பீடபூமி

அடுத்து, நாம் தெற்கேயுள்ள 'டெக்கான்' எனப்படும் தக்கண பீடபூமியில் இறங்கினல், பூமியின் பூர்வீக இடங்களில் ஒன்றில் இறங்கினவர்களாவோம். இப் பூமியிடம் நாம் காணும் அதே குணங்களை அதன் மக்களிடத்தும் நாம் காணமுடிகிறது. இங்கு மாற்றம் அவ்வளவுக்கு இல்லை. இங்குள்ள மக்களின் சரித்திரத்தில் துண்டுபடாதவொரு தொடர்ச்சியைக் காண்கின்ரும். இவர்கள் பொதுவாக யுத்தத்தை விரும்புவதில்லை. ஆனல், யுத்தத்துக்கு அவர்களை இழுத்துவிட்டாலோ அவர்கள் வீராவேசத்துடன் விடாப்பிடியாக யுத்தம்புரிவர். இப்பகுதி மக்களிடையேதான் மகாராட்டியர் என்னும் சிறந்த யுத்தவீரர் உள்ளனர்.

இலங்கை, பர்மா, மலாயா, மொரீசியஸ், பிஜித்தீவுகள், டிரினிடாட், பிரிட்டிஷ் கயனு முதலிய நாடுகளிலுள்ள தோட்டங்களையெல்லாம் தங்களது அயராத உழைப்பினல் வளம் பெறச் செய்த தமிழ் மக்களும் இப்பகுதியைச் சேர்ந்தவர்களேயாவர்.

## கரையோரங்களில்

நாம் கண்ட முரண்பாடுகளும், வேற்றுமைகளும் மேற்கூறிய மூன்று நிலப் பிரதேசங்களுடனும் முடிந்துவிடவில்லை. இந்தியாவுக்கு 2,000 மைல் நீளமுள்ள கடற்கரை உண்டு. நாட்டின் மத்தியிலே வாழும் மக்கள் கடலைப்பற்றிக்கனவிலும் எண்ணியிராதுவிட்டிருக்கலாம். ஆனல், கிழக்கிலும், மேற்கிலும் கரையோரங்களில் வசிக்கும் இந்தியர் 2,000 வருடங்களுக்கு மேலாக மாலுமிகளாகவும், மீன்பிடிகாரராகவும் விளங்கிவந்துள்ளனர். இன்னும் கூட, பிரிட்டிஷ் வர்த்தகக் கடற்படையில் பெரும்பாலும் இந்தியரே சேவையாற்றுகின்றனர்.

முரண்பாடுகள் வடக்குக்கும், தெற்குக்கும் இடையே காணப்படுவதுடன் கிழக்கிற்கும், மேற்கிற்கும் இடையே கூடத் தென்படுகின்றன. கிழக்கே பரந்து கிடக்கும் வங்காளமானது ஆறுகளும், குளங்களும் நிறைந்த நாடு. பிரமபுத்ராவையும், கங்கையையும் கொண்ட நாடு. செந்நெல்லும், சணலும் விளையும் நாடு. ஆனல், மேற்கிலோ வேறொரு காட்சி. அங்கு ஒரே மணல் நிறைந்த பாலைவனம். இப் பிரதேசம் தான் வீர ராஜபுத்திரரினது தாயகமாகும்.

## தென்னுட்டில்

இம்மூன்று பெரும் பகுதிகளில் மாத்திரமன்றி, சிறிய பகுதிகளிலும் முரண்பாடுகள் உள்ளன. தெற்கிலே பாருங்கள், சென்னையோ ஒரே உஷ்ணம். ஆனல், கோடைக்கானலோ வெண்பனி வீழும் குளிர்ப் பிரதேசம். அடுத்து நீலகிரியிலோ, நீல நிற மலைகள்! நீலகிரிதான், இந்திய நாட்டின் மிகப்பழைய குடியினரின் சந்ததியாரான தோடர்கள் என்போர் வாழும் இடம் என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

எப்பொழுதுமே அலைமோதிக் கொண்டிருக்கும் கடலையும், அதன் கரைகளையும் கொண்ட கிழக்குக் கரையோரத்தை விட்டு நாம் செல்ல விரும்பினல், மேற்கே, குளங்களையும், முத்துக் குளிப்போரையும், தென்னை மரங்களையும் கொண்டுள்ள மலபாருக்குச் செல்லலாம்.

நிலங்கள், **சுவாத்தியங்கள்** மாத்திரமல்ல மாறுபட்டவை. சமஸ்கிருத நாகரிகம் ஒன்றுபடுத்தினலும் ஒன்றுக்கொன்று முரண்பாடாகத்தான் விளங்குகின்றன, இந்தியாவில். வடக்கிலே, கோதுமை தான் முக்கிய உணவுப் பொருளாக விளங்குகின்றது. கிழக்கிலே, மீன் தான் அதிகம் உட்கொள்ளப் படுகின்றது. தெற்கிலோ, சோறும் புளியும் இல்லாவிட்டால் சாப்பாடே இறங்காது. கங்கை ஆற்றுப் பள்ளத்தாக்கு மக்கள் இனிப்புப் பண்டங்களில் கைதேர்ந்தவரென்றுல் (அல்லது 'வாய் தேர்ந்தவர்' களோ?), டெக்கான் பிரதேசத்து மக்களோ உறைப்பு உணவு தயாரிப்பதில் கலைத்திறமை கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

## மூன்று பருவகாலம்

பருவ காலங்களில் கூட மாறுதல்கள் உண்டென்றுல் கேட்கவும் வேண்டுமா? இந்தியாவிலே மூன்று வெவ்வேறு காலங்கள் உண்டு. உதாரணமாக, கங்கை ஆற்றுப் பள்ளத்தாக்கிலே ஏப்ரல் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரைக்கும் மிகவும் வெப்பமாகவிருக்கும்.

நெருப்பு வெய்யில் கொளுத்தித் தள்ளும், இந்நாட்களில் மரங்களும், மனிதரும் ஒருங்கே தாகத்தினல் உந்தப்பட்டுத் தண்ணீரைத் தேடுவர். ஆனலும், இந்த வெய்யிலின் மத்தியிலேயே, உஷ்ணகாலத்தின் நடுப்பகுதியிலேயே, மாற்றத்தின் முன்னறிவித்தலாகப் புழுதியும், புயலும் தோன்றும். அதைத் தொடர்ந்து குளிர் காற்று வீசும். ஆனல், இக்குளிர் எவ்வளவு சடுதியாகத் தோன்றியதோ அவ்வளவு சடுதியாக மறைந்து விடும். வெப்பம் திரும்பவும் வந்துவிடும். அதன் பின்னலே, பருவக்காற்றுக் கோரத்தாண்டவம் ஆடத் தொடங்கிவிடும். மழை பெய்யும். எங்கும் தண்ணீர் பெருகி வழிந்தோடும். இதனல் பூமி செழிப்பதுடன் நோய்க்கிருமிகளும் பல்கிப் பெருகிவிடும்.

## விழாக்காலம்

மாரிகாலம் களிப்புடன் வரும். அது மனிதனுக்கு ஆரோக்கியமும், ஓய்வும் நிறைந்த காலம். இக்காலத்தில் தான் மரங்களிலிருந்து பழங்கள் பறிக்கப்படும்; வயல்களிலே அறுவடை செய்யப்படும். மகிழ்ச்சிகரமான காரியங்களில் மக்கள் ஈடுபடும் காலமிது. சுத்தமான கந்தகத்தை எரித்து, அதனல் வீடுகளைச் சுத்தம் செய்வர். ஒக்டோபர் மாத இறுதியில், ஒளிச்சுடரின் திருவிழாவான தீபாவளியைக் கொண்டாடுவார்கள்.

இக் கட்டுரையை முடிக்க முன்னர், நாம் மனத்தில் ஒரு முக்கியமான உண்மையை நிறுத்திக் கொள்ள வேண்டும். இந்தியாவிலே ஒவ்வொரு கிராமத்திலும் வேறுபாடுகள் இருக்கின்றன. ஏன்? ஒவ்வொரு தனி வகுப்பினருக்குமே தனிப் பழக்க வழக்கங்கள், தனி உடைகள், உணவு முதலியன உண்டு. ஆனல், இந்த வேறுபட்ட, மாறுபட்ட குணங்களின் வேற்றுமையிலும் ஒற்றுமை காண்பதே இந்திய வாழ்க்கையாகும்.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்தியா பலதுறைகளிலும் துரிதமாக முன்னேறி வருகிறது. முக்கியமாகக் கிராமப்புறங்களில் திட்டமிடப்பட்ட ஆக்க வேலைகளின் காரணமாக உயிர்த்துடிப்புள்ள ஆர்வ உணர்ச்சியும், உற்சாகமும் மலிந்து காணப்படுகின்றன. சமூக விருத்தித் திட்டத்தின் கீழும், தேசிய வளர்ச்சிச் சேவைத் திட்டத்தின் கீழும் கிராமப்புறச் சூழ்நிலையே மாற்றியமைக்கப்பட்டு வருகிறது. அத்துடன் புதிய இந்தியாவின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் இத்திட்டங்கள் செயலாற்றுகின்றன.

# இலங்கையிலிருந்து செல்லும் பிரயாணிகளின் தென்னக சுற்றுப்பிரயாணம்

பாரதத்தின் தென்னகம் பல வண்ண அழகு நிறைந்த நல்லகம். இந்தியாவுக்கு விஜயம் செய்வோரைத் தன்னகத்தே ஈர்த்துக் கொள்கின்றது இத் தென்னகம். பல காலப் பண்பாடு செறிந்துள்ள பல நகரங்கள்; வனப்பிற்கும் சுகத்திற்கும் பெயர் போன பல பட்டினங்கள்; சிற்பக்கலையின் சிகரங்களாக விளங்கும் ஆலயங்கள் நிறைந்த புனித நகரங்கள்; வேட்டைப் பிரியர்களின் ஆவலைத் தூண்டிவிடும் வனங்கள்; 'போட்டோ' பிடிக்கத் துடிதுடிக்கும் மனிதர்களுக்கு வேண்டிய அளவுக்கு விலங்குகளும், பறவைகளும் — இப்படிப் பலவித சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கும் தென்னாட்டில், நவீன மின்சார, நீர்ப்பாசன விருத்தித் திட்டங்களுக்கும் சமூக நலத்திட்டங்களுக்கும் குறைவில்லையென்பதையும் இங்குக் குறிப்பிடவேண்டும்.

### இராமேஸ்வரம்

இலங்கையிலிருந்து புறப்படும் பிரயாணிகள் தமது தென்னாட்டுப் பிரயாணத்தை இராமேஸ்வரத்திலிருந்து ஆரம்பிக்கலாம். ஆதி காலம் தொட்டு இந்து யாத்திரீகர்களின் தலமாக விளங்கி வருகின்றது இராமேஸ்வரம். இங்கு வருவோரின் முக்கிய கவனத்தைத் தன்பால் ஈர்த்துக் கொள்வது ஆயிரம் தூண்களைக்கொண்டவொரு தொடர் வழியாகும்.

இராமேஸ்வரத்திலிருந்து நாம் புறப்பட்டோமாயின், முத்தமிழ் வளர்த்த மதுரைமாநகருக்கு வந்து சேர்வோம். இங்குள்ள மீனாட்சியம்மன் திருக்கோவில் பக்த கோடிகளின் ஆத்ம கோரிக்கைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் கம்பீரத் தோற்றத்துடன் காட்சியளிக்கிறது. மதுரை நகரில் நாம் பார்க்க வேண்டிய இன்னுமோர் இடம், ராஜா திருமால் நாயக்கரின் அரண்மனையாகும்.

மதுரையிலிருந்து சிறிது தூரத்திலிருப்பது கோடைக்கானல். கோடையிலே இளைப்பாற மக்கள் நாடிச் செல்லும் இடம் கோடைக்கானல். இயற்கை அன்னையின் அரவணைப்பில் அமைதியாகத் தமது விடுமுறையைக் கழிக்க விரும்புவோர்க்கு அருமையான இடம் இது.

### தஞ்சாவூர்

மகாராட்டியரின் தலைநகராக விளங்கிய தஞ்சாவூர், திருச்சியிலிருந்து கார் அல்லது ரயிலின் மூலம் இரண்டு மணி நேரப் பிரயாணம்தான். அரண்மனை நூல் நிலையமான "சரஸ்வதி மகாலில்" நூற்றுக்கணக்கான பெறுதற்கரிய புத்தகங்களும், ஓலைச்சுவடிகளும் இருக்கின்றன. "பரத நாட்டிய சாஸ்திரம்" என்னும் நூலும், வால்மீகியின் இராமாயணமும் பொன் முலாம் பூசப்பட்ட அழகான வடிவத்தில் இங்கு காணக்கிடக்கின்றன.

கண்காட்சிச் சாலை, இந்திய இசைக்கருவிகள் நிலையம், பிரகதீஸ்வர ஆலயம் போன்றவையும் தஞ்சாவூரின் சிறப்பிடங்களாகும். வெள்ளியிலும், பித்தளையிலும் சித்திர வேலைப்பாடமைந்த பொருள்கள் செய்வதில் புகழ்பெற்று விளங்குகின்றது இத்தஞ்சாவூர் நகரம். இங்கிருந்து பஸ் ஏறிச் சென்றால், கர்நாடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய தியாகராஜரின் பிறப்பிடமாகிய திருவையாற்றுக்கு அரை மணித்தியாலத்திற் சென்றுவிடலாம்.

### தென்னகத்தின் தலைநகரம்

தென்னகத்தின் தலைநகராக விளங்கும் சென்னைதான், நாம் செல்லும் அடுத்த நகரம். தென்னாட்டிலுள்ள மிகப்பெரிய நகரங்களில் சென்னையும் ஒன்றாகும். சுறுசுறுப்பு நிறைந்த இந்நகரம் ஒரு முக்கிய வர்த்தக நகரமாவதுடன் இந்தியக்கலாச்சாரத்தினதும், கலையினதும் இருப்பிடமாகவும் திகழ்கின்றது. பரத நாட்டியமும், இசையும் பலவித நாடக அரங்குகளும் இங்கு மலிந்து காணப்படுகின்றன. இவற்றை இங்குள்ள மக்கள் முற்றுமுழுக்க உய்த்துணர்ந்து இன்பம் பெறுகின்றனர். ஒவ்வொரு நாளும், சென்னையின் ஒரு பாகத்திலில்லாவிட்டாலும் இன்னொருபாகத்தில் ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும்.

### மகாபலிபுரம்

சென்னையிலிருந்து 53 மைல் தூரத்துக்கப்பால் உள்ளது மகாபலிபுரம். பல்லவ மன்னரின் காலத்தில் கலைச்செல்வமும், பொருட் செல்வமும் நிறைந்து விளங்கிய இத்துறைமுகப் பட்டினம் இப்போது ஒரு சிறிய கிராமமாகவே காட்சிதருகின்றது. ஆனால், மகாபலிபுரத்தில் இன்றும் அதன் புகழ்பெற்ற கற்சிலைகளையும், கல்லுருவங்களையும் நாம் காண முடிகிறது. கரையோரத்திலுள்ள கோவிலின் கோபுரம், அலைபாயும் ஆழ்கடலும் நீல நிற வானமும் பின்னணியாக விளங்க, ஓங்கி நின்று கண்ணுக்களிக்கும் தோற்றம், வார்த்தைகளால் சொல்லிவிட முடியாத அத்தனை அழகுத் தோற்றம்! சென்னை, மகாபலிபுரம், காஞ்சிபுரம் முதலிய இந்நகரங்களுக்கிடையில் பஸ் சேவை கிரமமாக நடைபெற்று வருகிறது. காஞ்சிபுரம் பழைய, புனித நகரங்களில் ஒன்றாகும். அங்குமிங்குமாகப் பல நூற்றுக் கணக்கான கோவில்கள் இங்கு உள. காஞ்சிபுரத்தில் பட்டுத்துணி வியாபாரமும் நடைபெறுகின்றது. இந்நகரம் பார்க்கவேண்டிய இடங்களில் ஒன்று.

ஆந்திராவின் பிரதான நகரமாக விளங்குகின்றது ஹைதராபாத் நாட்டிலுள்ள கண்காட்சிச் சாலைகளில் சிறந்தவற்றில் ஒன்றான சாலர் ஜாங் கண்காட்சிச் சாலையும், சார் மீனாரும் பார்க்கவேண்டிய இடங்கள்.

### மைசூர்

அடுத்ததாக நாம் செல்லும் இடம் மைசூர். மைசூரில் ஒரு பிரயாணி கண் குளிரக் காண வேண்டிய இடங்கள் பலவுண்டு. பேலூர், சோமநாதபுரம் போன்ற இடங்களில் கலைக்கூடங்களென விளங்கும் அழகுக் கோவில்கள் பலவற்றைப் பார்க்கலாம். ஹம்பி என்னும் இடத்தில் விஜயநகர சாம்ராச்சியத்தின் நினைவுச் சின்னங்களாக விளங்கும் பாழடைந்த—ஆனால் பெருமை வாய்ந்த—பல கட்டடங்களைக் காணலாம். துங்கபத்திரா அணைக்கட்டின் மகோன்னதத்தை, கோமதீஸ்வரரின் 57 அடி உயரமான சிலையின் சிறப்பை, கிருஷ்ணராஜசாகரில் உள்ள கவர்ச்சியை, நீர்வீழ்ச்சிகளின் குளிர்ச்சியை எல்லாம் கண்டுணர வேண்டுமானால் கட்டாயம் மைசூர் செல்ல வேண்டியது அவசியமாகின்றது. பூங்கா நகரான பங்களூரும், ராஜகோலம் பூண்டுள்ள மைசூர் நகரும் சிறப்பு வாய்ந்த நகரங்கள். மைசூரிலுள்ள சாமுந்தி மலையைச் சுற்றிலும் மின்சார விளக்குகள் ஒளியை அள்ளி வீசும்பொழுது, அம்மலை மரகதக்கற்களினால் மாலை சூடப்பட்ட பொற் சிகரமெனத் திகழ்கின்றது.

### இயற்கையின் எழில்


பங்களூர், மைசூர் இந்த நகரங்களிலிருந்து, இருமருங்கும் இயற்கை எழில் நிறைந்த வீதி வழியாக நாம் செல்வோமானால், கண்கவர் மலைகளும் குளிர் தரும் தருக்களும் நிறைந்த உதகமண்டலத்திற் போய்ச் சேர்வோம். கோடைக்கானலைப் போலவே, உதகமண்டலமும் குளிர்ச்சியானவொரு இடமானாலும், இங்கு கோடைக்கானலை விட நாகரிகம் அதிகமாகத் தென்படுகிறது. இயற்கைச் சூழ்நிலையில் ஓய்வு பெறுவதுடன், பட்டின வாசத்தையும் நுகரப் பிரியப் படுகிறவர்களுக்கு உதக மண்டலம் உகந்த இடமாகும்.

### கேரளம்

இனி நாம் தரிசிக்கவிருக்கும் இடம், கேரளமாகும். கேரளத்திலுள்ள கொச்சினை முதலிற் பார்ப்போம். இங்கு ஓர் அருமையான துறைமுகம் இருக்கின்றது. கொச்சி மக்கள் பிறரின் கவனத்தைக் கவரும் தன்மை வாய்ந்தவர்கள். நன்றாகச் செப்பனிடப்பட்ட தெருக்களும், வாய்க்கால்களும் கொச்சி நகரத்தைக் கேரள ராஜ்யத்தின் தலைநகரான திருவனந்தபுரத்துடன் இணைத்துவிடுகின்றன.

திருவனந்தபுரத்துக்குச் செல்லும் வழியில் பெரியார் ஏரிக்கரையில் இறங்கத் தவறாதீர்கள். காட்டு விலங்குகள் நாட்டிற்குக் கொண்டு வந்து மக்கக்ளுகாகக் காட்சிக்குவைக்கப்பட்டுள்ளன. இங்கு சௌகரியமான போசனசாலையும், மோட்டார் இயந்திரப் படகும் பிரயாணிகளின் வசதிகளுக்காகக் காத்து நிற்கின்றன.

யானைத் தந்தத்திலிருந்து கடைந்தெடுக்கப்படும் சிறந்த பொருள்களுக்கும், கலைத்திறனமைந்த மரவேலைப்பாடுகளுக்கும் பிரசித்தி பெற்றது திருவனந்தபுரம். திருவனந்தபுரத்திலிருந்து நாம் புறப்பட்டால் சுசீந்திரம், பத்மநாபபுரம், கன்னியாகுமரி முதலிய புனித இடங்களைத் தரிசிக்கலாம். திருவனந்தபுரத்திலிருந்து 55 மைல் தூரத்துக்கப்பால் கன்னியாகுமரி இருக்கின்றது. அங்கே மணற்கரையிலே, இருமருங்கிலும் கடல் அலைகள் புரண்டு தவழ, அழகுற வீற்றிருக்கின்றது கன்யாகுமரி. மாலையில் கடலிலே குளித்துவிட்டுச் செவ்வானத்தடியில் மறைந்து கொண்டிருக்கும் செங்கதிரோனைக் காண்போர், மறுநாட் காலையிலும் அதே இடத்திலிருந்து, பச்சையும், நீலமும் கலந்த நிறத்துடன் விளங்கும் கடல் நீரைப் பளபளவென மின்னும்படி ஒளி பரப்பிய வண்ணம் வெளிவரும் வெங்கதிரோனையும் காணலாம்.



மகாபலிபுரத்திலே பல்லவ மன்னர்கள் கற்களைக்கொண்டு சிரஞ்சீவிக் கதை சொல்லும்படி செய்வித்துள்ளனர். அர்ஜுனனின் தபஸைக் குறிக்கும் இந்தச் சிற்பம் உலகப்புகழ் பெற்றது.

## கனவில் கண்ட கற்பனைக் காட்சிகளை .....

(XIஆம் பக்கத் தொடர்ச்சி)

### தென்னகத்தில்

தென்னகத்தின் தலைநகரான சென்னை சென்று அடைபவர் அடையாற்றிலேயுள்ள பிரம்மஞான சங்கத்துக்குச் செல்வதுடன் பாரதத்தின் கலைச்செல்வங்களில் ஒன்றாகிய பரதநாட்டியத்தையும் கண்டு களிக்கத்தவறக்கூடாது.

முகில்கள் உறையும்மலைநாடுகளை விரும்புவோர் ஸ்ரீ நகர், முசூரி, நைனிதால், உதகமண்டலம் போன்ற இடங்களுக்குச் சென்று மலைகளில் ஏறி மகிழலாம். இங்கு எல்லாம் இயற்கை அன்னை பள்ளிகொள்ளுகின்றாள் என்றால் அதுமிகையாகாது.

### வனமும் விலங்கும்

காட்டு விலங்குகளை வேட்டையாட விரும்புவோருக்குப்போதிய சந்தர்ப்பங்கள் இந்தியாவில் இருக்கத்தான் செய்கின்றன. வேட்டையில் நாட்டமில்லாதவர்கள் கூட ஆசாமிலும் கேரளத்திலுமுள்ள வன விலங்குப் பாதுகாப்புப் பண்ணைகளில் பயங்கர மிருகங்களை எல்லாம் பார்க்கலாம்.

ஆண்டுகள் பலவற்றை இந்தியாவிற் கழித்தாலும் ஒருவரால் எங்கும் சென்று எதையும் பார்த்துவிடுவது இயலாத காரியம். மக்களுடன் அவர்களின் சொந்த மொழியிற் பேச முடியாதவர்கள் இந்தியாவின் உள்ளத்தை ஒரு பொழுதும் உணர்ந்து கொள்ள முடியாது. அது மாத்திரமல்ல, இந்தியாவிலுள்ள பல இடங்களையும் வாகனங்கள் மூலமும் கால் நடையாகவும் சுற்றிப் பார்ப்பவரே உண்மையான இந்தியாவைத் தேடிக் கண்டு கொள்ளுகின்றார்.

### உண்மை இந்தியா

ஆம், இந்தியாவை எங்கு காண விரும்புகின்றீர்களோ அங்கு தாராளமாகக் காணலாம். எங்கெங்கு சென்றாலும் அங்கு எல்லாம் இந்தியத்தாயின் எழில் மிக்க முகத்தையும் ஒளி வீசும் உள்ளத்தையும் காணலாம். இத்தனைக்கும் திறந்த உள்ளமும், தெளிந்த சிந்தையும், பரந்த மனப்பான்மையும் வாய்ந்த பிரயாணியும், சாதாரணக் காட்சியையும் கவர்ச்சிகரமாக்கும் கற்பனைச் செல்வம் வாய்ந்த வழிகாட்டியும் இருந்தால். அதுவே போதுமானது.

## இந்தியாவில் மதுவிலக்கு

இந்தியா அனைத்தும் படிப்படியாக மதுவிலக்கு ஏற்படுத்த வேண்டுமென்பது இந்திய அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நோக்கமாகும். 1958ஆம் வருஷ இறுதியில் இந்தியாவின் மொத்த விஸ்தீரணத்தில் 100க்கு 32 வீதமும், 100 மக்களுக்கு 42 மக்கள் வசிக்கும் பிரதேசத்திலும் மதுவிலக்குச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது.

சென்னை மாகாணத்தில் தான் நூற்றுக்கு நூறு பூரணமான மதுவிலக்கு. அடுத்தபடியாக பம்பாய், மைசூர், கேரளம். கேரளத்தில் மொத்தம் 15 ஆயிரம் சதுர மைல் பரப்பில் 8 ஆயிரத்து 6 நூறு சதுர மைல் பரப்பில் ஜனத்தொகையில் 73 சத விகிதமும் மதுவிலக்கு ஏற்பட்டுள்ளது.

# பொன்னான திருநாள்!

## இந்தியச் சுதந்திரத்தின் 12-வது ஆண்டு விழா

இன்று இந்தியா சுதந்திரமடைந்து 12 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. 12-வது சுதந்திர ஆண்டு விழாவாகிய இச்சுபவேளையிலே, இந்திய தேசாபிமானிகளின் தளராத தியாக சேவைகளால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி, இந்தியப் பெருமக்களின் பரிபூரண சந்தோஷ வாழ்க்கைக்கான நம்பிக்கைகளும், அபிலாஷைகளும் கூடிய சீக்கிரத்தில் நிறைவேற வேண்டுமென வாழ்த்துவது மிகவும் பொருத்தமாகும்.

எமது வாழ்த்துக்கள்

# குண்டன்மால்ஸ் லிமிட்டெட்

இலங்கையில்

எலேட் சூப்பலோன் ஜார்ஜட், லதா பிரிண்டெட், கிளேஸ்ட் காட்டன் பப்ளின்

இவற்றின் ஏக இறக்குமதியாளர்கள்.

114, மெயின் ஸ்டிரீட், :: கொழும்பு.

— மைலாட்ஸ் —

உயர்ந்துவரும் வாழ்க்கைச் செலவாணியைக் குறைக்க

சீனத்திலிருந்து பிரத்தியேகமான இறக்குமதிகள்!

- தகரடப்பாவில் அடைக்கப்பட்ட "பிளேயிங் வீல்" பிரான்ட் பழரசங்கள்.
- பியேர்ஸ், முந்திரி வத்தல், பீச்சஸ் "மேலிங்" பிரான்ட் பலவகை பழ ஜாம்.
- நியூஸ் பிரின்ட், லெட்ஜெர் பேப்பர், பொக்ஸ்போர்ட் முதலிய பலரகப் பேப்பர் வகைகளும் இங்கு கிடைக்கும்.

விநியோகஸ்தர்கள் :

# ஸ்ரீ லங்கா ஸ்ரோர்ஸ்

65, செட்டியார் தெரு, :: கொழும்பு

போன் : 4161, 3913, 5852

மிகச் சிறந்த
அலுமினியப்
பாத்திரங்களுக்கு
எங்களிடம் வாருங்கள்

V

# சி. வி. பாட்

டாம் வீதி, :: கொழும்பு



# பாரதநாட்டின் :: :: பொன் நாள்

இந்நன்னாளிலே எமது அன்பர், ஆதரவாளர், வியாபாரிகள் பொதுமக்கள் அனைவருக்கும் உளமார்ந்த வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றோம்

பாரத நாட்டின் பலபாகங்களிலிருந்தும் உங்களுக்குத்தேவையான கவர்ச்சியுள்ள கலையழகுமிக்க நவீன:

**சுத்தபட்டு சாரிகளில்**

காஞ்சிபுரம், மணிபுரி, பங்களூர், காஷ்மீர், பனாரஸ் — சாரிகளும்

**நூல்புடவைகள்**

டெக்கா, கோயம்புத்தூர், உறையூர், மதுரை கோடம்பாக்கம், வாயில் — சாரிகளும்.

*மற்றும் பேப்ரிக்ஸ் சில்க்ஸ்:*

சர்ட்டிங்ஸ், சூட்டிங்ஸ் ரகங்களும் அடிக்கடி தருவித்து வருகின்றோம்.


வருகை தருக

# ரஞ்சனாஸ் ஸ்டோர்ஸ்

52, பேங்ஷால் வீதி, கொழும்பு



## Air Ceylon's Summer Schedule



## NOW TO EUROPE EVERY SATURDAY

Air Ceylon flights to Europe, now leave Colombo EVERY SATURDAY AFTERNOON.

Scheduled for your comfort, this convenient departure ensures that you leave at leisure, travel in luxury in our Radar equipped Super-G Constellation and arrive at your destination by Sunday evening for a good nights rest and the whole week before you for business or pleasure.

*Once you've flown the Sapphire Service, you'll be looking forward to your next week-end with Ceylon's national airline.*



AIR CEYLON

SS. 3


## விமானசேவை நேர அட்டவணை

### கொழும்பு — யாழ்ப்பாணம் — சென்னை

(செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் தவிர, எல்லா நாட்களும்)

| ஏ. ஃ. 207 | | | | ஏ. ஃ. 208 |
|---|---|---|---|---|
| 0700 | புறப்படும் நேரம் | கொழும்பு | வரும் நேரம் | 1430 |
| 0830 | வரும் நேரம் | யாழ்ப்பாணம் | புறப்படும் நேரம் | 1300 |
| 0900 | புறப்படும் நேரம் | யாழ்ப்பாணம் | வரும் நேரம் | 1230 |
| 1030 | வரும் நேரம் | சென்னை | புறப்படும் நேரம் | 1100 |

### கொழும்பு — யாழ்ப்பாணம் — திருச்சி

(தினசரி)

| ஏ. ஃ. 209 | | | | ஏ. ஃ. 210 |
|---|---|---|---|---|
| 0930 | புறப்படும் நேரம் | கொழும்பு | வரும் நேரம் | 1600 |
| 1100 | வரும் நேரம் | யாழ்ப்பாணம் | புறப்படும் நேரம் | 1430 |
| 1130 | புறப்படும் நேரம் | யாழ்ப்பாணம் | வரும் நேரம் | 1400 |
| 1230 | வரும் நேரம் | திருச்சி | புறப்படும் நேரம் | 1300 |

### கொழும்பு—கல்ஓயா

(செவ்வாய், வெள்ளிக்கிழமைகள் தவிர எல்லா நாட்களும்)

| ஏ. ஃ. 301 | | | | ஏ. ஃ. 302 |
|---|---|---|---|---|
| 0630 | புறப்படும் நேரம் | கொழும்பு | வரும் நேரம் | 0900 |
| 0730 | வரும் நேரம் | கல்-ஓயா | புறப்படும் நேரம் | 0800 |

### கொழும்பு—கல்ஓயா—திருக்கோணமலை—யாழ்ப்பாணம்

(செவ்வாயும், வெள்ளியும்)

| ஏ. ஃ. 303 | | | | ஏ. ஃ. 304 |
|---|---|---|---|---|
| 0630 | புறப்படும் நேரம் | கொழும்பு | வரும் நேரம் | 1400 |
| 0730 | வரும் நேரம் | கல் ஓயா | புறப்படும் நேரம் | 1300 |
| 0745 | புறப்படும் நேரம் | கல் ஓயா | வரும் நேரம் | 1245 |
| 0845 | வரும்நேரம் | திருக்கோணமலை | புறப்படும் நேரம் | 1145 |
| 0900 | புறப்படும்நேரம் | திருக்கோணமலை | வரும் நேரம் | 1130 |
| 1000 | வரும் நேரம் | யாழ்ப்பாணம் | புறப்படும் நேரம் | 1030 |